விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 12 திங்கட்கிழமை (25.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 096

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# பொதுநலவாய மாநாட்டில் இலங்கை விவகாரம் இல்லை

## பொதுச் செயலாளர் திட்டவட்டம்



பொதுநலவாய நாடுகள் அமைச்சர்கள் மாநாட்டில் இலங்கை விவகாரம் குறித்துப் பேசப்படமாட்டாது எனபொதுநலவாய பொதுச் செயலர் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மாதம் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அமைச்சர்கள் மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் இலங்கை விவகாரம் பற்றி பேசும் உத்தேசம் கிடையாது எனவும் நிகழ்ச்சிநிரலில் உள்ளடக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடை பெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை, வேறு நாட்டில் நடத்துமாறு கனடா கோரி வருகின்றது.

இலங்கையில் மனிதவுரிமை நிலைமைகள் மோசமாகக் காணப்படுவதாகவும், இதனால் பொதுநலவாய நாடுகள் அமைச்சர்கள் மாநாட்டில் இந்த விடயம் குறித்து பேசப்பட வேண்டும் எனவும் கனடா வலியுறுத்தியுள்ளது.

எவ்வாறெனினும், ஏற்கெனவே திட்டமிட்டவாறு எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் (20ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பாகுபாடுகளை களைந்து உலகுடன் ஒன்றிணைவோம்!

## ஜனாதிபதி உரை



(சம்மாந்துறை)

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற இனப்பாகுபாடுகளைக் களைந்து சிறந்தவொரு சமூகமாக நாம் இந்த உலகத்துடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இந்த நாட்டிலே வாழுகின்ற அனைத்து இனங்களையும் சார்ந்தவர்கள் அவரவருடைய மதங்களையும், சம்பிரதாயங்களையும், கலாசாரங்களையும், பாரம்பரியங்களையும், தனித்துவத்துவத்தையும் பாதுகாக்கின்ற பொறுப்பு மக்களாகிய உங்களுக்கு உள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நாவின் தீர்மானத்தை குப்பைத்தொட்டியில் வீசுங்கள்; சீறுகிறார் குணதாச அமரசேகர

(கொழும்பு)

ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையின் தீர்மானத்தை ஏற்பதானது தற்கொலை செய்து கொள்வதற்குச் சமனான செயலாகும். எனவே, அந்தத் தீர்மானத்தை இலங்கை அரசு உடன் குப்பைத் தொட்டியில் போடவேண்டும் என்று சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைக்கான யோசனையை அமெரிக்கா பாதுகாப்புச் சபையில் முன்வைத்தாலும் அதை வீட்டோ அதிகாரம் கொண்ட சீனா, ரஷ்யாஆகிய நாடுகள் தோற்கடிக்கும் என்று அந்த ஒன்றியத்தின் உறுப் (19ஆம் பக்கம் பார்க்க)

# போராட்டத்தில் நடிகர் சங்கமும் குதிப்பு

(சென்னை)

இலங்கை அரசாங்கத்தைக் கண்டித்து தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில் எதிர்வரும் ஏப்ரல் 2-ம் திகதி சென்னையில் உண்ணாவிரதப் போராட்டமொன்று (20ஆம் பக்கம் பார்க்க)

# போர்க் குற்ற விசாரணையில் 16 பேர் தண்டிக்கப்படுவர்!

## முதலிடத்தில் ஜனாதிபதி என்கிறது கொழும்பு ஊடகம்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் நம்பகரமான விசாரணைகள் நடத்தப்பட்டால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் 14 படை உயரதிகாரிகள் பிரச்சினையை எதிர்கொள்ள வாய்ப்புண்டு என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இவ் ஊடகத்தில் புதுடில்லியில் இருந்து ஊடகவியலாளர் வெங்கட்நாராயண் எழுதியுள்ள கட்டுரையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது இலங்கை படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்ற சர்வதேச சமூகத்தின் கோரிக்கையை இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் நிராகரிக்கும் என்று புதுடில்லியில் பாதுகாப்பு ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஏனெனில், இவ்வாறு விசாரணை நடத்தப்பட்டால் ஜனாதிபதி (20ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழம் கோரி மாணவி தற்கொலை

(சென்னை)

இலங்கையில் இனப் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட தமிழீழ மக்களுக்கு தனிஈழம் அமைக்க கோரியும், தமிழக மாணவர்களின் போராட்டங்களை வலுப்படுத்தக்கோரியும், மாணவி ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

18 வயதான எத்திராஜ் கல்லூரி மாணவி ஆர். கௌதமிர்ராசாத்தி என்பரே தற்கொலை செய்து (20ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை பௌத்த நாடாம்!

இலங்கை ஓர் சிங்கள பௌத்த நாடு என பொது பல சேனா அமைப்பு அறிவித்துள்ளது.

இலங்கையை பல்லின பல் மத மக்கள் வாழும் நாடாகக் கருத முடியாது என அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

பாணந்துறையில் நேற்றைய தினம் நடைபெற்ற பொது பல சேனா அமைப்பின் மாநாட்டில் கலந்து கொண்ட (20ஆம் பக்கம் பார்க்க)

# சுதந்திரமான விசாரணை இன்றேல் இலங்கை மீது சர்வதேச பொறிமுறை

## றொபேர்ட் ஓ பிளேக் தெரிவிப்பு



(வாஷிங்டன்)

போர்க்கால மனிதவுரிமை மீறல்கள் குறித்து சுதந்திரமான, நம்பகத் தன்மையுடைய விசாரணையை, இலங்கை நடத்தத் தவறினால், சர்வதேச சமூகம் அங்கு ஒரு சர்வதேச பொறிமுறையை வலியுறுத்தும் என்று அமெரிக்காவின் அரசுத்துறையின் துணைச் செயலர்களில் ஒருவரான றொபேர்ட் ஓ பிளேக் கூறியுள்ளார்.

தற்போதைய ஜெனிவா தீர்மானம் ஒரு சுதந்திரமான, நம்பகத்தன்மையுடைய புலன் விசாரணை குறித்து வலியுறுத்துகிறது என்று கூறிய பிளேக், இந்த விடயத்தில் இலங்கை அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்குமென்று தாம் எதிர்பார்ப்பதாகவும், ஆனால் அப்படி அது செய்ய விரும்பாவிட்டாலோ அல்லது அதற்கு செய்ய முடியாமல்போனாலோ சர்வதேச சமூகம் ஒரு சர்வதேச பொறிமுறையை இங்கு செயற்படுத்துவது குறித்து கவனம் செலுத்தும் என்றும் குறிப்பிட்டார்.


ஆகவே ஒரு சொந்தமான, சுதந்திரமான, நம்பகத் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# தென்னிலங்கை மக்களும் நீதி கேட்டு ஐ.நாவுக்கு ஓடிவரும் நிலைவரும்!

## சீமான் முழக்கம்



(ஜெனிவா)

இன்னும் ஒருதசாப்த காலத்துக்குள் தென்னிலங்கை மக்களும் தங்களுக்கு நீதி கேட்டு ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையத்திற்கு ஓடோடி வரும் நிலை உருவாகும்.

அந்தச் சூழ்நிலையை உருவாக்க புலம்பெயர் தேசத்தில் உள்ள தமிழர்கள் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். தாய்த் தமிழகம் உங்களுக்காக எதனையும் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் முன்னால் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறியவை வருமாறு,

புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் தங்களுக்குள் உள்ள வேற்றுமைகளை, பிரிவினையை மறந்து ஒதுக்கிவிட்டு தமிழர் விடுதலைக்காக ஒன்றுசேர வேண்டும்.

நான்தான் பெரியவன், அவன் துரோகி, இவன் நல்லவன், அவன் கெட்டவன் என்றவாறு நாம் பிரிந்து நிற்பது எமது விடுதலைப் பயணத்திற்கு என்றுமே வலுச்சேர்க்கப் போவதில்லை. தமிழகத்தில் இப்போது எழுந்துள்ள உணர்ச்சிப் போராட்டம் உங்களின் பயணத்திற்கு கை கொடுக்கும்.

காட்டுக்குள் இருக்கும் செந்நாயை சிங்கம் துரத்தும், செந்நாய் பதறிக் கொண்டு ஓடும், சிங்கம் விடாமல் துரத்த, ஒரு கட்டத்தில் செந்நாய் தனது கூட்டத்திடம் செல்லும், அங்கு கூட்டமாக இருக்கும் செந்நாய்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து சிங்கத்தைத் துரத்தும், தனியாக நாம் இருக்காமல் கூட்டாக சேர்ந்து இருப்பதுதான் எமக்கு என்றும் வலிமை. இதுதான் உலக யதார்த்தம்.

நமது விடுதலையை நாமே பெற்றுக் கொள்ள வேண்டும், இன்று எமது விடுதலையை எதிர்க்கும் நாடுகள் நாளை நமது விடுதலைக்காகப் பேசச் செய்ய வேண்டும். அந்தப்பணியை நாங்கள் தமிழ்நாட்டில் செய்து கொண்டுள்ளோம்.

ஒருநாள் ஐ.நா.முன்றலில் தமிழீழத் தேசியக் கொடி பறக்கும். எழுதி வைத்திக் கொள்ளுங்கள். இது மக்களை கவர்வதற்காக பேசும் பேச்சல்ல.

இன்னும் பத்தாண்டுகளில் சிங்களவர்களும் இங்கு வந்து உரிமைக்காகப் பேச வேண்டிய நேரம் வரும். எல்லோரும் செத்து போய் விட்டீர்களே, எங்கு யார் சண்டை பிடிப்பார்கள் என்று யாரும் கேட்கலாம், எப்படிப் போடுகிறார்கள் யார் போடுகிறார்கள் என்பதை எட்டு ஆண்டுகள் பொறுத்திருந்து பாருங்கள். அப்படி ஒரு காலத்தை உருவாக்கி விட்டுத்தான் உங்கள் பிள்ளைகள் ஓய்வார்கள்.

நாங்கள் செத்தாலும் சத்தியம் வெல்லும். நாங்கள் சத்தியம் வெல்லுவோம். விடுதலை வெறி கொண்ட வேட்கை கொண்ட மக்களை எந்தச் சக்தியும் சிதைக்க முடியாது. எங்கள் அண்ணனின் வழியே பாதை. எங்கள் அண்ணியின் வழியே கீதை என்பதற்கமைய நாங்கள் செயற்பட உறுதி பூண்டுள்ளோம். இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார். (எ-8)

## இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு

(யாழ்ப்பாணம்)

யா/நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் திறனாய்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியாலய பிரதி அதிபர் க.நடராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக முன்னாள் அதிபர் கோ.பத்மநாதன், சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் தா.றெக்சியன், நெடுந்தீவு கோட்டக்கல்வி அதிகாரி க.அரசரத்தினம் ஆகியோரும், கௌரவ விருந்தினராக தீவக ஆசிரிய ஆலோசகர் கு.செல்வகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-5)


**காணி விற்பனைக்கு**

ஏ 9 வீதிக்கு அண்மையில் மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் 12 பரப்பு மேட்டுக் காணி உடன் விற்பனைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு

0776686775

(இ)


# பெருந்தொகை சம்பள நிலுவையுடன் அதிபர், ஆசிரியர்கள் கடமையில்!

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் கடமையாற்றுகின்ற பெருமளவான அதிபர், ஆசிரியர்களுக்கு நீண்டகாலமாக பெருந்தொகையிலான சம்பள நிலுவைகள் இதுவரையில் வழங்கப்படவில்லை. அதனால் பல ஆசிரியர்கள் விசனத்துடன் தமது கடமைகளை தொடரும் நிலை ஏற்பட்டுள்ளது என,இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

தாம் கடமை செய்த காலங்களுக்குரிய சம்பள நிலுவைகள் பல ஆசிரியர்களுக்கு இதுவரை வழங்கப்படாமை குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவை தொடர்பாக வலயக் கல்வி அலுவலகத்துடனும், மாகாணக் கல்வி அலுவலகத்துடனும் தொடர்பு கொண்டு கேட்ட போது அதற்கான நிதி இல்லையென்று கைவிரிக்கப்படும் நிலையில், வட மாகாண ஆளுநரிடம் முன்வைக்கப்பட்ட போதுவிரைந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

அதிபர், ஆசிரியர்கள் தாம் கடமை செய்த காலங்களுக்குரிய கொடுப்பனவுகள் பெருந்தொகையாக வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவதாகவும், பல ஆசிரியர்களுக்கு பல லட்சம் ரூபாய்கொடுப்பனவு நிலுவைகளாகவுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படும் அதே வேளை வலயக்கல்விப் பணிமனைகளில் இதுவரை அதற்குச் சாதகமான பதில்கள் எவையும் வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆளுநர் வழங்கிய உறுதிமொழிக்கு அமைவாக இம்மாத இறுதிக்குள் அவை வழங்கப்படாத நிலையில் ஒருநாள் சுகவீனப் போராட்டத்தினை நடத்தி கவனயீர்ப்பை வெளிப்படுத்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முடிபெடுத்துள்ளது.

தவிர அதிபர், ஆசிரியர்கள் அவசியத் தேவைக்காக இடருதவிக் கடனுக்கு விண்ணப்பித்து இன்று வரை சீராக உரிய காலங்களில் வழங்கப்படாமலிருப்பதும் காலம்கடந்து ஏன் இறந்த பின்னரும் அவை கிடைப்பதும் சர்வசாதாரணமாகிவிட்டது. இவையெல்லாம் அதிபர், ஆசிரியர்களின் மனங்களில் பெருந்தாக்கங்களை உண்டு பண்ணுவதால் சுகவீன கவனயீர்ப்புப் போராட்டத்தினை வெளிப்படுத்தி வட மாகாண கல்வி அமைச்சுக்கு அழுத்தங்களைக் கொடுக்க முடிபெடுக்கப்பட்டுள்ளது.

அதற்காக நாளை 26-ம் திகதி அன்று நிலுவைகள் உள்ள வடமாகாணம் சார்ந்த அனைத்து அதிபர், ஆசிரியர்களும், அவசர தேவைகருதி இடர் உதவிக் கடனுக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களும் கோவைகள் சீர்செய்யப்படாத ஆசிரியர்களும் அதற்கான ஆதாரங்களுடன், நல்லூர் செம்மணி வீதியில் உள்ள மாகாணக் கல்வி அமைச்சுக் காரியாலயத்திற்கு முன்பாக காலை 10 மணிக்கு ஒன்றுகூடுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் துணைநிதிச் செயலாளர் க.தேவதாசன் அழைப்பு விடுத்துள்ளார். (எ)

# திருட்டு போன விக்கிரகங்கள் பொலிஸாரினால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

தாவடி தெற்கு, அம்பலவாணர் கந்தசாமி கோவிலில் திருட்டுப் போன 2 ஐம்பொன்னிலான முருகன், வள்ளி தெய்வானை விக்கிரகங்கள் புதைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரினால் மீட்கப்பட்டதோடு இருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

யாழ்.தாவடி முருகன் கோவிலிலிருந்து கடந்த 20ஆம் திகதி புதன் கிழமை இரவு இந்த ஐம்பொன் சிலைகள் மூன்று திருட்டுப் போயிருந்தன.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, கடந்த 20 ஆம் திகதி இரவு ஆலயத்தின் மணிக்கோபுர கதவினை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் ஆலய முன்பக்க மண்டபத்தில் பூட்டிவைக்கப்பட்டிருந்த தெய்வ விக்கிரங்களை, கதவுப் பூட்டினை உடைத்து திருடியதாக ஆலய நிர்வாகத்தினால் சுன்னாகம் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இம் முறைப்பாட்டினையடுத்துசுன்னாகம் பொலிஸ்நிலையபொறுப்பதிகாரிதுஸ்மந்ததலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

பொலிஸார் மேற்கொண்டதீவிர புலன் விசாரணைகளைத் தொடர்ந்து தாவடிபிரதேசத்தில் இருந்து ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் வழங்கிய தகவல்களின் பிரகாரம் அவர் வசிக்கின்ற ஆனைக்கோட்டை பிரதேசத்தில் அவரது வீட்டிற்கு [illegible] புறம் விறகு குவியலிற்கு அடியில் இருந்து கொழும்பு பிரதேசத்திற்கு கொண்டு செல்வதற்கு தயாராக இருந்த நிலையில் தெய்வ விக்கிரகங்கள் மீட்கப்பட்டன. இந்தச் சம்பவத்தோடு தொடர்புடைய மேலும் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

மேற்படி விக்கிரங்களை மீட்கும் பணியில் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஸ்மந்த தலைமையில் பொலிஸ் சாயன்ட் களான தமயந்த, விக்கிரரட்ண, ஆகியோருடன் பொலிஸ் கொஸ்தாவல்கள் தென்னக்கோன், சமந்த, கோபிகிருஸ்ணா, மயூரன், சத்துரங்க ஆகியோர் அடங்கிய பொலிஸ் அணியினர் ஈடுபட்டிருந்தனர்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் 25.03.2013 இன்று மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர். (எ-6)





**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலையில் சிற்றூழியராக கடமையாற்றிய
**மு. இலட்சுமணன்**
(ஓய்வு பெற்ற ஊழியர் யாழ்.மாநகரசபை)
அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/பரமேஸ்வரா வித்தியாலயம், திருநெல்வேலி.



(இ)

**பிள்ளையார் இன்**

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன்
தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில்
நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-
தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
மசாலா தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

(அ-2595) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

**பெயர் மாற்றம்**

தில்லைநாதன் மலர்தேவி ஆகிய நான் 25.03.2013 இலிருந்து எனது பெயரை தில்லைநாதன் மஹதி என மாற்றுவதை இத்தால் சகலருக்கும் தெரிவிப்பதோடு இனிவரும் காலங்களில் எல்லா ஆவணங்களிலும் தில்லைநாதன் மஹதி என கையொப்பம் இடுவேன் என்பதையும் அறியத் தருகிறேன். (2231)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அத்வைதம்

ஒரு ஊரிலே முனிவர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரு சிஷ்யர் இருந்தார்.

ஒரு சமயம் அந்த முனிவர் வெளியே எங்கேயோ கிளம்பிப் போனார். மீண்டும் ஆயிரம் வருடங்கள் கடந்த நிலையில் திரும்பி வந்தார்.

அது எப்படி ஆயிரம் வருடங்கள் கடந்த நிலை... என்று கேட்கக் கூடாது. முனிவர்களுக்கு எல்லாம் இது சகஜம்.

ஆயிரம் வருடங்கள் கடந்த நிலையில் அவர் திரும்பி வந்ததனால் சிஷ்யருக்கு தனது குருவை அடையாளம் தெரியவில்லை. இருந்தாலும் கண்டுபிடிக்க முடியவில்லை. யாரோ ஒரு பெரிய முனிவர் வந்திருக்கிறார் என்று நினைத்தார்.

"பசிக்கிறது... சாப்பாடு போடு" என்று முனிவர் கூறினார்.

உடனே அந்த சிஷ்யர் மனைவியிடம் பக்குவமாகக் கூறி, சாப்பாடு போட்டார். அவரும் சாப்பிட்டு முடித்தார்.

"என்ன... திருப்தியாக சாப்பிட்டீர்களா?" என்று கேட்டார் சிஷ்யர்.

உடனே முனிவர் நிமிர்ந்து பார்த்து, "நான் எங்கே சாப்பிட்டேன்? எவனுக்குப் பசியோ அவன்தான் சாப்பிடுவான். அவனுக்குத் தானே திருப்தி ஏற்படும்" என்றார்.

சிஷ்யருக்கோ எதுவுமே புரியவில்லை; அமைதியாக நின்றார்.

பரிதாபமாக முனிவரைப் பார்த்தார்; அதன்பின் முனிவர் சொன்னார்; "இப்போது சாப்பிட்டது நான் இல்லை" எனது தேகம்... அதனாலே தேகத்திற்குத்தான் திருப்தியோ அதிருப்தியோ ஏற்படும். நான் ஆன்மா. எனக்கு அதிலே திருப்தியோ அதிருப்தியோ இல்லை" என்றார் முனிவர்.

இதைக்கேட்டதும் அந்த சிஷ்யருக்கு இதுதான் நம்முடைய குரு என்பது ஞாபகத்திற்கு வந்தது. அவரது காலிலே விழுந்து வணங்கினார்.

அதன்பின் அந்த முனிவர் வெளியே சென்று விட்டு ஆயிரம் வருடங்கள் கடந்த நிலையில் மீண்டும் திரும்பி வந்தார்.

அவர் திரும்பி ஊருக்குள் வந்து கொண்டிருக்கையில், அந்தச் சிஷ்யர் ஏதோ ஒரு மூட்டையை தலையிலே வைத்துக் கொண்டு தெருவோரமாக நின்று கொண்டிருந்தார். முனிவர் இதைப் பார்த்து விட்டு, "ஏன் இப்படி தெருவோரமாக ஒதுங்கி நிற்கி றீர்கள்" என்று கேட்டார்.

"ராஜா யானை மேலே அமர்ந்திருந்து பவனி வந்து கொண்டிருக்கிறார். அந்த வேடிக்கையைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் சிஷ்யர்.

இதிலே யார் ராஜா? எது யானை? என்று கேட்டார்.

சீடர் ஆச்சரியத்துடன் முனிவரைப் பார்த்து விளக்கம் கொடுத்தார்.

"அதாவது மேலே இருக்கிறவர்தான் ராஜா... கீழே இருக்கிறது யானை" என்றார்.

"அது சரி... "மேலே" என்று சொல்வது, என்றால் என்ன? "கீழே" என்று சொல்வது என்றால் என்ன? என்று முனிவர் கேட்டார்.

உடனே இவர் என்ன செய்தார் தெரியுமா?

அப்படியே ஒரே தாவாத்தாவி அந்த முனிவரின் தோளின் மேலே அமர்ந்து கொண்டார்.

அமர்ந்து கொண்ட அவர்; "மேலே", "கீழே" என்றால் என்ன என்று தானே கேட்டீர்கள்?" இதோ நான் மேலே இருக்கிறேன். நீங்கள் கீழே இருக்கிறீர்கள்- என்றார்.

முனிவர் அவரை விட்டு வைக்கவில்லை. அடுத்த கேள்வியைத் தொடுத்தார்.

"அது சரி! நான் "மேலே" நீ "கீழே" என்று சொல்லுகிறாய். நான் யார்? நீ யார்?" என்றார்.

அப்போதுதான் இவருக்கு, தன்னுடைய குரு என்பது தெரிந்தது. உடனே காலிலே விழுந்து வணங்கினார்.

அத்வைதம் என்றால் என்ன என்பதை விளக்குவதற்காக ஜகடபாதர் அரசர் ரகுகுணனுக்கு எடுத்துக்கூறிய கதை இது.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# எங்களை நாங்கள் ஆளுகின்ற ஆட்சிமுறை எங்களுக்கு வேண்டும்

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

எங்களை யாரும் அடக்கி ஆளாத வகையிலே எங்களை நாங்களே ஆளுகின்ற ஆட்சிமுறை எங்களுடைய தாயக மண்ணிலே மலர வேண்டும். இதற்காக நாம் தொடர்ந்தும் கொள்கைப்பற்றுடன் ஜனநாயக வழியில் போராடுவோம் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கல்மடுநகர் அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கு சப்பாத்துக்கள் வழங்கி வைத்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும்குறிப்பிடுகையில்,

பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளைச் சுட்டிக்காட்டி மக்களின் உரிமை மறுப்புக்களை வெளிக் கொணர்ந்து அவர்களை உரிமையோடு வாழ்வதற்காக ஜனநாயக வழிகளில் குரல் கொடுப்பது ,மக்களுக்கு உதவநினைப்பது இந்த நாட்டில் குற்றமாகவோ கருத்துப்படும்.

நாமும் இந்த நாட்டுப் பிரஜைகள்தான். இந்த நாட்டு சட்டதிட்டங்களை மதிப்பவர்கள்தான் என்ற வகையிலும் எமது மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற வகையிலும் எமது மக்களுக்கு இழைக்கப்படும் உரிமை மறுப்புக்கள் குறித்தும் சட்ட விரோத நடவடிக்கைகள் குறித்தும் எமது மக்களின் அவல வாழ்க்கை மாற வேண்டும் என்பதற்காக கதைப்பதற்கு, சுட்டிக்காட்டுவதற்கு ஏற்ற தீர்வுத் திட்டத்தை வழங்குமாறு கோருவதற்கு எமக்கும் உரிமையுண்டு.

ஆனால், எமது மக்களின் உரிமை மறுப்புக்கள் , அவலநிலைகள் குறித்து நாம் சுட்டிக்காட்டி மக்களுக்காகக் கதைத்தால் நாம் குற்றவாளிகள். எம்மீது அபாண்டமான குற்றங்கள் சுமத்தப்படும் . எம்முடன் கூட இருந்து செயற்படுபவர்களை கைது செய்து எமது செயற்பாடுகளை முடக்க முயல்கின்றார்கள்.

எந்த நிலையிலும் நாங்கள் உங்களுடன் கூட இருந்து உங்களுக்காகக் குரல் கொடுத்து மக்களுக்கான உதவிகளைச் செய்வோம். மாணவச் சிறார்களாகிய நீங்கள் நன்றாகக் கல்வி கற்று கல்வியில் முன்னுக்கு வரவேண்டும் என்பதே எமது எல்லோருடைய எதிர்பார்ப்புக்களும் ஆகும்.

இதற்கு பெற்றோர்களாகிய நீங்களும் உண்மை நிலையைப்புரிந்துகொண்டு உங்களுடைய பிள்ளைகளில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

எங்களுடைய தாயகமண்ணிலே எங்ளுக்கான சகல உரிமைகளையும் பெற்று எமது தாயகம், தேசியம், சுய நிர்ணயம் என்ற அடிப்படையில் எமது உரிமைகள் அனைத்தும் அங்கீகரிக்கப்பட்ட வகையிலே எங்களை யாரும் அடக்கி ஆளாத வகையிலும் எங்களை நாங்களே ஆளுகின்ற ஆட்சிமுறை எங்களுடைய மண்ணில் எங்களுக் கும் வேண்டும் என்றார். (அ-2)

# மின்சார விநியோகம் தடைப்படும்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும் புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் நாளை செவ்வாய்க்கிழமையும் மறுநாள் புதன்கிழமையும் முற்பகல் 8.30 மணிமுதல் பிற்பகல் 5 மணி வரை குறித்த பகுதிகளில் மின்வெட்டு அமுலில் இருக்குமென யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி நாளை செவ்வாய்க்கிழமை குஞ்சர்கடையின் ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி , வல்வெட்டி, வல்வெட்டித்துறை தொண்டைமானாறு, உடுப்பிட்டி ,சங்கரத்தை , அராலி தெற்கு, வடக்கு, கிழக்கு, மத்தி, யாழ்ப்பாணக்கல்லூரி பிரதேசம், வட்டு பொலிஸ் நிலைய பகுதி, பளை, விடதற்பளை, கெற்பலி, மிருசுவில், உசன், வரணி, கொடிகாமம், மீசாலை, அல்லாரை ஆகிய இடங்களிலும்மறுநாள் புதன்கிழமை மாலுச்சந்திமுதல் இரும்பு மதவடி மடத்தடி வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | .70 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 120 | 120 |
| தக்காளி | 60 | 60 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 |
| கோ்வா | 40 | 40 | 60 | 60 |
| கரட் | 10 | 100 | 120 | 100 |
| பூசணி | 50 | 40 | 50 | 60 |
| புடோல் | 50 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 40 | 40-80 | 80-100 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 100 | 80 |
| பாகற்காய் | 140 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | -- | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 80 | 120 |
| லீக்ஸ் | 120 | 110 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 60 | 100 | 100 |
| கறிமிளகாய் | 120 | 110 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 600 | 600 |
| போஞ்சி | 100 | 120 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 50 | 80 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 40 | 60 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 45 | 40-415 |
| இராசவள்ளி | 100 | [illegible] | 120 | 90 |
| வெங்காயப்பூ | 160 | 180 | 150 | 160 |

## இராசி பலன்

25.03.2013
(பங்குனி 12, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.13 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 5.04 மணிவரை
மகம் முற்பகல் 10.21 மணிவரை
இராகுகாலம் 7.45-9.15 மணிவரை
சுபநேரம் 12.15-1.45 மணிவரை
இரண்டாம் பங்குனி திங்கள்

**மேடம்** வருங்கால நலன் கருதி சேமித்து வைக்க நினைப்பீர்கள், சுயமுயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், அம்பிகை வழிபாடு ஆனந்தம் தரும், சுபகாரியப் பேச்சுக்கள முன்னேற்றமாக அமையும்.

**இடபம்** சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், சகோதர ஒற்றமை பலப்படும், கூட்டு முயற்சி வெற்றியளிக்கும்,அறிஞர்கள் சந்திப்புண்டு, புதிய பொருட்சேர்க்கையுண்டு, கௌரவமான நாள்.

**கடகம்** தொலைதூரச் செய்திகள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், வருமானம் திருப்திதரும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**சிங்கம்** அம்பிகை வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் அதிகரிக்கும், கற்பனை மிகுதியான நாள், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணை புரிவர்.

**கன்னி** வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்து செல்வதன்மூலம் மகிழ்ச்சி கூடும், சயன சுகக் குறைவான நாள், அடுத்தடுத்த செலவுகள் ஏற்படலாம்.

**துலாம்** செல்வநிலை உயரும் நாள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் நிறைவேறலாம், அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்க்ள் கூடும் நாள்.

**விருச்சிகம்** விருந்தினர் வருகையுண்டு. பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், அந்நியர் உதவியுண்டு, முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும்.

**தனுசு** வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவ செலவு குறைந்து மன நிம்மதி கொடுக்கும் சாதுரியமாக பேசி காரியம் சாதிப்பீர்கள், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு.

**மகரம்** எந்தக் காரியத்தையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், கௌரவக் குறைவான சம்பவங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**மீனம்** நிர்வாகத் திறமைகள் வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கியம் சீராகும், கற்பனைகள் மிகுதியாகும், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு பங்குச்சந்தைக் கொடுக்கல் வாங்கல்களில்

# கடந்த இரு மாதங்களில்

# சிறந்த பெறுபேறு கடந்த வாரம் பதிவு

கொழும்பு பங்குச்சந்தை கொடுக்கல் வாங்கல்களை பொறுத்தமட்டில், கடந்த இரண்டு வாரங்களில் பதிவாகியிருந்த அதிசிறந்த பெறுபேறுகளை கடந்த வாரம் பதிவு செய்திருந்தது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஆர்வம் தொடர்ச்சியாக கடந்த வாரமும் பங்குச்சந்தை கொடுக்கல் வாங்கல்களில் ஆதிக்கம் செலுத்தியிருந்தது.

சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்த்திருந்த ஜெனிவா பிரேரணை தொடர்பான தீர்மானம் கடந்த வாரம் வெளியாகியிருந்த போதிலும், இந்த முடிபு பங்குச் சந்தை கொடுக்கல் வாங்கல்களில் எவ்வித மான பாதிப்பையும் ஏற்படுத்தியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த வார கொடுக்கல் வாங்கல்களை பொறுத்தமட்டில் வங்கிகளின் பங்குகள் மீது அதிகளவு ஆர்வம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தை நடவடிக்கை நிறைவடையும் பொழுது, அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 5,768.88 ஆகவும், எஸ் அண்ட்பி ஸ்ரீலங்கா 20 சுட்டி 3312.71 ஆகவும் அமைந்திருந்தன.

மார்ச் 18ஆம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்குப் புரள்வு பெறுமதியாக ரூ. 3,525,687,174 அமைந்திருந்தது. கடந்த வாரம் மொத்தமாக 32,395 பங்கு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன. இதில் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 22,281 ஆகவும், வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் 1,114 ஆகவும் பதிவாகியிருந்தன.

கடந்த வார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் டேடர்ன்ஸ் (சாதாரண), பைரஹாஃ பார்ம்ஸ், செரண்டிப்என்ஜி குரூப், அஸ் கொட் ஹோல்டிங்ஸ் மற்றும் லேக் ஹவுஸ் பிரின்டிங் போன்றன முதல் ஐந்து சிறந்த இலாப மீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகியிருந்தன.

சுவதேஷி, சிலோன் லெதர் (உரிமைப்பங்குகள்), கலாமசூ, ஆசிரி சேர்ஜி மற்றும் எஸ் எம் பி லீசிங் போன்ற நிறுவனங்களின் பங்குகள் அதிகளவு நஷ்ட மீட்டியதாக பதிவாகியிருந்தன.




## ஆணைக்குழு பணிப்பாளர் இராஜினாமா



பிணைகள் மற்றும் பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஹரிந்திர திஸ்ஸபண்டார தனது இராஜினாமாக் கடிதத்தை கடந்த வெள்ளிக்கிழமை கையளித்துள்ளார்.

இவரின் பதவி விலகல் நாளை மறுதினம் 27 திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது.

இதேவேளை இதற்கு முன்னர் இப்பதவியை வகித்த திலக் கருணாரட்ணவும் பதவியை ராஜினாமா செய்திருந்தார்.

அப்போது, அதிகார வர்க்கத்தின் முறையற்ற அழுத்தம் காரணமாக தன்னால் சுதந்திரமாக செயற்பட முடியவில்லை எனக் குற்றம் சாட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய சேமிப்பு வங்கிக்கு அகவை 41

ஒன்றரை நூற்றாண்டு கால செழிப்பான வரலாற்றைக் கொண்டிருந்தாலும், 1972ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் திகதியே தேசிய சேமிப்பு வங்கி சம்பிரதாயபூர்வமாக ஸ்தாபிக்கப்பட்டது.

இன்று 4 தசாப்தங்களுக்குள் ஒரு சக்திமிக்க நிறுவனமாக விருத்தியடைந்ததுடன், எமது நாட்டின் நிதித் ஸ்திரத்தன்மையையும் பொருளாதார அபிவிருத்தியையும் ஏற்படுத்திய முக்கிய ஸ்தாபனங்களுள் ஒன்றாகவும் அது விளங்குகிறது.

அப்போதைய நிதி அமைச்சர் கலாநிதி எம்.என்.பெரேரா நாடாளுமன்றத்தில் இதற்கான யோசனையை முன்வைத்தபொழுது சபையில் பலத்த ஆதரவு கிடைத்தது.

அவ்வேளையில் இயங்கிவந்த இலங்கை சேமிப்பு வங்கி, இலங்கை தபால் அலுவலக சேமிப்பு வங்கி, தேசிய சேமிப்பு இயக்கம், சேமிப்பு சான்றிதழ்கள் பிரிவு ஆகிய நான்கு ஸ்தாபனங்களை ஒன்றிணைத்து நாடாளுமன்ற சட்டமொன்றின் கீழ் தேசிய சேமிப்பு வங்கி ஸ்தாபிக்கப்பட்டது.

இலங்கை மக்கள் மத்தியில் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதும் இவ்வாறு சேகரிக்கப்படும் சேமிப்பை லாபகரமாக முதலீடு செய்வதுமே தேசிய சேமிப்பு வங்கியின் முக்கிய நோக்கமாகத் தொடர்ந்தும் இருக்கும்.

தேசிய சேமிப்பு வங்கியானது நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஒரு கோடியே 74 லட்சம் கணக்குதாரர்களுக்கு தற்கால நிதித் தீர்வுகளை வழங்குவதன் மூலம் அவர்களது வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்துள்ளது.


222 கிளைகள், 640 இற்கும் அதிகமான தபால் அலுவலகங்கள், 3,408 உப தபால் அலுவலகங்கள், மாஸ்ரர் அன்ட் வீசா காட் தொடர்புடன் 230 ஏரிஎம்கள் ஆகியன உட்பட 4 ஆயிரத்து 542 தொடர்புநிலையங்களையும் ஒரு கோடியே 74 இலட்சம் கணக்குதாரர்களையும் வங்கி கொண்டுள்ளது.

மதிப்பு வாய்ந்த AAA தரப்படுத்தலையும் பெற்றுள்ளது தேசிய சேமிப்பு வங்கி.

**சேமிப்பின் முக்கியத்துவம்**

இலங்கையர்கள் மத்தியில் ஆழமான சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் தனிப்பட்ட மட்டத்திலும்பொதுவாக நாட்டைப் பொறுத்தவரையிலும், முக்கிய குறிக்கோள்களை அடைவதற்கு ஏதுவாக இருக்கும்.

## அமானா வங்கியிடமிருந்து டாடா வாகனங்களுக்கான நிதிக் குத்தகை




அமானா வங்கி அண்மையில் இலங்கையின் மோட்டார் வாகனத் தொழில்துறையின் முன்னோடி நிறுவனமாக டீசல் & மோட்டார் என்ஜினியாரிங் (DIMO) கம்பனியுடன் டிமோ பட்டா மற்றும் பட்டி வாகனங்கள் உள்ளிட்ட டாடா ரக வர்த்தக வாகனங்களுக்கு விசேட நிதிக்குத்தகையை வழங்குவதற்கான ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொண்டுள்ளது.

டாடா ரக வர்த்தக வாகனங்கள் எவற்றையும் மாதாந்த வாடகை கொள்வனவு அடிப்படையில் பெறுவதில் ஆர்வமுள்ள எந்தவொரு தனி நபரோ, வர்த்தக நிறுவனமோ ரூபா. 100,000 நிதியிடலுக்கு மாதாந்தம் வற்வரி உள்ளடங்கலாக ரூபா. 2,554ஐ ஐந்து வருடங்களுக்கு செலுத்துதல் வேண்டும்.

இது தொடர்பில் நுகர்வோர் வங்கிச் செயற்பாடுகள் மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான அமானா வங்கியின் துணைத் தலைவர் சித்தீக் அக்பர் கூறுகையில்,

அமானா வங்கியின் குத்தகை தொடர்பான கொள்கைகள் இஜரா அடிப்படை கொண்டவை. இதன் பிரகாரம் வாடிக்கையாளருக்கு தேவையான வாகனத்தை வங்கி கொள்வனவு செய்வதுடன் அதனை வாடிக்கையாளருக்கு வாடகை அடிப்படையில் வழங்கவும் செய்கிறது.

குத்தகைக் காலம் முடிபுற்ற நிலையில் வங்கி - வாகனத்தை வாடிக்கையாருக்கு நன் கொடையாக வழங்கும்போது அவர் அதன் முழு உரிமையாளர் ஆவார். அவசியமாயின் மாதாந்த காப்புறுதி கொடுப்பனவுகளுக்கும் ஏற்பாடு செய்யப்படும்.

இஸ்லாமியவங்கி முறையில் இயங்கும் இலங்கையின் முதலாவது வர்த்தக வங்கி அமானாவாகும்.

## முன்னேற்றகரமான ஸ்மார்ட்போன்களை அறிமுகப்படுத்தும் டயலொக்




இலங்கையில் முதன்முறையாக தமது சொந்த வர்த்தக குறியீட்டினைக் கொண்ட நவீன ஸ்மார்ட்போன்( Smartphone )கையடக்கத் தொலைபேசியை அறிமுகப் படுத்துவதற்காக டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி நிறுவனம் அறிவித்துள்ளது.

அசலான Android2.3 OS(செயற்பாட்டு முறைமை) சிறப்பம்சத்தை தன்னகத்தே கொண்ட டயலொக் ஸ்மார்ட்போன் செலவுச் சிக்கனமான தொடர்பிணைப்பு வசதியை அளிக்கின்றன.

அதேநேரம் ஈடிணையற்ற ஒரு வருட உத்தரவாதம் மற்றும் விற்பனைக்குப் பிந்திய சேவையுடன் இத் தொலைபேசிகள் கிடைக்கின்றன. டயலொக் வர்த்தக நாமத்தை சுற்றிலும் கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கையின் பக்கபலத்தைக் கொண்டதும் அதனது உள்ளார்ந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையிலானதுமான, முழு [illegible] கையடக்க தொலைபேசி திருத்துதல் மற்றும் சேவை நிலைய வசதிகளும் இதில் உள்ளடங்குகின்றன.

டயலொக் ஸ்மார்ட்போன் (Smartphone) சந்தையில் தற்போது காணப்படுகின்ற மிகவுயர் தரம் வாய்ந்த ஸ்மார்ட்போன்(Smart phone) களுக்கு மாற்றீடாக பயன்படுத்தவல்ல கட்டுபடியான விலையுள்ள தெரிவாகக் காணப்படுகின்றமையால் எதிர்காலத்தில் நவீன ஸ்மார்ட்போன்( Smartphone) [illegible] பொருத்தமானதாகக் காணப்படுகின்றது.

## வெளிநாடுகளில் தொழில்புரிவோருக்கு இலங்கையில் சேமிப்பை மேற்கொள்ள ஊக்கமளிக்கும் செலான் வங்கி

வங்கிச் சேவையில் 25 வருட காலத்தை பூர்த்தி செய்து தனது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்கி வரும் செலான் வங்கி, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்கினை வகிக்கும் நாட்டு மக்களிடம் இருந்து சேமிப்பு வைப்புகளை திரட்டி அதனை நாட்டின் அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காக வழங்கி வருகின்றது.

நாட்டின் அபிவிருத்தி திட்டங்களுக்கு வங்கி என்ற ரீதியில் தனது பணிகளை அதனோடு நிறுத்தி விடாது வெளிநாடுகளில் உள்ளவர்களின் சேமிப்பையும் பேணி வருகின்றது.

இது தொடர்பாக செலான் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் கலாநிதி பத்மநாதன் நிரஞ்சன் தெரிவிக்கையில்,

செலான் வங்கியானது தனது 25 வருட வங்கிச் சேவை காலத்தில் பல்வேறு வகையான கணக்குகளையும் நிதி வசதிகளையும் நாட்டு மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு அறிமுகப்படுத்தி செயற்பட்டு வருகின்றமை நாம் அறிந்ததே.

விசேட வெளிநாட்டு முதலீட்டு வைப்பு கணக்கில் வெளிநாட்டு நாணயத்திலேயே சேமிக்க முடியும். அல்லது ரூபாயுக்கு மாற்றியும் தமது சேமிப்பை மேற்கொள்ள முடியும்.

அக் கணக்கை ஆரம்பிக்க வெளிநாட்டவர்களுக்கு சேமிப்பு தொடர்பாக எந்த விதமான வரி அறவீடுகளும் மேற்கொள்ளப்படுவதில்லை.

அத்துடன் அவர்கள் தமது நாடுகளில் பெறும் வட்டி வீதத்தை விட கூடிய வட்டி வீதத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

தற்போது வெளிநாட்டு வேலைவாய்ப்புபணியகத்தில் செலான் வங்கி கிளையொன்றை திறந்துள்ளது.

இதன்மூலம் வெளிநாடுகளுக்கு செல்லும் ஒருவர் தனது பணத்தை செலான் வங்கிக்கு அனுப்புவதற்கு அவர்கள் தமது கணக்கினை ஆரம்பிக்க முடியும்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 125.38 | 128.54 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 189.89 | 195.58 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 161.06 | 166.56 |
| சுவிஸ் பிராங் | 131.57 | 136.72 |
| கனேடிய டொலர் | 121.70 | 126.21 |
| அவுஸ்திரேலிய டொலர் | 129.83 | 134.91 |
| சிங்கப்பூர் டொலர் | 99.78 | 103.32 |
| ஜப்பான் யென் | 1.31 | 1.36 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.33 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.55 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வுக்கான சந்தர்ப்பங்களை கூட்டமைப்பு சரிவர பயன்படுத்த வேண்டும்

## சர்வதேசம் கூட்டமைப்புக்கு அழுத்தம் கொடுக்கட்டும் - அமைச்சர் டக்ளஸ்

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்க பிரேரணை என்பது தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் உரிமைப் பிரச்சினை தீர்வுக்கு உதவப்போவதில்லை. மாறாக தமிழ், முஸ்லிம், சிங்கள மற்றும் ஆளும் அரசாங்க கட்சிகள் யாவும் ஒன்றுபட்டு செயற்படுவதற்கான நல்லெண்ண சமிஞைகளே உள்நாட்டு பிரச்சினையை தீர்க்கவும் அரசியலுரிமை பிரச்சினைக்கு தீர்வு காணவும் அவசியமானது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

அழுதும் பிள்ளையை அவளே பெற வேண்டும் என்பது போல் எமது பிரச்சினைகளை நாம் மட்டுமே பேசி தீர்க்க முடியும்.

அரசியல் தீர்வு என்ற குழந்தையை நாம் பிரசவிப்பதற்கு வெளியுலக விருப்பங்களும் உதவிகளும் ஒரு மருத்துவிச்சியின் சேவையினையே எமக்கு வழங்க முடியும்.

வெளியுலக தீர்மானங்கள் எவையும் தத்தமது நாடுகளின் நலன் சார்ந்த இலங்கை அரசுடனான விருப்பு வெறுப்புகளை கொண்டிருக்க முடியாது.

மாறாக அவை தமிழ் பேசும் மக்களின் அரசியல் தீர்வு குறித்த நலன்களை பிரதான நோக்காக கொண்டிருப்பதையே நாம் விரும்புகிறோம்.

எமக்கு தேவை தமிழ் பேசும் மக்களுக்கான கௌரவமான ஓர் அரசியல் தீர்வு. அதற்கான நடைமுறை சாத்தியமான வழிமுறை.

கடந்த கால அழிவுகளில் இருந்து எமது மக்கள் மீண்டெழுவதற்கான வாழ்வியல் எழுச்சி.

தொடர்ந்தும் இங்கு நீடித்து நிலவ வேண்டிய மனித உரிமைகள் மற்றும் அடிப்படை ஜனநாயக உரிமைகள்.

இவைகளுக்காகவே நாம் ஏனையவர்கள் போல் அன்றி வெளிப்படையாகவே அரசுடன் இணக்கமாக பேசி செயற்பட்டு வருகின்றோம். அரசியல் தீர்விற்கான நல்லெண்ண சமிஞையினையும் காட்டி வருகின்றோம்.

இலங்கை- இந்திய ஒப்பந்தம், பிரேமதாச- புலிகள் பேச்சுவார்த்தை, சந்திரிகா- புலிகள் பேச்சுவார்த்தை, ரணில்- புலிகள் பேச்சுவார்த்தை, இறுதியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ- புலிகள் பேச்சுவார்த்தை என அனைத்து சந்தர்ப்பங்களும் தமிழ் பேசும் தலைமைகளாலேயே திட்டமிட்டு கைவிடப்பட்டன.

நடந்து முடிந்த தேர்தலிலும் அரசியல் தீர்வு பெற்று தருவதாக எமது மக்களிடம் வாக்குக் கேட்டு 14 ஆசனங்களோடு ஆணை பெற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தத்தமது சொந்த சலுகைகளுக்காக மட்டும் அரசுடன் பின்கதவு தட்டி கை குலுக்கி இணக்கமாக பேசி அதில் வெற்றியும் பெறுகின்றார்கள்.

ஆனாலும் தமக்கு ஆணை வழங்கிய தமிழ் பேசும் மக்களுக்கான உரிமைப்பிரச்சினை விடயத்தில் மட்டும் தமது வெறும் சுயலாப எதிர்ப்பு அரசியலையே நடத்தி வருகின்றார்கள்.

ஆறு மாதங்கள் மட்டும் கால அவகாசம் கொடுத்து அதற்குள் அரசியலுரிமை பிரச்சினைக்கு தீர்வு காணலாம் வாருங்கள் என்று நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அழைக்கின்றது அரசாங்கம்.

இது ஒரு இறுதி முயற்சியாக இருக்கட்டும் என்று எண்ணித்துணிந்து ஆறு மாத கால அவகாசத்தை கூட அரசியல் தீர்வுக்கு முயன்று பார்க்க விரும்பாத தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தாம் அரசியல் தீர்வுக்கு விருப்பமற்றவர்கள் என்பதையே வெளிப்படுத்தி வருகின்றது.

அதற்காக எவரும் அரசாங்கத்தின் காலில் விழுந்து சரணாகதி அடையவேண்டும் என்று நாம் கூறவில்லை. அதை யாரும் விரும்பவும் இல்லை.

மதிநுட்ப சிந்தனைகளும் அரசியல் சாணக்கிய தந்திரங்களும் எமது மக்களை வழி நடத்தி செல்லட்டும்.

இலங்கை அரசுக்கு அழுத்தங்களை கொடுக்கும் சர்வதேச சமூகம் அரசியல் தீர்வுக்கு கிடைத்திருக்கும் சந்தர்ப்பங்களை சரிவரப் பயன்படுத்த மறுக்கும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மீதும் அழுத்தங்களை கொடுக்கட்டும்.

இனி இங்கு நடக்கப்போவதும் எமது தீர்க்க தரிசனங்களே.

வரலாறு யாருக்காவும் காத்திருக்காது. வந்து சேருங்கள் நடைமுறை சாத்திய வழிமுறை நோக்கி என்று நாம் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

தமிழ் பேசும் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வுக்காக நடைமுறைச்சாத்திய வழி நின்று வெற்றி பெறும் காலம் விரைவில் நிகழும் என்றும் உறுதிப்படத் தெரிவித்துள்ளார் என ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ-2)

# இரண்டு மாதங்களில் 6 ஆயிரம் கோடி கடன்

(கொழும்பு)

இலங்கை கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் 6 ஆயிரம் கோடி ரூபாய் கடனை பெற்றுள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலர்களில் 486 மில்லியன் பெறுமதியான கடன் தொகையை இலங்கை அரசாங்கம் பல்வேறு நாடுகளில் இருந்து பெற்றுக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளும் உலக வங்கியும் பெருந்தொகையான கடனை வழங்கியுள்ளன. (அ-2)

# அபிவிருத்தி சங்க நிர்வாகிகள் தெரிவு

(மல்லாகம்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் நடப்பாண்டிற் கான நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இதற்கமைவாக,

தலைவராக எஸ். சிவனேஸ்வரன் (அதிபர்), உப தலைவரக ரீ. ரமேஸ் (பிரதிஅதிபர்), செயலாளராக கே. எழிற்செல்வன் (கிராம சேவையாளர்), உப செயலாளராக கே. அமிர்தலிங்கம், பொருளாளராக எஸ்.ரீ அருள்குமரன் (ஆசிரியர்) ஆகியோர் தெரிவாகினர்.

செயற்குழு உறுப்பினர்களாக ஆசிரியர்கள் சார்பில் பி.வசந்தன், வீ. கிருஸ்ணராசா, எம். கே.நேரு , ரீ. பிரதீபன், எ.லிங்கேஸ்வரன் பெற்றோர்கள் சார்பில் ஆர்.துஸ்யந்தன் ஜெ. வீரசிங்கம், எஸ். திலகலிங்கம், ஆர்.உதயசூரியன் திருமதி. மல்லிகா ஜெயரட்ணம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ-2-21)

# வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



(சி-2786)

அமரர் திருமதி

## மகேஸ்வரி இராசரத்தினம்

எமது உடல் உயிர் தங்கியிருக்க இறைவன் எமக்கு கொடுத்த தூய் மையான வாடகை வீடு. இதை என்றைக்கேனும் ஒருநாள் காலி செய்யவேண்டும். இறைவனிடம் அதைத் திருப்பிக் கொடுக்கும்போது தூய்மையானதாக கொடுக்கவேண்டும் - பாபா

தோற்றம்:
12.10.1927

மறைவு:
10.03.2013

ஒரு இலட்சிய மகளாக, சகோதரியாக, மனைவியாக, தாயாக, பாட்டியாக, பூட்டியாக, உறவினராக, சிநேகிதியாக வாழ்ந்து ஆயிரம் பிறை கண்ட

**அமரர் திருமதி மகேஸ்வரி இராசரத்தினம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 25.03.2013 திங்கள் காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பிள்ளையார் கோயிலடி, தாவடி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவர் கைதாகினர்


(கரவெட்டி)

வடமராட்சியில் கடந்த காலங்களில் இடம்பெற்ற குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகத்தின் பேரில் இருவரை நேற்று அதிகாலை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வடமராட்சி பிரதேசத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்படாது தலைமறைவாகி வாழ்ந்து வருகின்றனர்.

'இவர்களை கைது செய்வதற்கென பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் விசேட பொலிஸ்குழு ஒன்று அமைக்கப்பட்டு நேற்று அதிகாலை 4 மணி முதல் காலை 7 மணி வரை மேற்கொண்ட தேடுதலின்போது மந்திகைப் பகுதியில் ஒருவரும் அல்வாய்ப் பகுதியில் மற்றுமொரு நபரும் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இவர்கள் களவு சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்து பொலிஸார் மேலதிக புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-3-24)




# யாழ்.மாநகரசபை நிலையியற் குழுக்களில் எதிர்க்கட்சியினரும் இணைக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் நிலையியற் குழுக்களில் எதிர்க்கட்சி உறுப்பின்ர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

யாழ்.மாநகர சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின் போதே எதிர்க்கட்சி உறுப்பினர்களும் நிலையியற் குழுவில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

சுகாதாரக் குழு, மராமத்துக்குழு, நிதிக்குழு என்பவற்றில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

நிலையியற் குழுத் தெரிவில் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் (எதிர்க்கட்சி உறுப்பினர் மு.றெமிடியஸ் தவிர்ந்த) வெளிநடப்பு செய்திருந்தனர்.

இந்நிலையில் ஆளும் கட்சி உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர் றெமிடியஸும் மேற்படி மூன்று குழுவிலும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

நீண்ட காலமாக பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த இந்த நிலையியற் குழு தெரிவுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடன் ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் சிலர் தாமாக முன்வந்து நிலையியற் குழுவிலிருந்து விலகியதையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் அவர்களையும் குழுவில் இணைத்துக் கொள்ள முதல்வர் தலைமையிலான ஆளும் தரப்பினர் முடிவு செய்ததோடு மாதாந்தக் கூட்டத்தில் நிலையியற் குழுக்களுக்கான உறுப்பினர்களும் (எதிர்க்கட்சி) இணைத்துக் கொள்ளப்பட்டனர். (அ-6)

# சிவில் பாதுகாப்பு குழுவுக்கு இளைஞர்களை இணையுங்கள்

## ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(கரவெட்டி)

வடமராட்சி கற்கோவள பகுதியில் சிவில் பாதுகாப்பு குழுவுக்கு செயற்றிறன் மிக்க இளைஞர்களை உள்வாங்க வேண்டுமென வடமராட்சி வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அப்பிரதேச மக்களின் பிரதிநிதி ஒருவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொலிஸாரினால் கிராமங்கள் தோறும் அமைக்கப்படும் சிவில் பாதுகாப்பு குழுவில் இளைஞர்கள் உள்வாங்கப்படுவது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

அதேபோன்றுதான் எமது கற்கோவள கிராமத்தில் 55 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்களே சிவில் பாதுகாப்பு குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இதனால் எமது கிராமத்தில் இடம்பெறும் கலாசார சீரழிகள், மதுப்பழக்கம், சட்டவிரோத மணல் அகழ்வுகள் போன்ற குற்றச்செயல்கள் இடம்பெற்று வருவதை சிவில் பாதுகாப்பு குழுவினால் தடுக்க முடியாத நிலையும் உள்ளது.

எனவே, எதிர்வரும் காலங்கிளில் சிவில் பாதுகாப்பு குழு அமைக்கும் சமயங்களில் அதிகளவான இளைஞர்களை உள்வாங்கும் போது குற்றச் செயல்கள் தடுக்கப்படும் என தாம் நம்புவதாக அப் பிரதிநிதி அக்கூட்டத்தில் தெரிவித்தார். (அ-3-24)

# வாரத்தில் ஒரு பகுதிக்கு மட்டும் மின்தடை ஏற்படும்

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேசத்திற்கு வாரத்தில் ஒரு நாளில் ஒரு பகுதிக்கு மட்டும் மின்வெட்டு இடம்பெறுமென வடமராட்சி உப மின்சார சபை அலுவலக மின்னத்தியட்சகர் கே.இராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி பிரதேசத்தில் கடந்த காலங்களில் மின் திருத்த வேலைக்காக ஒரு வாரத்தில் 2, 3 நாட்கள் பகுதி பகுதியாக மின்சாரம் தடைப்பட்டு வந்தது.

இதனால் சுன்னாக தலைமைக்காரியாலயத்தின் பணிப்புக்கமையவும் மக்களின் நலனை கருத்திற் கொண்டும் எதிர்காலத்தில் வாரத்திற்கு ஒருநாள் மட்டும் ஒரு பகுதிக்கு மின்சாரம் தடைப்பட்டு திருத்த வேலைகள் இடம்பெறவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (அ-3-24)

# கெருடாவில் விவசாய களஞ்சியத்தை விரைவில் இயங்க வையுங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

(கரவெட்டி)

வடமராட்சி தொண்டைமானாறு கெருடாவில் விவசாய களஞ்சியத்தை மீளவும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பிரதேச பிரதிநிதி வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கெருடாவில் பிரதேசமானது விவசாயத்தில் பிரபல்யம் பெற்ற இடமாகவும் விளங்கி வருகின்றது.

யுத்த காலத்திற்கு முன் அங்குள்ள மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வந்தனர்.

இவர்கள் தமது விவசாய பயிர்களை சந்தைப்படுத்துவதற்கு விவசாய களஞ்சியம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

பின் தமிழீழ விடுதலை புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் அப்பகுதியில் இடம்பெற்ற மோதலின்போது அக் களஞ்சியம் முற்றாக சேதமடைந்தது.

இதனால் தமது விவசாய பயிர்களை சந்தைப்படுத்துவதற்கு தூர இடங்களில் உள்ள பருத்தித்துறை, நெல்லியடி பகுதிகளுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனவே, யுத்தம் முடிவடைந்த நிலையிலும் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைபெற்று கொண்டிருக்கும்நிலையிலும் எமது கெருடாவில் விவசாய களஞ்சியத்தை புதிதாக நிர்மாணித்து தர வேண்டுமென பிரதிநிதி வேண்டுகோள் விடுத்தார். (அ-3-24)






யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர் தி.தேவதயாளன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வு இடம்பெறுவதனையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இலங்கை வங்கி சுன்னாகக் கிளையின் முன்னாள் முகாமையாளர் அரச குமார் வெற்றி பெற்ற மாணவர் ஒருவருக்கு வெற்றிக் கேடயம் வழங்கி கௌரவிப்பதனையும் படங்களில் காணலாம்.





# பொதுக்கூட்டம் இடமாற்றப்பட்டது

(சாவகச்சேரி)

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்க யாழ்.மாவட்ட கிளையின் அங்குரார்ப்பண பொதுக்கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் கண்டி வீதியில் அமைந்துள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறுமென யாழ்.மாவட்ட மேலதிக இணைப்பாளர் வீ.வீ.பொன்னம்பலம் அறிவித்துள்ளார்.

இக்கூட்டம் நாவலர் வீதியில் உள்ள நாவலர் மண்டபத்தில் நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டு தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (அ-3-29)

# குருபூசை தினம்

(பருத்தித்துறை)

மேலைப் புலோலி சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையின் குருபூசை தின நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் வே.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளதாக நிலையச் செயலாளர் அ.ஜெயநிமலன் அறிவித்துள்ளார். (அ-3-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை- இந்தியா இடையேயான பிரச்சினை தற்காலிகமானதே!

## இலங்கை தூதுவர் தெரிவிப்பு

இந்தியாவும் இலங்கையும் நட்பு நாடுகள் ஆகும். தற்போது ஏற்பட்டுள்ள சில அரசியல் பிரச்சினைகள் தற்காலிகமானதுதான். அதனால்இருநாடுகளுக்குஇடையேயான உறவில் எந்த பாதிப்பும் ஏற்படாது.

இவ்வாறு இந்தியாவுக்கான இலங்கை தூதர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இந்தியா- இலங்கை உறவுகள் தொடர்பாக மும்பையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் இந்தியாவுக்கான இலங்கைதூதர் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப்போது அவர் மேலும் கூறியதாவது,

இந்தியாவும் இலங்கையும் நட்பு நாடுகள் ஆகும். தற்போது ஏற்ப ட்டுள்ள சில அரசியல் பிரச்சினைகள் தற்காலிகமானதுதான். இதனால் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் எந்த பாதிப்பும் ஏற்படாது.

இலங்கையின் அமைவிட உத்தியை பயன்படுத்தி இந்தியா ஏராளமான ஆதாயங்களை அடைய முடியும். இலங்கையை சிறந்த வர்த்தக மையமாக பயன்படுத்திக் கொள்ள முடியும். இலங்கையில் செயற்படும் 46 சர்வதேச நிறுவனங்களில் 43 நிறுவனங்கள் இந்தியாவைச் சேர்ந்தவை. இரு நாடுகளுக்கும் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் உள்ளது. ஆனால் இதை செயந்படுத்துவதில் போதிய முன்னேற்றம் காணப்படவில்லை.

இந்த ஒப்பந்தத்தை பயனுள்ள வகையிலும் அர்த்தமுள்ள வகையிலும் திறம்பட செயற்படுத்த இரு நாடுகளும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் ஆகும்.

இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகத்தை மேம்படுத்த உடன்பாடு செய்து கொள்ள வேண்டும். இதன்மூலம் இரு நாடுகளின் பொருளாதாரமும் வளர்ச்சி அடையும்.

இலங்கையில்விளையும்தேயிலை உலக பிரசித்தி பெற்றது ஆகும். தேயிலையை பதப்படு த்தும் பணி பேக்கேஜிங் விநியோகம் ஆகியவற்றில் இரு நாடுகளும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

மேலும் இலங்கையிலும் கேரளாவிலும் உலக தரம் வாய்ந்த தேங்காய் விளைகிறது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி அதிகபட்ச ஆதாயம் அடைவதற்கான சாத்தியக் கூறுகளை இரு நாடுகளும் ஆராய வேண்டும்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கும் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கும் சுற்றுலா பயணிகள் வந்து செல்வது அதிகரித்து இருப்பதால் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார். (அ-2)


## உயர்தர மாணவர்களுக்கு பாடம் கற்பித்த பந்துல

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன ஹோமாகம மகிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்திற்கு அண்மையில் திடீர் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இதன்போது அமைச்சர் தனது பழைய தொழிலை ஞாபகப்படுத்தி அன்றையதினம் அங்கு இரு மணி நேரம் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு பொருளியல் பாடம் நடத்தியுள்ளார்.

ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தில் உயர்தரத்தில் கல்வியிலும் ஒவ்வொரு மாணவனும் மாணவியும் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பாகும்.

தனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் தான் வந்து பாடம் நடத்த தயாராக உள்ளதாகவும் அமைச்சர் பந்துல தெரிவித்துள்ளார். (அ-2)



வவுனியா மாவட்டத்தில் அமையப் பெற்றுள்ள அலைகல்லுப் போட்டகுளம் வீரமாமுனிவர் வித்தியாலயம் அண்மையில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பாடசாலை கட்டடத்தினை வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிசாட் பதியூதீன் நாடாவெட்டி திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும்படங்களில் காணலாம். (படங்கள்:-குருமன்காடு,பூந்தோட்ட செய்தியாளர்)

## பொம்மை உற்பத்திகளுக்கு வவுனியாவில் அதிக கேள்வி

வவுனியாவில் பொம்மை உற்பத்திக்கு கேள்வி அதிகரித்திருப்பதனால் பலரும் பொம்மை உற்பத்தியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சுயதொழிலாக மேற்கொள்ளப்பட்டு வரும் இத் தொழிலில் பலரும் ஆர்வம் காட்டி வருவதனால் தொழில் வாய்ப்புக்களும்கிடைப்பதாகபொம்மை உற்பத்தியில் ஈடுபடுவோர் தெரிவிக்கின்றனர்.பொம்மை உற்பத்தியில் சிறுவர்களுக்கான காட்டூன் உடைகளும் தைக்கப்படுவதனால் முன்பள்ளிகளில் சிறுவர் நிகழ்வுகளில் இவ் உடைகள் சிறப்பிடம் பெறுவதாகவும் உற்பத்தியாளர்கள்தெரிவிக்கின்றனர்.

வீட்டுக் கைத்தொழிலாக மேற்கொள்ளப்படும் அத்தொழிலுக்கு பலரும் ஆர்வம் கொண்டு ஈடுபடுவதாகவும் தெரிவிப்பதுடன் வவுனியாவில் உற்பத்தி செய்யப்படும் பொம்மைகள் நாட்டின் பல பாகங்களுக்கும் விநியோகம் செய்யக் கூடிய வகையில் இருப்பதனால் அதிகளவான வருமானத்தை ஈட்டக் கூடியதாகவும் உள்ளதென இத் தொழிலில் ஈடுபடுவோர் தெரிவிக்கின்றனர்.

சுமார் 3 ஆயிரம் ரூபாவிற்கு அதிகமாக விற்பனை செய்யப்படும் ஒரு காட்டூன் உடையினை தைப்பதற்கு இரண்டு மணிநேரம் செலவிடுவதாக தெரிவிக்கும் உற்பத்தியாளர்கள் அதிகளவானோர் தம்மிடம் பொம்மைகள் உட்பட காட்டூன் உடைகளை கொள்வனவு செய்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

பலருக்கு தொழில் வாய்ப்பை வழங்குவதுடன் வருமானத்தை ஈட்டக்கூடிய இத் தொழில் வவுனியாமாவட்டத்தில்மீளஎழுச்சித்திட்டத்தின் ஊடாக கடந்தசிலமாதங்களாகவேமேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (அ-2-266)

## சோமவன்சவுக்கு பதிலாக புதிய தலைவர் நியமிக்கப்படுவார்

நீண்டகாலமாக மக்கள் விடுதலை முன்னணி யின் தலைவராக இருந்து வரும் சோமவன்சவை அப்பதவியிலிருந்து நீக்கிவிட்டு புதிய ஒருவரை அப்பதவியில் அமர்த்துவதற்கான நடவடிக்கைகளை மக்கள் விடுதலை முன்னணி மேற்கொண்டு வருவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மக்கள் விடுதலை முன்னணியின் புதிய தலைவர் ஒருவரை நியமிப்பது தொடர்பான கலந்துரையாடல்களும் விவாதங்களும் தற்பொழுது கட்சியின் உயர்பீடத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சோமவன்ச அமரதுங்க நீண்டகாலமாக மக்கள் விடுதலை முன்னணியின் தலை வராக செயற்பட்டு வந்துள்ளார். அவர் தற்போது வயதாகியுள்ளதாகவும் அடுத்த தலைமுறையினருக்குவாய்ப்பளிக்கவேண்டும் என்பதற்காகவுமே புதிய தலைமைத்துவம் தொடர்பாக கலந்துரையாடி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைக்காலமாக மக்கள் விடுதலை முன்னணியில் ஏற்படும் வீழ்ச்சியே இந்த திடீர் தீர்மானத்திற்கு காரணம் எனவும் கருத்துக்கள் நிலவுகின்றன.

மக்கள் விடுதலை முன்னணியின் புதிய தலைவர் பதவிக்காக ரில்வின் சில்வா, அனுர சேனநாயக்க மற்றும் விமல் ரத்நாயக்க ஆகியோரின் பெயர்கள் பரிசிலனையில் இருப்பதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

## 90 வீதமானோருக்கு ஆளும் கட்சியிலிருந்து விலக விருப்பம்

### முன்னாள் இராணுவத்தளபதி

ஆளும் கட்சி உறுப்பினர்கள் 90 வீதமானோர் அரசாங்கத்தை விட்டு விலகவே விரும்புவதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.தற்போதைய ஆட்சியாளர்களின் சர்வாதிகார ஆட்சி முறைமையை ஆளும் கட்சியைச் சேர்ந்த பலர் விரும்பவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், மாற்று அரசாங்கமொன்று அமைக்கப்படும் என உறுதியாக அறிவிக்கப்பட்டால்பலர் ஆளும் கட்சியை விட்டு விலகுவார்கள்.

ஜனாதிபதி தம்மை முப்பது ஆண்டுகளுக்கு சிறையில் தள்ள முயற்சித்திருந்ததாகவும் இரண்டு ஆண்டுகளில் சிறையிலிருந்து விடுதலையானேன். இதே போன்று சிவில் உரிமை களையும் மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.அரசாங்கம் ஸ்திரமாக காணப்படுகின்றது என பிரச்சாரம் செய்யப்பட்டபோதிலும்உண்மைநிலைமை அதுவல்ல என்றார். (அ-2)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## நாங்கள் யார்? எங்கள் தீர்மானம் என்ன? தேர்ந்து செயற்படுவோம்



இயேசு பெத்தானியாவுக்குச் சென்றார். அங்கு தான் இயேசு இலாசரை உயிர்தெழச் செய்தார். அங்கு அவருக்கு விருந்து அளிக்கப்பட்டது. மரியா எனும் பெண் இலாமிச்சை என்னும் கலப்பற்ற விலையுயர்ந்த நறுமணத்தைலத்தை இயேசுவின் காலடிகளில் பூசி அதனை தமது கூந்தலால் துடைத்தார். தைலத்தின் நறுமணம் வீடெங்கும் கமழ்ந்தது. இயேசுவை காட்டிக் கொடுத்த இயேசுவின் சீடன் யூதாஸ் இஸ்காரியோத்து இந்தத் தைலத்தை முந்நூறு தெனாரியத்துக்கு விற்று அப்பணத்தை ஏழைகளுக்கு கொடுத்திருக்க்கூடாதா? என்று கேட்டான்.

ஏழைகள் பால் கொண்டிருந்த அக்கறையினால் அல்ல, மாறாக அவன் ஒரு திருடனாய் இருந்ததால்தான் இப்படிக் கேட்டான். பணப்பை அவனிடம் இருந்தது. அதில் போடப்பட்ட பணத்திலிருந்து அவன் எடுத்துக் கொள்வதுண்டு. அப்போது இயேசு மரியாவை தடுக்காதீர்கள். என் அடக்க நாளை முன்னிட்டு அவர் இதைச் செய்யட்டும். ஏழைகள் உங்களோடு என்றும் இருக்கிறார்கள். ஆனால் நான் உங்களோடு என்றும் இருக்கப்போவதில்லை எனும் வேதாகமம் பகுதி எமக்கு இன்று தரப்படுகின்றது. நாம் ஒரு இலட்சியத்திற்காக வாழ்ந்தால் எங்கள் உறவினர் போன்றோராலும் புறக்கணிக்கப்படுகின்றோம். எம்மீது அவதூறு அள்ளி வீசி அவமானப்படுத்தப்படுகின்றோம்.

பணம் இப்போது அவரிடம் இல்லை. பதவி அவரிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டது. அவருக்குப் பாதுகாப்பில்லை. நண்பர் கூட்டம் ஓடிவிட்டது. மேலிடம் கைவிரித்துவிட்டது.இப்போ எங்களுடைய தீர்மானம் என்ன? இயேசுவின் இத்தகையை அனுபவத்தில் அவரோடு கூட இருந்த சிலரை நம் கண்முன்னிறுத்துவோம்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்

மாத்தா இயேசுவிற்கு உணவு பரிமாறினாள். அவளால் முடிந்த செயலை செய்தாள். மரியா இலாமிச்சை என்னும் கலப்பற்ற விலையுயர்ந்த நறுமணத்தைலம் இயேசுவின் காலடிகளில் பூசி அதனைத் தமது கூந்தலால் துடைத்தார். யூதாஸ் வாய்ச் சொல்லில் வீரர். கடவுளின் புகழுக்காக நாம் செலவு செய்வதற்குப் பதிலாக ஏழைகளுக்காக கொடுத்து உதவ வேண்டாமா என்னும் கேள்வி எழுப்புகிறார். இதற்கு இயேசு தருகின்ற பதில் எமக்கு சமூக நீதிக்காக உழைப்பதும் கடவுள் புகழுக்காக எம்மை தியாகம் செய்வதும் இயேசுவின் போதனைப்படி மிக நெருக்கமாக இணைந்தவையாகும் என்பதாகும். கடவுளை நினைந்து மனிதரை மறப்பதோ, மனிதரை நினைந்து கடவுளை மறப்பதோ கிறிஸ்தவின் பார்வையில் மாறாக ஒடுக்கப்பட்டோரை ஆதரிக்கின்ற அதேவேளையில் நாம் கடவுளைப் புகழ்வதையும் நாம் மறந்துவிடக்கூடாது. நாங்கள் யார் எங்கள் தீர்மானம் என்ன? தேர்ந்து செயற்படுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சிறுவர் அரங்கம்



(408)

## அம்புலிமாமா கதைகள்

## கை கொடுத்த தெய்வம்




சிறுவயதிலேயே பெற்றோரை இழந்த விவேக் தெருக்களில் சுற்றியலைந்து ஊர்க்காரர்கள் இரக்கப்பட்டு அளிக்கும் உணவை உண்டு காலம் கழித்தான். மற்றப்படி வேலை வெட்டி எதுவுமின்றி ஊரைச் சுற்றி வந்தான்.

ஒருநாள் அவனுக்கு யாரும் சாப்பாடு போடாமலிருக்க பசியினால் விவேக் மயக்கமடையும் நிலையடைந்தான். பசி வந்தால் பத்தும் பறந்துபோகும் என்ற பழமொழிக்கு ஏற்ப விவேக் எப்படியாவது ஏதாவது சாப்பாடு கிடைத்தால் போதுமென்று தவித்தான்.

அப்போது கடையில் ஒரு நடுத்தர வயதுக்காரர் பொருட்கள் வாங்கிக்கொண்டிருந்தார். பின்பு அதற்கான பணத்தைக் கொடுத்தபின் பேர்சை பையினுள் திணித்துக்கொண்டார். பான்ட் பொக்கட்டில் துருத்திக் கொண்டிருந்த பேர்சைக் கண்டதும் விவேக்குக்கு அதைத் திருடினால் என்ன என்று தோன்ற அவர் பின்னால் தொடர்ந்து சென்று அவர் பொக்கெட்டில் இருந்த பேர்சை எடுக்க மெதுவாக கைவிட்டான்.

சடாரென்று அவர் திரும்பிப் பார்த்து விவேக்கின் கையினை கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். தன்னைப்பிடித்து அடித்து நொறுக்கப்போகிறார் என்று விவேக் குலைநடுங்க அவர் அவனை ஒதுக்குப் புறமாக அழைத்துச்சென்று தம்பி உனக்கு அப்பா அம்மா இல்லையா? ஏன் இந்த ஈனத் தொழி லில் ஈடுபட்டிருக்கிறாய்? என்று கேட்டதும் அவருடைய பெருந்தன்மையைக் கண்டு விவேக் அழுதுவிட்டான்.

ஐயா, இதுதான் முதல் தடவை அதுவும் நாள் முழுவதும் பட்டினியாக இருந்ததால் இப்படி செய்யத் துணிந்தேன். நீங்கள் மிகவும் நல்லவர். எனக்கு



இரண்டுரூபாய் கொடுத்தால் போதும்! நான் பின்பு திருட மாட்டேன் என்றான் விவேக்.

இரண்டு ரூபாய் தாராளமாகத் தருகிறேன். அதனால் இன்று உன் பசி தீரும். அப்புறம் நாளைக்கு என்ன செய்வாய்? சாப்பாடு கிடைக்காவிட்டால் மறுபடியும் திருடுவாயா? சரி, சரி என்னுடன் வா! ஒரு நல்ல விடுதியில் சாப்பாடு வாங்கித் தருகிறேன். தயவு செய்து திருட மட்டும் செய்யாதே! ஒருமுறை திருடினால் உன் மீது திருடன் என்ற முத்திரை நிரந்தரமாகக் குத்தப்படும். அப்புறம் நீ செய்யாத குற்றத்துக்குக்கூட உன்னைச் சந்தேகிப்பார்கள். அதனால் ஏதாவது வேலை செய்து பணம் சம்பாதித்து சாப்பிடு! திருட மட்டும் செய்யாதே! என்றவர் அவனை ஒரு நல்ல உணவு விடுதிக்கு அழைத்துச் சென்றார்.

அங்கு அவரும் சாப்பிட்டு அவனுக்கும் வயிறார சாப்பாடு வாங்கிக்கொடுத்தார். தன் பெயர் கேசவன் என்று அறிமுகம் செய்து கொண்ட அவர் விவேக்கிடம் மிகவும் அன்பாகப் பேசினார். விவேக் உண்டு முடிப்பதற்குள் கைகழுவச் சென்ற கேசவன் திரும்பி வரவேயில்லை.

தேள் கொட்டியது போல் அதிர்ச்சியடைந்த விவேக் உணவு விடுதியின் முதலாளியிடம் கேசவனைப் பற்றிக் கேட்க அவர் தன் பிள்ளையிடம் இருந்து பணம் வாங்கிக்கொள்ள சொல்லிவிட்டு அவசரமாக வெளியில் சென்றுவிட்டார் என்றார். தான் கேசவனுடைய மகன் இல்லை என்றும் தன்னிடம் பணம் இல்லை என்றும் விவேக் சொன்னதும் முதலாளி வெகுண்டார். விவேக்கைத் தாறுமாறாகத் திட்டியபின் அவனைத் தன்விடுதியில் பத்து நாட்கள் வேலைசெய்யச் சொன்னார். நயவஞ்சகம் புரிந்த கேசவனை மனமார சபித்துக் கொண்டே விவேக் அங்கு வேலை செய்யத் தொடங்கினான். முத லில் வேலை செய்வது மிகக் கடினமாக இருந்தாலும் பத்தே நாட்களில் விடுதிவேலை அவனுக்குப் பழகிவிட்டது. தவிர வேளா வேளைக்கு மூக்கு முட்டச் சாப்பிடவும் முடிந்தது. ஆகவே பத்து நாட்களுக்குப் பின்பும் விவேக் அங்கேயே வேலையைத் தொடர்ந்தான்.



நாட்கள் மாதங்களாகி ஆண்டுகள் ஆயின. தட்டுக்கழுவும் பையனாக வேலைக்குச் சேர்ந்த விவேக் தன் கடுமையான உழைப்பினால் எல்லா வேலைகளையும் கற்றுக்கொண்டு முதலாளியின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமாகி கடைசியில் அந்த விடுதிக்கு அவனே மேலாளர் ஆனான்.

ஒருநாள் விவேக் தனது விடுதியின் முதலாளியைப் பார்க்க சென்றான். அங்கு கேசவன் முதலாளியோடு பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு அவனுக்குக் கேசவன் மீது ஆத்திரம் பொங்கியெழுந்தது. உடனே உள்ளே நுழைந்து கேசவன் சட்டையைப் பிடித்து உலுக்கி அன்று தன்னை சிக்கலில் மாட்ட வைத்ததன் காரணத்தை அறிய விரும்பினான். கேசவனும் முதலாளியும் உரையாடலில் தன்னைப்பற்றிப் பேசுவது கேட்டு சற்று நிதானித்தான்.


அப்போதுதான் அந்த உண்மை தெரியவந்தது. கேசவன் அன்று அவனை வேண்டுமென்றே உணவு விடுதியில் விட்டுவிட்டு சென்றது அவனுடைய நன்மைக்காகவே! அப்படி ஏதாவது செய்தால்தான் அவன் ஏதாவது ஒருவேலையில் அமருவான் என்பதால் விவேக் சிக்கலில் சிக்கும்படி செய்தார். அன்று அவர் சாப்பாட்டுக்குப் பணம் கொடுக்காமல் இல்லை. முதலாளியிடம் பணத்தை முன்னமே செலுத்திவிட்டு விவேக்கை விட்டுப்போவது போல் நாடகம் ஆடினார். முதலாளியும் அதற்கு ஒத்துழைப்பு அளித்தார். விவேக் எதிர்காலத்தில் திருடனாக மாறாமல் உழைப்பாளியாக மாறவே கேசவன் அவ்வாறு செய்தார் என்பதை அறிந்த விவேக் அப்படியே உள்ளே சென்று அவர் கால்களில் வீழ்ந்து வணங்கினான். கேவசனைப் போல் எல்லோரும் செயற்பட்டால் பல ஆதரவற்ற இளைஞர்கள் குற்றவாளியாக மாறாமல் உழைப்பாளிகளாக மாறுவர் என்பதையும் உணர்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

## 82

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!




"பெருசு...! நான் கூலிக்காரன்; எனக்கொண்ணும் தெரியாது. உங்க கட்டாப்புல இருந்து நாப்பது ஏக்கரை மில்லுக்காரங்க வாங்கிட்டாகளாம். வண்டிய விட்டு அடிச்சு உள்ள நிலத்தையெல்லாம் ஒண்ணு சேக்கச் சொல்லியிருக்காக. உங்க சண்டை சத்தத்த அங்க போயி வச்சுக்குங்க; என்னிய வேலை செய்ய விடுங்க"

"ஏண்டா வீட்டுக்குள்ள புகுந்து என் பொண்டாட்டி கையப் புடிச்சு இழுப்ப. கேட்டா- கோட்டுல போயிப் பாத்துக்கன்னு சொல்லுவியாடா? நோலி மகனே! கொன்டேபுடுவேன்; திரும்பிப் போடா"

"ஏ பெருசு! என்ன வாய் வார்த்தையெல்லாம் தடிக்குது? நீதான் ரோசக்காரவம்சமா? நாங்க என்ன சொரணை கெட்டா திரியறோம்? உன் மகன் முத்துமணிதான் இப்ப மில்லுக்குச் சட்டாம்பிள்ள. நோலி மகனேன்னு அவனைக் கேளு. என்னிய ஏன் வையிற?"

மகனை அப்பனுக்குக் காட்டிக் கொடுக்கவும் வந்து எறங்கிட்டான் முத்துமணி.

"ஏலேய் செயராமு...! என்னடா சம்பந்தமில்லாத ஆளுகூடப் பேசிக்கிட்டிருக்க... வேலையப் பாருடா" கட்டாப்புல இருந்து சத்தம் போட்டுக்கிட்டே நசுங்கி நாராக் கிடக்கிற கத்திரிச் செடிக மேல நடந்து வாரான் முத்துமணி.

"சம்பந்தம் இல்லாதவனா? நானா? உன் பெறவிக்கே சம்பந்தப்பட்டவன்டா நானு. உங்க பயலுகள ஒழுங்கா வெளியேறச் சொல்லு. பஞ்சாயத்துக்குக் கட்டுப்படு. என் உசுருள்ள வரைக்கும் இது என் நிலம்"

"எவஞ்சொன்னான்? இது உன் நிலம் இல்ல. என் நிலம். இந்த நிலத்தை மட்டும் இல்ல. கெடாவீரன், ஒத்தவீட்டு மூளி, பரமனாண்டி, உளியன், பொன்னுச்சாமி எல்லார் நெலத்தையும் ஒண்ணு சேத்து ஒப்புரவு செய்யப் போறேன். அதுக்கு இந்த நெலம்தான் ஒரே பாதை. வாக்குவாதம் பண்ணாம வழிய விடு"

"வேணாமுடா மகனே- வேரைப் பகைச்ச பயிரும் ஊரைப் பகைச்ச உயிரும் வீடு சேர முடியாதுடா. வம்பு வேணாம். வெளியேறிக்க"

"ஊரே என்னியப் பகைச்சிருச்சு. இனிமே இந்த ஊரை நான் பகைக்கணுமாக்கும்? உன் கதை முடிஞ்சிருச்சு. ஒழுங்கா உன் தட்டுமுட்டுச் சாமானை எடுத்து வெளியேறிக்க"

"வெளியேறமாட்டன்டா. என்னிய இந்த மண்ணுலயே புதைச்சுட்டு இந்த நெலத்த நீ எடுத்துக்கடா" ரெண்டு கையும் விரிச்சு நெஞ்சைத் தூக்கி நிமித்திக்காட்டி வண்டிக்க முன்னால நின்னுட்டாரு கருத்தமாயி.

கெழவன் கிறுக்கேறிப்போயி நிக்கிறான்னு தெரிஞ்சுபோச்சு முத்துமணிக்கு.

"ஏ கெழவா... வெலகிக்க" உருட்டல் மிரட்டலை ஆரம்பிச்சுட்டான் முத்துமணி.

"ஏலேய்... உனக்கா நான் பெறந்தேன்? எனக்குத்தாண்டா நீ பெறந்த. பயந்துருவனா? ஒண்ணு வண்டிய எடுத்துட்டுப்போ; இல்ல என் மேல ஏத்திட்டுப்போ"

"ஏத்த மாட்டேன்னு நெனச்சுட்டியா?" துணிஞ்சுட்டான் முத்துமணி.

"ஏத்திப்பாரு"

வண்டிக்கு முன்னால வாய்க்கால்ல காலை நீட்டிப் படுத்துட்டாரு கருத்தமாயி. இத எதிர்பாக்கல; திடுக்குன்னு ஆகிப்போச்சு முத்துமணிக்கு. உடனே சுதாகரிச்சுட்டான்.

"செத்த ரத்தம் ஓடற ஒனக்கே இம்புட்டு வீம்பு இருந்தா, பச்சை ரத்தம் ஓடற எனக்கு எம்புட்டுத் திமிரு இருக்கும்? காமிக்கிறேன் கெழவா! காமிக்கிறேன்" விறுவிறு விறுன்னு நடந்து வண்டிக்காரன்கிட்ட வந்தான்.

"ஏத்துறா செயராமு கெழவன் மேல"

அவன் முழிச்சான்; "பயமா இருக்கு"ன்னு ஒரு பார்வை பாத்தான்.

"எது நடந்தாலும் நான் பொறுப்பு; நீ ஏத்துறா"

"எப்படிண்ணே? ஆயிரமிருந்தாலும் அப்பன் இல்லையா...!"

"அப்பனுக்கு ஆயிரம் ரூவா எச்சா வாங்கிக்க. ஏத்துடா"

"யண்ணே... கூலிக்கு உழுகத்தான கூப்பிட்டீக. கூலிக்கு கொலை பண்ணனும்னா அதுக்கு வேற ஆளப் பாரு" சட்டுன்னு எறங்கிப் பதிலை எதிர் பார்க்காம அவன் பாட்டுக்குப் போயிட்டான் செயராமு. சாராயம் குடிச்ச சண்டைச் சேவல் மாதிரி கிறுக்கு ஏறுது முத்துமணிக்கு.

"ஏத்துரா ஏத்து"ன்னு படுத்துக் கெடக்கான் அப்பன்

"தெரிஞ்சதப் பாரு"ன்னு ஓடிப் போயிட்டான் டிரைவரு.

நடுக்காட்டுல நிக்கிறான் முத்து மணி.

இந்த வம்பு நமக்கெதுக்குன்னு அழிஞ்ச கட்டாப்புக்கு வெளிய ஒதுங்கி நிக்கிறாக மில்லு ஆளுக. அன்னைக்குச் சந்தை; பெரும்பாலான ஆளுக ஊருல இல்ல.

"என்னடா பண்றது? முன்வச்ச காலைப் பின்னுக்கு வச்சாக் குதிக் காலை வெட்டிப்புடுவானே மில்லுக் காரன்'- அஞ்சே வினாடியில ஆயிரம் விசயம் யோசிச்ச முத்துமணி படக்குன்னு அவனே ஏறி ஒக்காந்துட்டான் வண்டியில.



படுத்தது படுத்தபடிக்கே இதையெல்லாம் பாத்துக்கிட்டேயிருக்காரு கருத்தமாயி.

பழைய சோளத்தட்டை மோட்டு ஒண்ணு குத்தி வலிக்கறப்பத்தான் கருத்தமாயிக்குத் தெரியுது கட்டுப் போட்ட காலுக்குள்ள ஒரு காயம் இருக்கிற சங்கதி. ஆனது ஆகட்டும்; அவன் இப்ப எடுத்துட்டான் வண்டிய.

"ஏத்துனாலும் ஏத்திருவானோ? ஏத்தட்டும். எமன் கையில சாகிறதுக்கு மகன் கையில சாவோம். எடுக்கிறான் வண்டிய; எடுத்துட்டான். என்னது இது? பதறுது ஒடம்பு. ச்சீ... இந்த ஒடம்புங்கிற கழுதைக்கு இன்னும் உசுரு ஆசை போகலையோ? என்ன பண்றது? இந்த ஒடம்பு உசுரை நம்பி இருக்கு; உசுரு ஒடம்பை நம்பி இருக்கு"

"ஒண்ணைவிட்டு ஒண்ணு போனா உதறத்தான செய்யும் கழுதை. ஒரு வகையில் என் ஆசைய நெறவேத்தி வைக்கிறான் நான் பெத்து வளத்த பெரியவன். செத்தா சொந்த வீட்டுல சாகணும்- இல்ல சொந்த நெலத்துல சாகணுமுன்னு நெனச்சேன்; நெறை வேத்தப் போறான் என் புண்ணிய புத்திரன். பயலுக்குச் செலவு மிச்சம்; இடுகாடு வரைக்கும் தூக்கிட்டுப் போக வேண்டியதில்லை. இந்த வாய்க்காப் பள்ளத்துலயே புதைச்சிட்டுப் போயிரலாம். சத்தம் கூடுது வண்டிக்கு. ஏத்தப்போறான் என்மேல. கண்ணை மூடி மூச்சைக்கட்டிக்கிட்டா பயம் எங்கிட்டுருந்து வரும் பயம்? வாடா... எங்கப்பன் சீனிச்சாமிகூடச் சேத்துர்றா"- கண்ண இறுக்க மூடி தம்கட்டிப் படுத்துட்டாரு. ஆனா சட்டு ன்னு தேஞ்சு போச்சு வண்டிச் சத்தம். "என்னடா... என்னாச்சு? பய பயந்துட்டானா?"

கண்ணு முழிச்சுப் பாத்தாரு கருத்தமாயி. அவரு காலை உரசாமத் தனக்குன்னு ஒரு வழி உண்டாக்கி முன்னப் போகுது வண்டி கிணத்து மேட்டுக்கு. விசுக்குன்னு எந்திரிச்சாரு.

முத்துமணி என்ன முடிவெடுத்துப் போறான்னு குறுகுறுன்னு பாத்தாரு.

"யாத்தே... இவன் குடியக் கெடுக்கப் போறாண்டா சாமி... எந்த மரங்களத் தெய்வமா கும்பிடறாரோ அந்த மரங்கள வேரோட சாய்க்கணும்ங்கிற ஒரே நோக்கத்துல கொலகாரப்பய வண்டி ஓட்டிப்போறான்"னு புரிஞ்சு போச்சு அவருக்கு.

"ஏலே முத்துமணி...! வேணாமுடா. அதுக நம்ம குலசாமிக"- விந்தி விந்தி நடந்த காலுக்கு எங்கிட்டுருந்துதான் அந்த வேகம் வந்துச்சோ தெரியல. கத்திரிச்செடியில விழுந்து உசுரைக் கையில புடிச்சு ஓடுறாரு.

இந்தா இந்தான்னு நெருங் கிட்டான். வாய்க்கா மேடு கடந்தாப் போதும்; வேரோட எட்டி இடிச்சிரலாம் மரங்கள.

### "வேரைப் பகைச்ச பயிரும், ஊரைப் பகைச்ச உயிரும் வீடு சேரமுடியாதுடா"

வண்டி ஓடி வந்த பாதையெல்லாம் தரைமட்டமாகிக் கெடக்கு கத்திரிச் செடி.

ஆத்து மணல்ல பொதைச்ச பொணம், வெள்ளம் வந்ததும் கை காலை மட்டும் வெளிய காமிக்கிற மாதிரி மண்ணுக்குள்ள புதைஞ்சும் கொப்பும் குழையும் மட்டும் நீட்டிக் கெடக்குதுக கத்திரிச் செடிக.

படுத்துக்கெடந்த வாய்க்கால்ல "ஏலே பாவிப்பயலே... ! நிறுத்துடா. தெய்வங்களக் கொல்லாதடா"

அவன் நிறுத்தல; எந்திர யானையக் கொண்டு போறான் மரங்கள ஒட்டி.

"யாத்தே... யப்பே... நான் போறதுக்குள்ள இடிச்சிருவான் போலருக்கே ஈனப்பய மகன்"

பாத்திக்குப் பாத்தி தவ்வி ஓடுறாரு மனுசன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழவிடுதலையை விரைவுபடுத்த தமிழக மக்களே தோள் கொடுங்கள்

## வை. கோபாலசாமி அழைப்பு

(சென்னை)

**தமிழ் ஈழ தேச விடுதலை என்பது நிகழ்ந்தே தீரும். அதனை விரைவுபடுத்துவதும் அதற்குத் தோள் கொடுப்பதும் தொப்புள்கொடி உறவுகளாக தமிழ் நாட்டில் வாழும் தமிழர்களின் தலையாய கடமையாகும் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இன்றைய நிலையில் உலகமெங்கும் வாழும் தமிழர்களும் மரண பூமியில் வதைப்பட்டுக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர்களும் தாய்த் தமிழகத்து மக்களும் குறிப்பாக மாணவர் உலகமும் வேண்டுவதெல்லாம் சுதந்திரத் தமிழ் ஈழத்திற்கான பொதுவாக்கெடுப்பும் இலங்கை அரசு மீது சுதந்திரமான விசாரணையும்தான்.

தமிழ்ஈழ தேச விடுதலை என்பது வரலாற்றில் நிகழ்ந்தே தீரும். அதனை விரைவு படுத்துவதும் அதற்குத் தோள் கொடுப்பதும் தொப்புள் கொடி உறவு தமிழர்கள் வாழும் தமிழ் நாட்டின் தலையாய கடமையாகும். தமிழக முதல் அமைச்சர் இதற்கான ஒரு தீர்மான த்தை சட்ட மன்றத்தில் கொண்டு வந்து சரித்திரத்தில் அழியாத புகழ் தரும் கல் வெட்டாக ஆக்கித்தர வேண்டுகின்றேன்.

இலங்கைத் தீவின் தமிழர் தாயகத்தில் அக்கிரமமாக கடந்த 60 ஆண்டுகளில் திணிக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் அனைத்தும் வெளியேற்றப்படவும் தமிழர்களை துன்புறுத்தி வதைக்கும் சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவமும் பொலிசும் வெளியேற்றப்படவும் தமிழர் வழிபாட்டுத் தலங்களின் அருகே அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைகள் அகற்றப்படவும் வேண்டும்.

இலங்கைச் சிறைகளிலும் வதை முகாம்களிலும் விசாரணையின்றி அடைபட்டுக் கிடக்கும் விடுதலைப்புலிகள் உள்ளிட்ட அனைத்து ஈழத் தமிழர்களையும் விடுவிக்கவும் வீடு வாசல் இழந்து உணவுக்கும் மருந்துக்கும் வழியின்றி துயர்படும் ஈழத்தமிழர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் உள்ளிட்ட சர்வதேச தொண்டு நிறுவனங்களும் ஐ.நா. மன்றமும் நேரிடையாக நிவாரணம் வழங்க வழிவகை செய்யவேண்டும்.

இலங்கை அரசு மீது சுதந்திரமான விசாரணை நடைபெறச் செய்யவும் போராடி விடுதலை பெற்ற பல நாடுகளில் அமைக்கப்பட்டது போன்ற ஒரு இடைக்கால நிர்வாகத்தை ஈழத் தமிழர்களைக் கொண்டே செயற்படுத்துவதற்கான ஏற்பாட்டை ஐ.நா. மன்றம் மேற்கொள்ள வேண்டும்.

ஐ.நா. சபையின் மனிதவுரிமை பிரகடனம் அங்கீகரித்த சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஈழத்தமிழர் தாயகத்தில் உலக நாடுகள் மேற்பார்வையில் இறையாண்மையுள்ள சுதந்திர ஈழத்திற்கான பொதுவாக்கெடுப்பு நடைபெறச் செய்யவும் உலகத்தின் பல நாடுகளில் வசிக்கின்ற புலம்பெயர் ஈழத் தமிழர்கள் அத்தகைய பொதுவாக்கெடுப்பில் அந்தந்த நாடுகளிலேயே தங்களது வாக்கை பதிவு செய்தல் வேண்டும். இவற்றையெல்லாம் ஐ.நா. மன்றம் அதற்கான உரிய ஏற்பாட்டை செய்யவும் வலியுறுத்தி தமிழக சட்டப் பேரவையில் ஒரு தீர்மானத்தை முதல் அமைச்சர் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும்.



வரலாற்றின் பக்கங்களில் வட்டுக் கோட்டை தீர்மானத்தின் தொடர்ச்சியாக வடிக்கப்படும் புதிய பரிமாணமாக அத்தீர்மானம் சரித்திரத் திருப்பமாக அமையும்.

ஈழத்தமிழர் பிரச்சினை யில் 2011 ஆட்சிக்கு வந்தது முதல் இலங் கைக்குப் பொருளாதாரத்தடை உள்ளிட்ட சரியான நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ள தமிழக முதல்வர் துன்பஇருளிலே இருந்து ஈழத்தமிழர்களை மீட்டு அவர்கள் விடியலைத் தரும் தீர்மானத்தை சட்ட மன்றத்தில் நிறைவேற்றிடவேண்டுகிறேன் என அவர் கூறியுள்ளார். (அ-2)

# வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கும்

(கரணவாய்)

தமிழ், சிங்கள புத்தாண்டு வருடப் பிறப்பை முன்னிட்டு பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் நன்மைகருதி நெல்லியடி வர்த்தக சங்கத்திற்குட்பட்ட வியாபார நிலையங்கள் அனைத்தும் நேற்று தொடக்கம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் உள்ள விடுமுறை நாட்களில் வர்த்தகம் செய்வதற்கு நெல்லியடி வர்த்தக சங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக அச்சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

(அ-2-60)

# சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மாங்குள பிரதேசம் ஆகியவற்றிற்கான பிரதி பொலிஸ்மா அதிபர் கபில விஜயசேகர தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராம சேவையாளர்கள், அரச உயர் அதிகாரிகள் , திணைக்கள அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸ் அத்தியட்சகர் ஜானக குணதிலக அறிவித்துள்ளார். (அ-3-267)

# மனித உரிமைகள் கண்காணிப்பகம் அவுஸ்திரேலியாவுக்கு கண்டனம்

அமெரிக்காவின் அனுசரணையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணைக்கு அவுஸ்திரேலியா இறுதி நேரத்திலேயே ஆதரவளிக்கும் தீர்மானத்தை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்ற விசாரணையை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் அவுஸ்திரேலியா இறுதி தருணத்திலேயே முன்வைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது அவுஸ்திரேலியாவின்மீது பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவை பொறுத்தவரையில் இலங்கை விடயத்தில் அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கை அகதிகளை அடிப்படையாக கொண்டே தமது கொள்கையை வகுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கருத்துப்பகிர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சர்வதேச மாக்சியக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெறும் ஜெனீவாவிற்கு பின்னர் என்ற 3 ஆவது கருத்துப்பகிர்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு அண்மையில் அமைந்துள்ள டி.சி.எம். தனியார் கல்வி நிறுவனத்தில் சொ. சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வின் ஆரம்ப உரையினை ஏ.சி. ஜோர்ஜ் வழங்கவுள்ளார். (செ-5)

# ஈழத்தமிழருக்கு ஆதரவாக இந்திய அரசுக்கு வரிகொடா இயக்கம்

## லயோலா கல்லூரி மாணவர்கள் ஆரம்பிப்பர்

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக போராடும் தமிழ்நாட்டு கல்லூரி மாணவர்கள் அடுத்த கட்டமாக இந்திய அரசுக்கான வரிகொடா இயக்கம் நடத்தப் போவதாக தமிழீழ விடுதலைக்கான மாணவர்கள் கூட்டமைப்பைச் சேர்ந்த லயோலா கல்லூரி மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக கடந்த இரண்டு வாரங்களாக மாநிலம் தழுவிய ரீதியில் மாணவர்கள் பலரும் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்ததைத் தொடர்ந்து அனைத்துக் கல்லூரிகளையும் மூடும்படி மாநில அரசு உத்தரவிட்டிருந்தது.

இன்று திங்கட்கிழமை முதல் இந்த கல்லூரிகளை மீண்டும் திறக்க மாநில அரசு முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது. தமிழக மாணவர்களின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்று போராடும் மாணவர்களுக்கான அமைப்பாக உருவாகியிருக்கும் அமைப்புக்களில் ஒன்றான தமிழீழ விடுதலைக்கான மாணவர்கள் கூட்டமைப்பைச் சேர்ந்த லயோலா கல்லூரி மாணவன் பிபிசிக்கு அளித்த செவ்வியில் விளக்கினார்.

போராடும் தமிழக மாணவர்களின் கோரிக்கையை கண்டு கொள்ளாமல் புறக்கணித்த இந்திய நடுவன் அரசுக்கு தமிழ்நாட்டில் இருந்து செல்லும் வரியை தடுப்பதே தங்களின் அடுத்த கட்ட போராட்டம் என்று கூறிய அவர் இதற்காக மாநிலம் தழுவிய அளவில் பரப்புரை செய்யப் போவதாக கூறினார்.

அதேபோல், ஐ.நா மன்றத் தீர்மானம் இலங்கைக்கான சர்வதேச விசாரணை தேவை என்கிற தமிழக மாணவர்களின் கோரிக்கையை உள்வாங்காத அமெரிக்க அரசின் பொருட்களை புறக்கணிக்கும் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாகவும் அவர் பிபிசியிடம் கூறினார். (அ-2)

# யாழ். பிரதேச செயலக மகளிர் தினவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலக மகளிர் தினவிழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் செல்வி பிரபா கந்தசாமி ஐயர், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக கிராம அபிவிருத்தி மாவட்ட உத்தியோகத்தர் திருமதி ந.அ.ஜெயராஜன், கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் செல்வி உதயணி நவரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-5)



மருதங்கேணி கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான அகில இலங்கை தமிழ் தினப்போட்டி அண்மையில் தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்றபோது....

(படம்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தகால துன்பியல் நிலைகளுக்கு நாமும் ஓர் காரணமாக இருக்கலாம்

## அமைச்சர் றிசாத் தெரிவிப்பு

(பூந்தோட்டம்)

எமது தேவைகளை இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி செயற்படுத்தாவிட்டால் இன்னும் பல தசாப்தங்கள் துன்பங்களும் துயரங்களும் தீராத துன்பியல் நிலை காணப்படும் என வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியா அலைகல்லுப்போட்டகுளம் வீரமாமுனிவர் வித்தியாலயத்தை அண்மையில் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

நடைபெற்று முடிந்த துன்பங்களுக்கும் அழிவுகளுக்கும் நாமும் ஏதோ ஒரு வகையில் காரண கர்த்தாவாக இருந்திருக்கலாம். நாங்கள் இந்த சூழலில் புத்திசாதுரியமாக நடந்து கொள்ள வேண்டும்.

எமக்கு தேவைகள் இருக்கின்றது. பிரச்சினைகள் இருக்கின்றது. ஆனால், 30 வருட போராட்டம் எந்த ஒரு தீர்வையும் எதிர்பார்ப்பையும் எமக்கு பெற்றுத் தரவில்லை.

இறுதியில் அழிவுகளும் இழப்புக்களும் மறக்க முடியாத வேதனைகளும் தான் எங்களுக்கு முன்னால் இருக்கின்றது.

எனினும் எமது கடந்த கால அனுபவத்தை கொண்டு எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை சிறப்பாக்கி கல்வியையும் வேலை வாய்ப்பையும் பெற்றுக் கொடுத்து பொருளாதாரத்தில் வளர்கின்ற தார்மீகப் பொறுப்பு எங்களுக்கு இருக்கின்றது.

இம் மக்கள் பல கஷ்டங்களை அனுபவித்து பல குழுக்களாக பிரிந்து அகதிகளாகி அல்லல்பட்டு இன்று சமாதான சூழ்நிலையால் இந்த பிரதேசத்திற்கு வந்து இன்னும் பல கஷ்டங்களுக்கு உள்ளாகியிருப்பதாக நான் அறிந்தேன்.

இந்த நாட்டில் தமிழ் மொழி பேசும் மக்களாக பிறந்து வளர்ந்து மூன்று தசாப்தங்களாக எவ்வளவு தூரம் ஓடினோம். எத்தனை வெடிச் சத்தங்களை கேட்டோம். எத்தனை உயிர்கள் கண்ணுக்கு முன்னால் இறப்பதை கண்டோம் என்பது தெரியும். எங்கள் சமூகமும் சொல்லொணாத் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்தமை எங்களுடைய தலையெழுத்து அல்லது தலைவிதி.

கடந்த 2009 ஆம் ஆண்டு சமாதானம் ஏற்பட்டதன் பின்னர் மூன்று இலட்சம் மக்கள் மெனிக்பாமில் இருந்தார்கள். அதன் அனுபவங்களை அங்கிருந்தவர்களிடம் கேட்டால் தெரியும். அவ்வாறு சோதனை மிக்க வாழ்க்கை தற்போது ஓரளவு குறைந்து நிம்மதியாக வாழுகின்ற அச்சமில்லாமலாவது வாழ்கின்ற நிலையுள்ளது.

தற்போது பிள்ளைகளின் கல்வியைப் பற்றி சந்திக்கின்ற தொழில் வாய்ப்பை தேடுகின்ற தனக்கான வீட்டை அமைக்கின்ற தனது விவசாய குளத்தை புனரமைக்கின்ற ஒரு நிலைப்பாட்டில் நாம் இருக்கின்றோம் என்றார்.

வன்னி அபிவிருத்திக் குழுவின் தலைவராக ஜனாதிபதி என்னை நியமித்தபோது எந்தப் பாரபட்சமும் இன்றி வவுனியா மாவட்டத்தில் இரண்டு மாடிக் கட்டடமாக இருந்தாலும் மூன்று மாடிக் கட்டடமாக இருந்தாலும் கட்டப்பட்டன. அவை மனச்சாட்சியுடன் செயற்படுத்தப்பட்டமை ஆகும். இழந்த இழப்பு எல்லோருக்கும் ஒன்றுதான். எனவே நாம் ஒற்றுமையாக வாழ வேண்டும் எனத் தெரிவித்தார். (அ-2-266)

## முல்லை.பொதுச்சந்தையில் நிறுத்தலில் கருங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு சொந்தமான முல்லைத்தீவு பொதுச்சந்தை மற்றும் சில கடைகளில் நிறுவைக் கருவிகள் முத்திரையிடப்படாமல் இருப்பதுடன் சில கடைகளில் 50g, 100g படிகளுக்கு பதிலாக சைக்கிள் அச்சு, கருங்கல், தூள் பை, தேயிலை பை போன்றவற்றையும் பயன்படுத்தி வருவதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இதனால் பொருட்கள் அளப்பின்போது குறைகள் இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே, இவ்வாறான பிரச்சினையில் இருந்து தம்மை மீட்பதற்கு பொறுப்பு மிக்க அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

## மணவாளக்கோல திருவிழா

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மணவாளக்கோலத் திருவிழா நடைபெறும். அன்றையதினம் அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகம், பரிவார மூர்த்திகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் இடம் பெற்று அதனைத் தொடர்ந்து அம்பாள் உள், வெளி வீதி உலா வந்து அருள்பாலிக்கவுள்ளார். (அ-2)

# நேர்மை மிக்க சமுதாயத்தை கட்டியெழுப்ப முன்வாருங்கள்

## தே.இ.சேவைகள் மன்றம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

நேர்மை மிக்க சமுதாயத்தை கட்டியெழுப்ப இளைஞர்களே முன்வாருங்கள் என தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் இயங்கும் நிஸ்கோவின் பொது முகாமையாளர் ப.பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற நிஸ்கோ பிரிவானது இம் மாவட்டத்தில் வசிக்கின்ற இளைஞர், யுவதிகளுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக இளைஞர், யுவதிகளுக்கு அரச சார்பற்ற பிரதிநிதிகளுக்குமான கலந்துரையாடல் ஒன்றை அண்மையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தியிருந்தது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமானது இந்நாட்டில் அளப்பரிய சேவைகள் ஆற்றி வருகிறது. இந்த மன்றமானது கிராம மட்டத்தில் இளைஞர் கழகங்களை அமைத்து சமய, சமூக வேறுபாடுகள் அற்ற வகையில் இளைஞர்களிடையே மறைந்துள்ள திறமைகளை வெளியில் கொண்டு வருகின்றது.

இம் மன்றத்தின் ஓர் அங்கமான நிஸ்கோவானது இளைஞர்களின் வாழ்வாரத்தை உயர்த்தும் நோக்குடன் நிஸ்கோ பிரிவின் நிதி ஊடாகவும் அரச, அரச சார்பற்ற வங்கிகளின் ஊடாகவும் கடன்களை வழங்கி இளைஞர்களுக்கு சுய தொழிலை ஊக்குவிக்கின்றது எனத் தெரிவித்ததோடு இளைஞர்களை நிஸ்கோ பிரிவுடன் தொடர்பு கொண்டு பயன்பெறுமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

அத்தோடு நிஸ்கோவில் 2ஆயிரத்து 275 உறுப்பினர்கள் அங்கத்தவர்களாக இருப்பதாகவும் 300 இளைஞர்களுக்கு நிஸ்கோ நிதி மூலம் சுய தொழில் கடன் வழங்கி உள்ளதாகவும் அரச வங்கிகளூடாக 56 இளைஞர், யுவதிகளுக்கு தலா ஒவ்வொருவருக்கும் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா சுய தொழில் கடன் பெற்றுக் கொடுத்துள்ளதாவும் தெரிவித்தார்.

மேலும் யாழ்ப்பாணத்தில் மனதை வேதனைப்படுத்தும் விடயங்களே அதிகமாக இடம்பெறுகின்றன. வீதியோரங்களில் அட்டகாசம், பெண்கள் துஷ்பிரயோகம், களவு, பணத்தினை வேண்டி பின்னர் ஏமாற்றுதல், காசோலை மோசடி போன்றவையே அதிகமாக இடம்பெற்று வருகின்றன.

எனவே, இளைஞர்களே உங்கள் கிராமத்திற்கு நற்பெயரை ஏற்படுத்தி அமைதியான சூழலில் வாழ்வதற்கு கிராமத்து பெரியவர்களுடன் இணைந்து மேற்குறித்த விடயங்கள் உங்கள் கிராமத்தில் இடம்பெறா வண்ணம் நேர்மை மிக்க சமுதாயத்தை உருவாக்க முன்வாருங்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# வடக்கில் தேர்தலை நடத்த அரசாங்கம் ஆயத்தம்

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் தேர்தல்களை நடத்துவதற்கு தேவையான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு தேவையான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் அண்மையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்போதும் வடக்குத் தேர்தல்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

வடக்குகில் தேர்தல்களை அரசாங்கம் தாமதப்படுத்தி வருவதாக சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

வடக்கின் சில பகுதிகளில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படாத காரணத்தினால் தேர்தல்களை நடத்துவதற்கு தாமதமாகின்றது.

தற்போது பெருமளவில் நிலக்கண்ணி வெடி அகழ்வுப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. இதனால் விரைவில் தேர்தல் நடத்த முடியும்.

வடக்கில் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டதன் பின்னர் அந்தப் பிரதேச மக்கள் தங்களது பிரதிநிதி ஒருவரை முதலமைச்சராக்கும் சந்தர்ப்பம் கிட்டும் என்றார். (அ-2)

## நாகபூசணி அம்பாள் கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய உற்சவ மூர்த்தி கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 9.15 மணிக்கு நடைபெறும். இந்நிகழ்வினை முன்னிட்டு இன்று காலை 9 மணிக்கு விசேட புண்ணியாவாசனம், கணபதி ஹோமம் ஆரம்பமாகவுள்ளன.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் புண்ணியாவாசனம் 2 ஆம் கால பூஜை ஆரம்பமாகும். மாலை 5 மணிக்கு புண்ணியாவாசனம், நவக்கிரக ஹோமம் போன்ற விஷேட பூசைகள் இடம் பெறும். நாளை மறுதினம் புதன்கிழமை காலை 7 மணி தொடக்கம் விசேட பூசைகளுடன் 9.30 மணிக்கு கும்பாபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து விசேட அலங்காரப் பூசை நடைபெறும் என உரும்பிராய் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ)






கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைமைப் பணிமனையின் செயற்பாடுகள் அண்மையில் புதிய அலுவலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது மங்கல விளக்கேற்றி நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டதையும் செயலகத்தின் பெயர்ப்பலகையினை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானங்கள்



**இலங்கைக்கு எதிராக ஜெனீவா மனித உரிமை கவுன்சில் 22 ஆவது அமர்வில் அமெரிக்கா முன்வைத்த, நிறைவேற்றப் பட்டுள்ள பிரேரணையில் உள்ளடக்கப் பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-**

சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் ஆகியவற்றுக்கு எதிரானவை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அத்து மீறல்கள் குறித்து சுதந்திரமான நம்பகரமான சர்வதேச விசாரணை வேண்டுமென்ற உயர் ஆணையரின் கோரிக்கையை இலங்கை மீதான தீர்மானம் கவனத்தில் கொண்டுள்ளதாக அமெரிக்கத் தீர்மானத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தனது நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் தொகையும் அனைத்து மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந் திரங்களையும் முழுமையாக அனுப விப்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு ஒவ்வோர் அரசுக்கும் உண்டு என்பதை மறுவுறுதி செய்தல்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் தாங்கள் மேற்கொள்ளும் எந்த ஒரு நடவடிக்கையும் சர்வதேச சட்டத் துக்கு இயைந்ததாக, குறிப்பாக சர்வ தேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச அகதிகள் சட்டம் மற்றும் சர்வ்தேச மனிதாபிமானச் சட்டம் இவற்றில் எது பொருத்தமானதோ அதற்கு இயைந்ததாக இருக்க வேண்டியதை அரசுகள் உறுதிப்படுத்த் வேண்டும் என்பதையும் நினைவுகூர்ந்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் மாகாண சபைக்கான தேர்தல்களை 2013 செப் ரம்பரில் நடத்தப் போவதாக இல ங்கை அரசு அறிவித்துள்ளதை வரவே ற்று உட்கட்டமைப்பை மறுவுரு வாக்கம் செய்தல்.

கண்ணிவெடிகளை அகற்றுதல், உள்நாட்டு அகதிகளில் பெரும்பாலா னோரை மறுகுடியமர்த்தல் ஆகிய பணிகளில் இலங்கை அரசு பெற்றுள்ள முன்னேற்றத்தை வரவேற்று அங்கீ கரிக்கும் அதேவேளையில் நீதி, நல்லி ணக்கம் மற்றும் வாழ்வாதார மீட்பு ஆகிய பரப்புகளில் இன்னும் மிகுதி யான பணி காத்திருக்கிறது என்பதைக் கவனத்தில் கொண்டு இந்த முயற்சி களில் பொதுச் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் சிறுபான்மையினப் பிரதிநிதி கள் உள்ளிட்ட உள்ளூர் மக்கள் தொகை யினுடைய முழுமையான பங்கேற்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தல்.

இலங்கை அரசினுடைய கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக் கத்துக்கான ஆணையத்தில் அறிக்கை, அதன் விசாரணை முடிவுகள் மற்றும் பரிந்துரைகளைக் கவனத்தில் கொண்டு, இது இலங்கையில் தேசிய நல்லிணக் கத்துக்கான வழிமுறைக்குப் பங்களிக் கும் சாத்தியம் உண்டு என்பதை ஏற்றுக் கொண்டு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணை யத்தின் பரிந்துரைகளை நிறைவேற்று வதற்கான இலங்கை அரசின் தேசிய நடவடிக்கைத் திட்டத்தையும் அந்த ஆணையத்தின் விசாரணை முடிவுகள் மற்றும் பரிந்துரைகளுக்கான மறு வினையாக அறிவித்துள்ள பொறுப் புறுதிகளையும் கவனத்தில் கொள்ளல்.

ஆணையத்தின் விசாரணை முடிவு கள் மற்றும் ஆக்கபூர்வமான பரிந்து ரைகள் அனைத்தையும் இந்த தேசிய நடவடிக்கைத் திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்பதை குறித்துக்கொள்ளல்.

சட்டவிரோதமான கொலைகள் மற்றும் கட்டாயத் தலைமறைவுகள் குறித்த பரவலான குற்றச்சாட்டுகளை நம்பகமான முறையில் புலன்விசாரணை செய்தல்.

இலங்கையின் வடக்குப் பிரதேசத்தை இராணுவ ஆதிக்கத்திலிருந்து விடுவித் தல், நிலத் தகராறுத் தீர்ப்புக்கான பார பட்சமற்ற அமைப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல்.

காவல் வைப்புக் கொள்கைகளை மறுபரிசீலனை செய்தல், முன்பு சுதந் திரமாகச் செயற்பட்ட பொதுச் சமூக நிறுவனங்களை வலுப்படுத்தல்.

மாகாணங்களுக்கு அதிகார ஒப்ப டைப்பு குறித்து ஓர் அரசியல் தீர்வை எட்டுதல், கருத்துச் சுதந்திரத்துக்கு அனைவருக்கும் உள்ள உரிமையைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல்.

சட்டத்தின் ஆட்சி நிலவத் தேவை யான சீர்திருத்தங்களைச் சட்டமாக்கல் ஆகியவற்றுக்கான தேவை உள்ளிட்ட ஆணையத்தின் அறிக்கையிலுள்ள ஆக்கபூர்வமான பரிந்துரைகளை நினைவுகூர்ந்துள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் ஆகியவற்றுக்கு எதிரான சட்ட மீறல்கள் பற்றிய, எளிதில் புறந்தள்ள முடியாத தீவிரமான குற்றச்சாட்டு களை இந்த ஆணையத்தின் அறிக்கை யும் தேசிய நடவடிக்கைத் திட்டமும் போதுமான அளவு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவில்லை என்பதைக் கவலையோடு குறித்துக்கொள்ளல்.

கட்டாயத் தலைமறைவுகள், சட்ட விரோதமான கொலைகள், சித்திரவதை, கருத்துச் சுதந்திரம், சங்கம் அமைத்தல் மற்றும் அமைதியாகக் கூட்டம் நடத் துதல் ஆகியவற்றுக்கான உரிமைகள் குலைக்கப்படுதல்.

மனித உரிமைப் பாதுகாப்பாளர்கள், பொதுச் சமூக உறுப்பினர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு எதிரான மிரட் டல்கள் மற்றும் பழிவாங்கும் நடவடிக் கைகள், நீதிமன்றச் சுதந்திரம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு உள்ள அச்சுறுத் தல்கள், மதம் அல்லது கோட்பாடு அடிப்படையிலான பாகுபாடு ஆகி யவை உள்ளிட்ட இலங்கையில் நடை பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் பற்றித் தொடர்ந்து வெளிவரும் செய்திகள் குறித்துக் கவலை தெரிவித் துக் கொள்ளல்.

நல்லிணக்கத்துக்கும், நாட்டு மக்கள் தொகையின் அனைத்து உறுப்பினர் களும் மனித உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதற்கும் இன்றியமையாத் தேவையான அரசியல் அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட இலங்கை அரசு வெளிப்படையாக அறிவித்துள்ள பொறுப்புறுதிகளை அந்த அரசுக்கு நினைவுறுத்தல்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகத்தைச் சேர்ந்த தொழில்நுட்பத் தூதுக்குழுவின் பார்வையிடலுக்கு வசதி செய்து கொடுத்த இலங்கை அரசின் முயற்சி களுக்குப் பாராட்டுத் தெரிவித்து உயர் ஆணையர் அலுவலகத்தோடு உரையா டல் மற்றும் ஒத்துழைப்பை அதிகரிக்கும் படி இலங்கை அரசை ஊக்குவித்தல்.

சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் ஆகியவற்றுக்கு எதிரானவை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அத்து மீறல் கள் குறித்து சுதந்திரமான நம்பகமான சர்வதேச விசாரணை வேண்டுமென்ற உயர் ஆணையரின் கோரிக்கையை கவனத்தில் இருத்தி இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பதில் சொல் லும் பொறுப்பை மேம்படுத்த அந் நாட்டு அரசுக்கு ஆலோசனையையும் தொழில்நுட்ப உதவியையும் வழங்கு வது குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவல கத்தில் அறிக்கையையும் அவ்வறிக் கையிலுள்ள பரிந்துரைகள் மற்றும் முடிவுகளையும் குறிப்பாக இடைக் கால நீதிக்குத் தேவையான, இன்னும் அனைத்தளாவிய்தான உள்ளிணைத் துக் கொண்டதன் ஓர் அணுகுமுறை யின் இன்றியமையாத அங்கமாக ஓர் உண்மை தேடும் அமைப்பு வழி முறையை நிறுவுவது தொடர்பான பரிந்துரையையும் வரவேற்கிறது.

உயர் ஆணையர் அலுவலகத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந் துரைகளை நிறைவேற்ற இலங்கை அரசை ஊக்குவிக்கிறது.

மேலும் சர்வதேச மனித உரிமை கள் சட்டம் மற்றும் சர்வதேச மனி தாபிமானச் சட்டம் ஆகியவற்றுக்கு எதிரான அத்துமீறல்கள் என்ற குற்றச்சாட்டுகள் குறித்து சுதந்திரமான நம்பகமான விசாரணையை நடத்த வேண்டுமென்று இலங்கை அரசைக் கோருகிறது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணையத்தின் அறிக் கையில் கூறப்பட்டுள்ள ஆக்கபூர்வ மான பரிந்துரைகளை, பயன்விளையும் வகையில் நிறைவேற்றும்படியும் தனக் குள்ள பொருத்தப்பாடான சட்டபூர்வ மான கடமைகளை நிறைவேற்றத் தேவையான கூடுதல் நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளும்படி யும், இலங்கை மக்கள் அனைவருக் கும் நீதி, சமநிலை, பதில் சொல்லும் பொறுப்பு மற்றும் நல்லிணக்கம் ஆகிய வற்றை உறுதிப்படுத்தத் தேவையான சுதந்திரமான நம்பகரமான நடவடிக்கை களைத் தொடங்குவதற்கான பொறுப் புறுதியை நிறைவேற்றும்படியும் இல ங்கை அரசுக்கு விடுக்கப்பட்ட கோரிக் கையை மீள வலியுறுத்துகிறது.

சிறப்பு நடைமுறைகளுக்கான உரிமை ஆணை பெற்றவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கும்படியும் அவர்களு க்கு அழைப்பு விடுத்தல் மற்றும் அணுகல் உரிமை வழங்குதல் உட்பட நிலுவையில் உள்ள அவர்களின் கோரிக் கைகளுக்கு முறைப்படி மறுவினை யாற்றும்படியும் இலங்கை அரசை ஊக்குவிக்கிறது.

மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவியை இல ங்கை அரசோடு கலந்தாலோசித்து அதன் ஒப்புதலோடு வழங்க உயர் ஆணையர் அலுவலகம் மற்றும் சிறப்பு நடைமுறைகளுக்கான உரிமை ஆணை பெற்றவர்களை ஊக்குவிக்கிறது.

இப்போது முன்வைக்கப்படும் இந்தத் தீர்மானத்தின் செயற்படுத்தல் குறித்து தொடர்புடைய சிறப்பு நடை முறைகளுக்கான உரிமை ஆணை பெற்றவர்களிடமிருந்து உள்ளீட்டைப் பெற்று பொருத்தமான வகையில் நிகழ்நிலை குறித்த வாய்மொழி அறிக் கையை மனித உரிமைகள் குழுவுக்கு அதன் இருபத்துநான்காவது அமர் வில் வழங்கும்படியும் இருபத்து ஐந்தா வது அமர்வில் விவாதத்தைத் தொடர் ந்து ஒரு முழுமையான அறிக்கையை வழங்கும்படியும் உயர் ஆணையர் அலுவலகத்தைக் கேட்டுக் கொள்கிறது.

**அமெரிக்கா முதலில் கொண்டுவந்த வரைபு பிரேரணையில் இருந்து நீக்கப் பட்ட வசனங்கள் வருமாறு:-**

வெளியிலிருந்து வரும் கண் காணிப்பாளர்கள் மற்றும் வல்லுனர் களுக்கு எந்த வகையான தங்கு தடை ளும் அற்ற அனுமதி வழங்கப்பட வேண்டும் எனும் வாக்கிய அமைப்பு முற்றிலும் நீக்கப்பட்டிருக்கிறது.

வெளியக விசாரணை என்பது உள்ளக விசாரணை என மாற்றப்பட் டிருக்கிறது.

பொருத்தமான சர்வதேச விசார ணை எனும் வாக்கியம் முழுமையாக நீக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை அரசை வலியுறுத்து கிறோம் எனும் சொல் ஊக்கப்படுத்து கிறோம் என மாற்றப்பட்டிருக்கிறது.

தேர்தல்கள் நடத்தப்பட்டது, அடிக் கட்டுமானங்களை நிர்மாணித்திருப் பது இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியமர்த்தியிருப்பது போன்ற வற்றை இலங்கை அரசு முன்னெடுத் திருப்பதனை நாம் அங்கீகரித்து வரவேற்கிறோம் எனும் பந்தி முதல் வரைவில் இல்லை. புதிதாக வெளி யான நான்காவது வரைவில் சேர்க்கப் பட்டிருக்கிறது.

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணா அரசுடன் இணைந்தமையால் யுத்தத்தை அரசு வெற்றி கொண்டது

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

கருணா தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசில் இணைந்திராவிடில் யுத்தத்தில் வெற்றி பெற்றிருக்க முடியாது என கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் திணைக்கள மாடிக்கட்டட திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது,

ஆனையிறவு சமரில் விடுதலைப் புலிகளின் வெற்றியை கருணாவே ஈட்டிக் கொடுத்தார். இது போன்று புலிகளின் பல வெற்றிகளுக்கு அவர் காரணமாக அமைந்தார். இறுதி யுத்தத்தில் பிரபாகரன் கொல்லப்பட்ட போது கருணா உலங்குவானூர்தியில் அங்கு சென்று பிர[illegible]ரனின் சடலத்தை அடையாளம் காட்டினார்.

டி.பி. விஜயதுங்க ஜனாதிபதியாக இருந்த போதும் 1994 ஆம் ஆண்டிலும் கிழக்கு படையினரால் மீட்கப்பட்டிருந்த போதிலும் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த தொப்பிகல பிரதேசம் படையினரால் மீட்கப்படவில்லை.

அங்கு படையினரால் நுழைய முடியவில்லை. ஆனால், கருணா அந்த அமைப்பில் இருந்து விலகிய பின்னர் அவர் வழங்கிய தகவலின் மூலமே தொப்பிகலவை படையினரால் மீட்க முடிந்தது.

யுத்தத்தில் அரசாங்கத்துக்கு எதிராக போரிட்ட கருணா நாடாளுமன்றத்தில் இருக்கிறார். ஆனால், யுத்தத்தை வெற்றி கொண்ட சரத் பொன்சேகா சிறையில் இருக்கிறார் என்று நாடாளுமன்றில் எதிர்க்கட்சியினர் குரலெப்பினர்.

கருணா அரசுடன் இணைந்து தகவல் தந்திருக்காவிட்டால் இவ்வளவு விரைவாக யுத்தத்தை முடித்திருக்க முடியாது என்று அவர்களுக்கு நான் பதிலளித்தேன்.

கருணா தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து விட்டதாகவும் அவரை கொழும்புக்கு அழைத்து வந்திருப்பதாகவும் அவரை உங்கள் வீட்டுக்கு அழைத்து வருவதாகவும் இங்கு சமுகமளித்துள்ள அலிசாஹிர் மௌலானா எனக்கு தொலைபேசியில் கூறியிருந்தார்.

அவ்வாறு கருணாவை எமது வீட்டுக்கு அழைத்து வர வேண்டாம் என்றும் அழைத்துவந்தால் நான் கொழும்பில் இருக்க முடியாது என்றும் கூறிய நான் நீங்களும் கவனமாக இருங்கள் என்று மௌலானாவுக்கு சொன்னேன்.

ஆனால், கருணா நாடாளுமன்றத்துக்குவந்தார்.அலிசாஹிர்மௌலானா அமெரிக்காவுக்கு ஓடினார்.

நான் பின்னர் ஒருமுறை அமெரிக்கா சென்ற போது மௌலானாவை சந்தித்து மேற்படி உரையாடிய சம்பவத்தை ஞாபகப்படுத்தினேன் என்றார் அமைச்சர். (அ-2)

# சென்னையில் உள்ள இலங்கை உதவி தூதரகம் கேரளாவிற்கு?

சென்னையில் அமைந்துள்ள இலங்கை உதவி உயர்ஸ்தானிகரகம் கேரளாவில் உள்ள திருவனந்தபுரத்துக்கு மாற்றப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதுடில்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரத்தின் பாதுகாப்பு அதிகாரி, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரொஹான் டயஸ் இலங்கைக்கு அழைக்கப்பட்டு நடத்தப்பட்ட கலந்துரையாடலை அடுத்து இந்த எதிர்பார்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தொடர்ந்தும் தமிழ் உணர்வாளர்கள் இலங்கை தமிழர்களுக்காக போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் சென்னையில் உள்ள உதவி உயர்ஸ்தானிகரக அலுவலகத்தில் இருந்து பணியாற்றுவது கடினமானவிடயம் என்று ரொஹான் டயஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனையடுத்து உதவி ஸ்தானிகரகத்தை கேரளா திருவனந்தபுரத்துக்கு மாற்றும் யோசனை வெளியிடப்பட்டுள்ளது. (அ-2)

# கும்பாபிஷேகம்

(கரணவாய்)

கரணவாய் அண்ணா சிலையடி அருள் மிகு மகா மாரி அம்பிகை ஆலய புரனராவர்த்தன அஷ்ட பந்தன பஞ்ச குண்டபக்ச மஹா கும்பாவிஷேக விஞ்ஞாபனம் இன்று திங்கட்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் புதன் கிழமை வரை நடைபெறும்

அதை தொடர்ந்து மண்டலாபிஷேகம் 15 நாட்கள் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ-2-60)

# முன்னாள் போராளிகள் பலருக்கு வாழ்வாதார உதவிகள் கிடைக்கவில்லை

(கரணவாய்)

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு கடந்த 2011 ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு ஐந்து இலட்சம் ரூபா கடன் திட்டம் வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டு விண்ணப்பப்படிவங்[illegible] பூர்த்தி செய்து பெறப்பட்ட போதும் இது வரையிலும் குறித்த முன்னாள் போராளிகளிற்கு குறித்த கடனுதவி தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இப் போராளிகளில் பெரும்பாலானோர் திருமணமானவர்கள். இந்நிலையில் குறித்த கடனுதவி இது வரையும் வழங்கப்படாமையால் இவர்கள் தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முடியாத நிலையில் பெரும் பொருளாதார பின்னடைவுகளோடு வாழ்வாதாரம் அற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

மேற்படி கடனுதவிக்காக கிராம சேவையாளர் ஊடாக பிரதேச செயலருக்கு விண்ணப்பித்து 3 வருடங்களை கடந்து விட்ட நிலையில் இது குறித்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையினால் மேலும் பல இன்னல்களை இவர்களின் குடும்பங்கள் சந்தித்து வருவதாக குறிப்பிடப்படுகின்றது.

எனவே, இக்குடும்பங்களின் அவல நிலையை கருத்திற் கொண்டு உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கோரப்படுகின்றது.

இதேவேளை, குறித்த போராளி குடும்பங்களிற்கு ஐ.ஓ.எம். நிறுவனத்தினால் நீர் இறைக்கும் இயந்திரம், நீர் அகற்றும் குழாய் கள் என்பன அண்மையில் வழங்க ப்பட்டுள்ளன. (அ-5-60)

# இந்திய உயர்ஸ்தானிகர் தேரர்களை சந்தித்தார்

இலங்கையின் பௌத்த மதத் தலைவர்களை இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா சந்தித்துள்ளார்.

இச்சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

தமிழகத்தில் அண்மையில் இரண்டு பௌத்த துறவிகள் தாக்கப்பட்டமை தொடர்பில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது கருத்துரைத்த அசோக் கே காந்தா, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில் தொடர்ந்தும் சுமுகநிலை உருவாக வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். அத்துடன் தமிழகத்தில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாத வண்ணம் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

அத்துடன் இலங்கையின் பௌத்த மக்கள் தமிழகத்தின் ஊடாக இந்தியாவுக்கு சென்று வழிபாடுகளை நடத்துவதற்கான உகந்த சூழ்நிலை ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் தமிழகத்தில் பௌத்த துறவிகள் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு அவர் இந்தியாவின் சார்பில் தமது வருத்தத்தை இதன்போது வெளியிட்டார். (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2013.03 25

★ 1584- வேர்ஜீனியா மாநிலத்தை பயன்படுத்த அல்லது சுரண்ட சேர் வால்ட்டர் ரேலி காப்புரிமம் பெற்றார்.

★ 1634- மேரிலாந்துக்கு முதலாவது குடியேறிகள் வந்தனர்.

★ 1655- டைட்டான் என்ற சனிக் கோளின் மிகப்பெரிய சந்திரனை கிறிஸ்டியான் ஹைஜன்ஸ் கண்டுபிடித்தார்.

★ 1807- அடிமைகளை வர்த்தகம் செய்வது ஐக்கிய இராச்சியத்தில் சட்டம் மூலம் தடை செய்யப்பட்டது.

★ 1821- (ஜூலியன் நாள்காட்டி) ஒட்டோமான் பேரரசுக்கு எதிராக கிரேக்கர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர். கிரேக்க விடுதலைப் போர் ஆரம்பமானது.

★ 1857- பிரெஞ்சுக்காரரான லியோன் ஸ்கொட் ஒலியை பதிவு செய்யும் கருவிக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1918- பெலாரஸ் மக்கள் குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1941- இரண்டாம் உலகப் போர்: அச்சு அணி நாடுகள் அமைப்பில் யூகொஸ்லாவியா இணைந்தது.

★ 1949- எஸ்தோனியா, லாத்வியா மற்றும் லித்துவேனியா ஆகியவற்றைச் சேர்ந்த 92 ஆயிரம் பேர் சோவியத் அதிகாரிகளினால் சோவியத் ஒன்றியத்தின் பல ஒதுக்கமான இடங்களுக்கு கட்டாய வேலைக்காக அனுப்பப்பட்டனர்.

★ 1953- ஆந்திர மாநில அமைப்பு பற்றி அதிகாரப்பூர்வமான பிரகடனத்தை ஜவகர்லால் நேரு நாடாளுமன்றத்தில் வெளியிட்டார். ஆந்திரத் தலைநகர் ஆந்திர எல்லைக்குள்ளேயே அமையும் என அறிவித்தார்.

★ 1954- முதலாவது வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை RCA நிறுவனம் வெளியிட்டது. (12" திரையளவு, விலை ஆயிரம் டொலர்)

★ 1957- மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாந்து மற்றும் லக்சம்பேர்க் ஆகியன இணைந்த ஐரோப்பிய பொருளாதார சமூகம் உருவாக்கப்பட்டது.

★ 1965- மனித உரிமைவாதி மார்ட்டின் லூதர் கிங் தனது 4-நாட்கள் 50-மைல் எதிர்ப்புப் பயணத்தை முடித்துக் கொண்டார்.

★ 1971- வங்காளதேச விடுதலைப் போரில் பாகிஸ்தான் இராணுவம் கிழக்கு பாகிஸ்தானுக்கு எதிரான தேடுதலொளி நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

★ 1975- சவுதி மன்னர் ஃபைசால் தனது மருமகனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

★ 1990- நியூயோர்க் நகரில் சட்டமுரணான சமூக விடுதி ஒன்றில் இடம்பெற்ற தீயில் சிக்கி 87 பேர் உயிரிழந்தனர்.

★ 1992- சோவியத் விண்வெளிவீரர் செர்கே கிரிக்காலொவ் மீர் விண்வெளி நிலையத்தில் 10 மாதங்கள் தரித்திருந்துவிட்டு பூமி திரும்பினார்.

### பிறப்பு

★ 1914- நோர்மன் போர்லாக், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர் (இ.2009)

### இறப்பு

★ 1914- பிரெடெரிக் மிஸ்ட்ரால், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சுக் கவிஞர் (பி.1830)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் ஊழியர் சேமலாப நிதி

பணி செய்கின்ற அனைவரும் தமது ஓய்வுக்காலத்தை சிறப்பாக அமைத்துக் கொள்வதற்காக உருவாக்கப்பட்டதே சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும். இச் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களாக கீழ்வருபவைகளை நாம் குறிப்பிடலாம்.

1. அரச ஓய்வூதியம்- அரச நிரந்தரப் பணியாளர்களுக்கானது

2. அரசசேவை சேமலாப நிதியம் (PSPF) அரச நிரந்தரமற்ற தற்காலிக பணியாளர்களுக்கானது.

3. பங்களிப்பு ஓய்வூதியம்- தனியார் துறையினரால் பங்களிப்புச் செய்யப்பட்டு பெறப்படும் ஓய்வூதியம்.

4.ஊழியர் சேமலாப நிதியம் (EPF), ஊழியர் நம்பிக்கை நிதியம்(ETF)- தனியார்துறை,கூட்டுறவுத்துறை, கூட்டுஸ்தாபனம் (பொதுத்துறை) பணியாளர்களுக்கானது.

இந்த வகையில் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் ஒன்றான ஊழியர் சேமலாப நிதியினைப் பற்றி எடுத்து நோக்குவோமாயின் ஊழியர் சேமலாப நிதி என்பது இலங்கையில் 1958 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க சட்டமூலம் நடைமுறைக்கு வந்ததுடன் காலத்திற்குக்காலம் பல திருத்தச் சட்டமூலங்களையும் கொண்டுள்ளது. அரச ஊழியர்கள் ஓய்வூதியம் பெறுவது போல் தனியார் துறை ஊழியர்களுக்கும் பாதுகாப்பு அவசியம் என உணரப்பட்டதன் விளைவாக உருவாக்கப்பட்ட இந்நிதியம் இன்று மிக முதன்மை வாய்ந்த ஒரு திட்டமாகக் காணப்படுகின்றது. இது பணியாளர்கள் உழைக்கும் போதே சேமித்து தமது முதுமைக் காலத்தை வளமாக்கும் ஒரு திட்டமாகும்.

ஒவ்வொரு தனியார் துறை ஸ்தாபனங்களும் தம்மிடம் பணியாற்றும் ஒவ்வொரு பணியாளர்களுக்கும் இந்நிதியினை செலுத்துதல் வேண்டும். நிரந்தர, தற்காலிக, அமைய, துண்டு அடிப்படை, ஒப்பந்தம் என்கின்ற எந்த வகையான பணியாளர்களாயிருப்பினும் அவர்கள் தமது சேவைக்காக பெறுகின்ற பணமாயினும் சரி அல்லது வேறு வகையிலான கொடுப்பனவாயினும் சரி அதற்கு அவர்கள் சார்பில் அவர்கள் வேலைக்குச் சேர்ந்த திகதியில் இருந்து ஊழியர் சேமலாப நிதி செலுத்துதல் வேண்டும். தொழிலின் தன்மை கவனத்திற்கெடுக்கப்பட வேண்டிய அவசியமில்லை. தொழில் தருநர் தொழில் ஆரம்பித்ததும் தொழில் அலுவலகத்திற்கு சமூகமளித்து D, D இணைப்புப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி சமர்ப்பிப்பதன் மூலம் தொழில் தருநர் இலக்கத்தை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும். இவ் இலக்கம் அந்தந்த மாவட்டங்களுக்குரிய ஆங்கில எழுத்துக்களையும் உள்ளடக்கும். உதாரணமாக யாழ்.மாவட்டத்திற்கு இலக்கத்துடன் J, வவுனியாவுக்கு L, கொழும்பிற்கு A,B என வெவ்வேறு எழுத்துக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**இளைப்பாறிய உதவித் தொழில் ஆணையாளர் அமரர் சி. முத்துக்குமாரசுவாமியின் 31 ஆவது நினைவு நாளை (23.03.2013) முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

உதாரணமாக யாழ்.மாவட்ட தொழில் தருநர் ஒருவரை பதிவு செய்யும் போது அவருக்கு 6112/ J என இலக்கம் வழங்கப்படின் அவர் தனது பணியாளருக்கு அங்கத்துவ இலக்கத்தினை ஒதுக்கி வழங்கவேண்டும். அவரிடம் மூவர் பணியாற்றின் 6112/ J/1, 6112/ J/2,6112/ J/3 என வழங்குவார். இவர்களில் யாராவது ஒருவர் விலகினால் அவரது இலக்கம் வேறு ஒருவருக்கும் வழங்கப்படலாகாது. இவ்வாறு பதிவு செய்த ஸ்தாபனம் பணியாளர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியின் பங்களிப்பினை மாதாந்தம் மத்திய வங்கிக்கு C படிவத்துடன் காசோலையாகவோ அல்லது காசுக்கட்டளையாகவோ அனுப்பி வைத்தல்வேண்டும். ஒருமாதத்திற்குரிய காசோலை அடுத்த மாதம் முடிய முன்னர் மத்திய வங்கிக்கு கிடைத்தல் வேண்டும். ஜனவரி 2013இற்குரிய காசோலை பெப்ரவரி 28 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கவேண்டும். அவ்வாறு கிடைக்காது மார்ச் முதலாம் திகதி கிடைப்பின் 5 வீதம் தண்டம் அறிவிடப்படும்.

தண்டப்பணம் பின்வருமாறு கணக்கிடப்படும்

1-10 நாட்கள் வரை 5%,10 நாட்கள் - 1 மாதம் 15%1 மாதம் - 3 மாதம் 20%,3 மாதம் -6 மாதம் 30%, 6 மாதம்- 12 மாதம் 40%,12 மாதத்திற்கு மேல் 50%

ஒவ்வொரு ஸ்தாபனமும் பதிவின் பின் தமது பணியாளர்கள் அனைவருக்கும் தவறாது ஊழியர் சேமலாப நிதியினைச் செலுத்தி வருதல் வேண்டுமென்பதுடன் அங்கத்தவர்கள் தமக்குரிய படிவங்களான A, B & H என குறிப்பிடப்படுகின்ற அங்கத்துவப் படிவங்களைப் பூரணப்படுத்தி மாவட்டத் தொழில் அலுவலகத்தில் சமர்ப்பித்தல்வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட படிவங்களில் அங்கத்தவரிடம் சமர்ப்பிப்பதற்காக தொழில் தருநரிற்கு B படிவத்தை அனுப்புவதுடன் A,H படிவங்களை தலைமைக் காரியாலயத்தின் மத்திய கோவைப் பிரிவிற்கு அனுப்பி கோவைப்படுத்தப்படும். குறிப்பிட்ட அங்கத்தவர் ஊழியர் சேமலாப நிதியை மீளப் பெறும்போது இவ் A, H படிவங்கள் மூலம் அங்கத்தவர் உறுதி செய்யப்பட்டு நிதி மீளளிக்கப்படும்.

இதில்

A படிவம்- உறுப்பினர் தொடர்பான விபரங்கள்,B படிவம்- மீளப் பெறும் போது சமர்ப்பிக்கப்படும் உறுதிப்படுத்தல் படிவம்,H படிவம்- பின்னுரித்தாளி/ நியமனதாரரை குறிப்பிடும் படிவம்

**ஊழியர் சேமலாப நிதி கணிப்பிடும் முறை**

ஒரு பணியாளரை அங்கத்தவராக இணைத்துக்கொண்டதும் அவரது மொத்த சம்பாத்தியத்திலிருந்து 8% இனை கழித்தெடுத்து தொழில் தருநர் தனது பங்களிப்பான 12% இனையும் சேர்த்து மொத்தமாக 20% இனை அங்கத்துவர் சார்பில் மத்திய வங்கிக்கு அனுப்பிவைத்தல்வேண்டும்.

அங்கத்தவர்களால் நியமிக்கப்படும் நியமனதாரரை/ பின்னுரித்தாளியை அவர் மாற்ற விரும்பின் தொழில் அலுவலகத்திற்கு வந்து I என்ற படிவத்தினால் முன்னைய நியமனதாரரை இல்லாதொழித்து J என்ற படிவத்தின்மூலம் புதிய நியமன தாரரை நியமிக்கலாம். ஒருவர் எத்தனை ஸ்தாபனங்களிலும் மாறி மாறிக் கடமையாற்றலாம். கடமையாற்றும் இடங்களில் தனக்குரிய ஊழியர் சேமலாபநிதியை செலுத்துதல் வேண்டும்.

தொழில் தருநர் தன்னிடம் கடமையாற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும் ஊழியர் சேமலாப நிதியை செலுத்துவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். தொழிற் பரிசோதனைகட்கென தொழில் உத்தியோகத்தர் ஸ்தாபனங்களுக்கு சமுகமளிக்கும் போது பரிசீலனைக்கு உதவுவதுடன் வரவுப் பதிவேடு, சம்பளப்பதிவு, சேவைப்பதிவேடுகள் என்பவற்றுடன் ஊழியர் சேமலாபநிதி செலுத்தியமைக்கான சான்றுகளையும் மத்திய வங்கி பற்றுச்சீட்டுக்களையும் சமர்ப்பித்தல் வேண்டும். பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்படவில்லையாயின் அவர் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்பட்டு இந்நிதியினை செலுத்துமாறு தொழில் தருநர் கோரப்படுவார். அவ்வாறு செலுத்தவில்லையாயின் நீதிமன்ற நடவடிக்கைகளினூடாக இந்நிதி அறவிடப்பட்டு மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்படும்.

திருமதி நீலலோஜினி ஜெகதீஸ்வரன்
உதவித் தொழில் ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(தொடரும்)

# கொக்கிளாயில் 25 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்கப்படவில்லை

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கொக்கிளாய் கிழக்கு ,கொக்கிளாய் மேற்கு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து 27 வருடங்களின் பின்னர் தம்முடைய சொந்த மண்ணில் மீள்குடியேறி, வசித்து வரும் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களில் 25 குடும்பங்கள் தங்குவதற்கு கூட தற்காலிக வீடுகள் அற்ற நிலையில் அல்லலுற்று வாழ்ந்து வருகின்றனர்.

அப்பிரதேசங்களில் இவ் 25 குடும்பங்களில் சிறு பிள்ளைகளை கொண்ட குடும்பங்கள், விதவைகளை கொண்ட குடும்பங்கள், பெண்கள் தலைமைத்துவம் வகிக்கும் குடும்பங்கள், ஊனமுற்றோரை கொண்ட குடும்பங்கள், தாய், தந்தையரை இழந்த குடும்பங்கள் போன்றவர்களே உள்ளடங்குகின்றன.

இதில் இறுதி யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தமது சொந்த இடத்திற்கு மீள்குடியேறிய மக்களே தங்குவதற்கு தற்காலிக வீடுகள், அடிப்படை வசதிகள் அற்றநிலையில் அல்லலுற்று வாழ்ந்து வருகின்றனர்.

அப்பிரதேசங்களில் என்.ஆர்.சி, சோ ஆ நிறுவனங்கள் மக்களுக்கு எவ்வாறான உதவிகள் வழங்கப்படவேண்டும் என கண்டறியாது வெளிநாட்டு வசதி மற்றும் வசதிபடைத்த மக்களுக்கே உதவியை வழங்குவதாக அம்மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் அவர்கள் தற்காலிக வீடுகள் கூட இல்லாத நிலையில் இரவு நேரங்களை மரங்கள் மற்றும் வெற்று கட்டடங்கள் போன்றவற்றிலேயே கழிக்கின்றனர்.

மீள்குடியேறி 2 வருடம் கழிந்த பின்னரும் இன்னமும் வீடு நிர்மாணித்து கொடுக்கப்படாமையால் அம்மக்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

வெளிப்பதிவுடன் இப்பகுதிக்கு வந்து மீள்குடியேறிய 1, 2 அங்கத்தவர்களை கொண்ட குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் முகாம்களில் இருந்துவிட்டு வந்து மீள்குடியமர்ந்த அதே அங்கத்தவர்கள் தொகை கொண்ட குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்கப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.எனவே உரிய தரப்பினர் மேற்குறித்த பிரதேசங்களில் யாருக்கு உதவி வழங்க வேண்டும் என்பதை ஆராய்ந்து அல்லலுறும் மக்களுக்கு உரிய தீர்வினை பெற்றுக்கொடுக்குமாறு உரிய அதிகாரிகளை அம்மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (அ-3-267)

# லண்டன் இளையோரின் போராட்டம் நிறைவு

## இந்திய தூதரக அதிகாரிகளிடம் மனுவும் கையளிக்கப்பட்டது

தமிழீழ விடுதலைக்காக தாய்த் தமிழக மாணவர் சமூகம் முன்னெடுத்துவரும் தொடர் முழக்கப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் தமிழீழ மக்களுக்கான உரிய அரசியல் தீர்வை வலியுறுத்தியும் 6 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து லண்டனில் தமிழ் இளையோர்கள் முன்னெடுத்து வந்த கவனயீர்ப்பு உண்ணாவிரதப் போராட்டம் மகஜர் கையளிப்புடன் தற்காலிகமாக நிறைவு பெற்றது.

கவனயீர்ப்பு உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்கும் மாணவர்கள் சர்வதேச நாடுகள், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் இந்திய அரசிடமும் முன்வைத்துள்ள கோரிக்கைகள் வருமாறு,

சுயாதீன சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும், தமிழீழத்திற்கான பொது வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும், தமிழர் தாயகத்தின் மீது அரசால் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் மனிதவுரிமை மீறல்களை தடுக்கும் முகமாக பாதுகாப்புப் பொறிமுறை ஐக்கிய நாடுகள் சபையின் மேற் பார்வையில் உடனடியாக உருவாக்கப்பட வேண்டும்.

அரச படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன போராளிகள் மற்றும் பொதுமக்களின் விபரங்களை உடனடியாக வெளிப்படுத்த வேண்டும். காலவரையறை இன்றி தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள், காணிச் சுவீகரிப்புக்கள், வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்படுவது போன்ற செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட்டதோடு அங்கு நிலைகொண்டிருக்கும் அரச படைகளும் அகற்றப்படவேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து கோரிக்கைகளையும் சர்வதேச நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையும் ஏற்றுக் கொண்டு ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கு இந்திய வல்லரசு தனது முழுமையான ஆதரவினை வழங்கி தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு நிரந்த அரசியல் தீர்வை கண்டு தமிழர்கள் தமது தாயகத்தில் சுய நிர்ணய உரிமையுடன் சுதந்திரமாக வாழ வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற 6 கோரிக்கைகள் அடங்கிய மனு இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் கையளிப்பபட்டது.(அ-2)

# தமிழக மாணவர்களுக்கு ஆதரவாக கவனயீர்ப்பு

தமிழ் இளையோர் அமைப்பினரால் லண்டன் நகரில் வேற்றின மக்களை ஈர்க்கும் வகையில் அண்மையில் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

இப் போராட்டத்தில் இளையோர்கள் கடும் குளிரையும் பொறுப்பெடுக்காமல் கலந்து கொண்டார்கள். சுட்டு படுகொலை செய்யப்பட்ட தமிழீழத் தேசியத் தலைவரின் இளைய மகனான பாலச்சந்திரனின் உருவப் படத்தையும் தமிழீழத் தேசியக் கொடியையும் வாசகங்களையும் தாங்கி கொட்டொலிகளை எழுப்பியும் தமிழ் நாட்டு கல்லூரி மாணவச் சகோதரர்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையிலும் எழுச்சியாக இப்போராட்டம் இடம்பெற்றது. (அ-2)

# பூனை கடித்து மாணவன் பலி

(தும்பளை)

பூனைகடித்து மாணவன் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று புதுக்குடியிருப்பு வள்ளிபுனத்தில் இடம்பெற்றுள்ளது.இச்சம்பவம் நேற்று முன்தினம் நேர்ந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது மு/ வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி கற்கும் கணபதி சசிகரன் (வயது-15) என்ற மாணவன் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பூனைக்கடிக்கு அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த வேளை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (அ-3-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழப்பிரச்சினை தீர்வுக்கு வாக்கெடுப்பு தீர்மானத்தை கொண்டு வாருங்கள்

## தமிழக முதல்வருக்கு வைகோ கடிதம்

இலங்கைத் தமிழர்கள் பிரிவினை கேட்கவில்லை. தாங்கள் இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெறுவதற்கே போராடுகின்றார்கள் என வைகோ தெரிவித்துள்ளார். இலங்கையில் சுதந்திரமான சர்வதேச விசாரணைக்கும் தமிழீழத்திற்கும் பொது வாக்கெடுப்பிற்கும் தமிழக சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என கோரி தமிழக முதல்வருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

முள்ளிவாய்க்கால் பேரழிவுக்குப் பின்னரும் இக்கொடுமைகள் இன்றளவும் தொடருகின்றன என்பதை அசைக்க முடியாத ஆதாரங்களுடன், சாட்சியங்களுடன் அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகம் பெப்ரவரி 26 ஆம் திகதி அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

இத்தகைய துன்ப நரகத்திலிருந்து ஈழத் தமிழர்கள் விடுபட மானத்தோடும் உரிமையோடும் அமைதியாக வாழ ஒரே ஒரு தீர்வு தான் உள்ளது. அதுதான் சுதந்திரத் தமிழீழ தேசமாகும்.

இலங்கைத் தீவில் தமிழர்கள் பிரிவினை கேட்கவில்லை. இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெறுவதற்கே போராடுகிறார்கள். இக்கொடுமைகள் தொடர்ந்தது தான். 1976 மே 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் இறையாண்மையுள்ள சுதந்திர தமிழீழ தேசம் என்று அனைத்துத் தமிழ் அமைப்புக்களை ஒருங்கிணைத்து தந்தை செல்வா பிரகடனம் செய்ய காரணம் ஆயிற்று.

இந்திராகாந்தி அம்மையார் காலத்திற்குப் பின்னர் காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசு ஈழத் தமிழர்கள் விடுதலைப் புலிகள் விருப்பத்திற்கு மாறாக அன்றைய இந்திய அரசியலில் ஏற்பட்ட போபால் ஊழல் சிக்கலில் இருந்து மக்கள் கவனத்தைத் திசை திருப்ப இந்திய- இலங்கை ஒப்பந்தத்தைத் திணித்தது. ஒப்பந்தத்தின் மை காய்வதற்குள்ளாகவே ஜனாதிபதி ஜெயவர்த்தன வடக்கு- கிழக்கு இணைப்புக்கு எதிர்ப்பு என அறிவித்தார்.

2009 ஆம் ஆண்டு மே மாத இறுதியில் ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசை வெகுவாகப் பாராட்டி 29 நாடுகளின் வாக்குகளைப் பெற வைத்து தீர்மானத்தை நிறைவேற்றிய துரோகத்தை இந்திய அரசு செய்தது.

கடந்த ஆண்டும் அதே துரோகத்தைச் செய்ய முனைந்த போது தமிழகம் வெகுண்டு எதிர்த்ததால் வெளிப்படையாக துரோகம் செய்ய முடியாமல் அமெரிக்காவின் அவைக்கு உதவாத தீர்மானத்தையும் நீர்த்துக் போகச் செய்தது.

இந்த ஆண்டும் தமிழக மாணவர்கள் எரிமலையாக சீறி எழுந்த பின்னரும் தமிழக முதலமைச்சர் மார்ச் மாதம் 19 ஆம் திகதி சரியான வரலாற்று ஆதாரங்களோடு திட்டவட்டமான கோரிக்கையை மத்திய அரசுக்கு முன்வைத்த பின்னரும் கூட அமெரிக்கத் தீர்மானத்தில் இடம்பெற்று இருந்த சுதந்திரமான சர்வதேச விசாரணை கோரிக்கையையும் நீக்கச் செய்தது.

கரிய இரவுக்குப் பின்னர் பொழுது விடிவது இயற்கையின் நியதி என்பது போல் ஈழத் தமிழர்கள் சுமக்கின்ற கொடும் துயரத்திற்குப் பின்னர் தமிழ் ஈழதேச விடுதலை என்பது வரலாற்றில் நிகழ்ந்தே தீரும். அதனை விரைவுபடுத்துவதும் அதற்குத் தோள் கொடுப்பதும் தொப்புள் கொடி உறவு தமிழர்கள் வாழும் தமிழ் நாட்டின் தலையாய கடமையாகும்.

எனவே, தமிழக முதலமைச்சர் இதற்கான ஒரு தீர்மானத்தை சட்டமன்றத்தில் கொண்டு வந்து சரித்திரத்தில் அழியாத புகழ் தரும் கல்வெட்டாக ஆக்கித்தர வேண்டுகின்றேன்.

இலங்கைத் தீவின் தமிழர் தாயகத்தில் கடந்த 60 ஆண்டுகளில் திணிக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் அனைத்தும் வெளியேற்றப்படவும் இலங்கை இராணுவமும் பொலிஸாரும் வெளியேற்றப்பட வேண்டும்.

தமிழர் வழிபாட்டுத் தலங்களின் அருகே அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைகள் அகற்றப்படவும் இலங்கைச் சிறைகளிலும் வதை முகாம்களிலும் விசாரணையின்றி அடைபட்டுக் கிடக்கும் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட அனைத்து ஈழத் தமிழர்களையும் விடுவிக்க வேண்டும்.

போராடி விடுதலை பெற்ற பல நாடுகளில் அமைக்கப்பட்டது போன்ற ஒரு இடைக்கால நிர்வாகத்தை ஈழத் தமிழர்களைக் கொண்டே செயற்படுத்துவதற்கான ஏற்பாட்டை ஐ.நா. மன்றம் மேற்கொள்ளவும் ஐ.நா. சபையின் மனித உரிமை பிரகடனம் அங்கீகரித்த சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஈழத் தமிழர் தாயகத்தில் உலக நாடுகள் மேற்பார்வையில் சுதந்திர ஈழத்திற்கான பொது வாக்கெடுப்பு நடைபெறச் செய்யவும் புலம் பெயர் ஈழத் தமிழர்கள் அத்தகைய பொது வாக்கெடுப்பில் அந்தந்த நாடுகளிலேயே தங்களது வாக்கை பதிவு செய்யவும் ஐ.நா. மன்றம் அதற்கான உரிய ஏற்பாட்டை செய்யவும் வலியுறுத்தி தமிழக சட்டப் பேரவையில் ஒரு தீர்மானத்தை முதலமைச்சர் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (அ-5)

## இனம் தெரியாத குழு அராஜகம்; வீட்டுக் கண்ணாடி,கதவு உடைப்பு

இனம் தெரியாத சுமார் 8 பேர் கொண்ட குழுவினரால் வீட்டின் கண்ணாடி, கதவு என்பன அடித்து உடைக்கப்பட்டதோடு வீட்டில் இருந்தவர்களும் 'எச்சரிக்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் யாழ்.கொக்குவில் பிரதேசத்தில் முதலியார் வீதியிலுள்ள வீடொன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. வாள் மற்றும் இரும்புக் கம்பிகளுடன் அத்துமீறி வீட்டினுள் நுழைந்த குறித்த இனம் தெரியாத நபர்கள் வீட்டின் கண்ணாடி மற்றும் கதவு என்பனவற்றினை அடித்து உடைத்ததோடு வீட்டு வளவினுள் நின்ற பெரும் தொகையான கமுகு மரங்களையும் வெட்டித் தறித்துள்ளனர்.

குறித்த வீட்டினுள் அத்துமீறி நுழைந்த நபர்கள் எதிர்பார்த்து வந்த நபர் வீட்டினுள் இல்லாத காரணத்தினால் வீட்டிலிருந்தவர்களை கடுமையாக எச்சரித்து விட்டு சென்றுள்ளனர்.சுமார் 15 நிமிடங்கள் இடம்பெற்ற இந்த அராஜகம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

## எழுத்தாளர்களுக்கான நூற்பரிசுப் போட்டி

வடமாகாணபண்பாட்டுஅலுவல்கள்திணைக்களத்தினால் வடமாகாண எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் வருடாந்தம் நடத்தப்படும் சிறந்த நூற் பரிசுப் போட்டி இவ்வருடமும் நடத்தப்படவுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கும் 'அவ்வாண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு இடையில் அச்சில் முதற் பதிவாக வெளிவந்த நூல்கள் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

இதற்கானவிண்ணப்படிவத்தினைசங்கானை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் பெற்று அதனைப் பூரணப்படுத்தி நூற்பிரதி ஒன்றையும் இணைத்து பணிப்பாளர், பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், வலயக்கல்வி திணைக்களம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (அ-3-30)

# மலேசிய அரசின் முடிவு எமக்கு ஏமாற்றம் அளிக்கிறது

### *மலேசியத் தமிழர்கள்*

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் 22 ஆவது கூட்டத் தொடரின் வாக்கெடுப்பின் போது இந்தியா உட்பட 25 நாடுகள் இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன.

மலேசியா உட்பட 8 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. நடுநிலை வகித்ததன் மூலம் மலேசியா இலங்கையில் நடந்த இனப்படுகொலை, மனித உரிமை மீறல்களுக்கு மலேசிய அரசாங்கம் ஆதரவு வழங்குகிறது என்று தெரிகிறது.

இங்கே தமிழர் அமைப்புக்கள் பல மறியல், அரசாங்கத்திடம் மகஜர் வழங்கியும் கூட மலேசியா இந்தத் தீர்மானத்திற்கு நடுநிலை வகித்ததன்மூலம் மலேசியத் தமிழர் சமுதாயத்திற்கு பெரும் ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் தருவதாக மலேசியத் தமிழர்கள் தெரிவித்தனர்.

இது மட்டுமின்றி அண்மையில் நிர்வகிக்கப்பட்ட இலங்கை விவகாரத்துக்கான மலேசிய நாடாளுமன்ற கண்காணிப்புக்குழு பிரதமரிடம் ஐ.நா.வின் தீர்மானத்திற்கு மலேசியா ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டபோதும் அரசாங்கம் நடுநிலை வகித்தது பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இது மலேசியத் தமிழர் சமூகத்தினரிடம் அதிருப்தி அலையை ஏற்படுத்தியுள்ளது.எதிர்வரும் காலத்தில் இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக மலேசியா குரல் எழுப்பி உலக சமுதாயத்தின் நன்மதிப்பை பெற வேண்டும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ-2)

# வெளிநாட்டு பெண்கள் 12 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கொழும்பில் இரவு களியாட்ட விடுதியில் பணியாற்றி வந்த வெளிநாட்டுப் பெண்கள் 12 பேரை கொள்ளுப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் மற்றும் கொள்ளுப்பிட்டி பொலிஸார் இணைந்து நடத்திய தேடலின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டோரில் 6 சீன பெண்களும் 6 தாய்லாந்து பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சுற்றுலா விசாவிலேயே இவர்கள் இலங்கைக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-2)


கல்யாண மாலை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>உயரம்: 6'<br>உயரம்: 23.25, 2 இல் செவ்<br>தகைமை/தொழில்: O/L, வியாபாரம் (சொந்தம்)<br>தொ.இ: B -1456 | பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரம் 4<br>உயரம்: 5'3"<br>கி.பா: 46, 7 இல் செவ்<br>தகைமை/ தொழில்: BSc, S.L.A.S முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: G -1475 |
| பிறப்பு: 1966 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>தகைமை/தொழில்: சிரேஷ்ட உதவியாளர் (நிரந்தரம்)<br>தொ.இ: B -1459 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>உயரம்: 5'8"<br>கி.பா: 78.25<br>தகைமை/ தொழில்: College (Canada Citizen)<br>தொ.இ: G-1477 |
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 1<br>கி.பா: 8.5<br>தகைமை/ தொழில்: BSc ஆசிரியர்<br>தொ.இ: B -1460 | பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>உயரம்: 5'6"<br>கி.பா: 14<br>தகைமை/ தொழில்:B.Sc, MA (அரச தொழில்)<br>தொ.இ: G -1479 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரம்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L, பிரான்ஸ் Not-PR<br>தொ.இ: B -1463 | பிறப்பு: 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 1<br>உயரம்: 5'5"<br>கி.பா: 34<br>தகைமை/ தொழில்: A/L, CDF (வங்கியாளர் நிரந்தரம்)<br>தொ.இ: G -1480 |


சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா சிறப்பு மலர்-25.03.2013


ஆலய மூலவர்





## அருளாசியுரை



ஈழத்திருநாட்டின் வடபால் சிரசென விளங்கும் யாழ்.குடாநாட்டின் பல சிறப்புக்களைக் கொண்ட வலி.தென் மேற்குப் பகுதியில் தொல்சீர் மானிப்பாய் நகரில் சமய வாழ்வும் பெருமை மிகு வளங்களும் பக்தி நலமும் பல் பயிரும் செழித்தோங்கும் மருதநிலத்தின் நடுவண் ஆழி நடுவள்ளம் போல அரசமர நிழலில் வேண்டுவார்க்கு வேண்டுவன அளித்து காத்து அருளாட்சி புரிந்து வருகின்றார். எம்பெருமான் வீரகத்தி விநாயகப் பெருமானின் நந்தன வருஷ மஹோற்சவ விஞ்ஞாபனம் 11.03.2013 ஆம் திகதி ஆரம்பித்து 25.03.2013 திங்கட்கிழமை இரதோற்சவம் இடம்பெறத் திருவருள் கூடியிருப்பதாலும் அதற்கு ஆசிச் செய்தி வழங்குவதிலும் பெருமையடைகிறேன். வீரகத்தி விநாயகர் பெருமை கூற முடியாதளவுக்கு பெருமை, புதுமை, வல்லமை கொண்ட அரசடி வீரகத்தி விநாயகர் ஐந்து முகத்தினாலும் ஐந்து கரங்களாலும் வாரி வழங்கும் அருள் மழையில் நனைந்து அவன் அருள்பெற இரதோற்சவத்திற்கு சகல அடியார்களும் இத்தலத்திற்கு வந்து இரதோற்சவத்தில் சிறப்பிக்கும் வண்ணம் ஆசி கூறி அழைக்கிறோம்.

**கா.இரகுநாதக்குருக்கள்**
**அரசடி வீரகத்தி விநாயகர்**
**மஹோற்சவ பிரதமகுரு**
**(கல்யாண, வேலவர் ஆலயம், முள்ளியவளை)**

### இன்னும் ஏன் மௌனம் ஐயா

*பல்லவி*

உன்னுடைய துதிக்கையே உறுதுணை யாய்
வருகிறது
அஞ்சேல் அஞ்சேல் என்று யானைமுகம்
தெரிகிறது

*அனுபல்லவி*

அரசமர நிழலில் அமர்ந்திருந்து காப்பவனே
ஆறுதலைத் தருபவனே வீரகத்தி விநாயகனே

*சரணம்*

ஆடுகின்றோம் பாடுகின்றோம் அன்புமலர்
சூடுகின்றோம்
பாவவினை தீர்த்திடுவாய் பானை வயிற்றோனே
பங்குனி உற்சவத்தில் பவனி வருபவனே
பாராளும் நாயகனே பக்தர்களை காத்தருள்வாய்
அறுகம் புல்லெடுத்து அன்போடு அர்ச்சித்தோம்
அனுதினமும் உன்பாதம் கதியென்று
சரணடைந்தோம்
இரணைவட்டுப் பிள்ளையாரே இன்னும் ஏன்
மௌனம் ஐயா
ஏகாந்தமானவனே எமக்கருள மாட்டாயோ

**திருமதி லோகினி குலேந்திரன்**
**சங்கீத ஆசிரியர்.**


**விளம்பர அனுசரணை**
**கண்ணகை அம்பாள் மர அரிவுகாலை**
**(கட்டுடை ,மானிப்பாய்) சகல விதமான**
**மரஅரிவு வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.**
**உரிமையாளர்**
**இ.ரவீந்திரன்**
**தொலைபேசி இலக்கம் 0779799299**


## தல வரலாறு

**மானிப்பாய் மேற்கு கட்டுரை அரசடி விநாயகர்**

ஈழத்திருநாட்டின் வடபால் சிரசென விளங்கும் யாழ். குடா நாட்டில் பல சிறப்புக்களைக் கொண்ட வலி.தென் மேற்குப் பகுதியில் தொல்சீர் மானிப்பாய் நகரில் சமய வாழ்வும் பெருமை மிகு வளங்களும் பக்தி நலமும் பொலிந்து அழகு தரும் கட்டுடை என்னும் ஷேத்திரத்தில் பல பயிரும் செழித்தோங்கும் மருத நிலத்தின் நடுவண் ஆழிநடு வள்ளம் போல அரச மர நிழலில் வேண்டுவார்க்க வேண்டுவன அளித்து, காத்து அருளாட்சி புரிந்து வருகின்றார் எம்பெருமான் வீரகத்தி விநாயகப் பெருமான்.

இத்தலம் என்றும் அழியாப் புகழ் பெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தலமாக விளங்கி வருகிறது. அடியார்கள் வினை தீர்க்கும் வீரகத்தி விநாயகப் பெருமான் கர்ணபரம்பரையான பேச்சுவழக்கு, புராதன கதைகள் என்பனவற்றின் அடிப்படையில் ஆராய்ச்சிக்குரிய நாயகனாகத் திகழ்ந்து வருகின்றார்.

இத்தலம் அமைந்துள்ள கிராமம் கட்டு உடைத்து வெள்ளம் பாயும் நீர்வளம் நிரம்பப்பெற்ற பகுதி எனும் காரணத்தால் கட்டுடை எனப் பெயர் வெற்றது. இக்கிராமவாசியாகிய அமரர் திருமதி புவனேஸ்வரி கதிர்காமநாதன் என்னும் அம்மையார் இப்பெருமான் மீது கொண்ட பக்தி மேலீட்டினாலும் நம்பிக்கையினாலும் அவரது வரலாறு பேணப்பட வேண்டும் என்னும் பேரவாக்கொண்டு கர்ணபரம்பரை வாயிலாகத் தானறிந்த வரலாற்றினை அவ்வூரைச் சேர்ந்த கட்டுடை சைவ வித்தியாசாலை அதிபராகக் கடமை புரிந்த அமரர் இ.மகாலிங்கம் அவர்களுக்கு கூறி அவர் மூலமாக எழுத்துருப்படுத்தி வைத்திருந்தார்.

மேற்படி கட்டுடை என்னும் கிராமத்தில் வாழ்ந்துவந்த வீரகத்தி என்பவர் வயல் நிலத்தின் மத்தியில் கிணறு தோண்டும்போது நிலத்தின் அடிப்பகுதியில் கருங்கல்லால் ஆன விநாயகர் சிலை ஒன்று வெளிப்பட்டுக் காட்சி கொடுத்தது.

(இச்சிலை எங்கிருந்து யாரால் இங்கு பாதுகாக்கப்பட்டது என்பது ஆராயப்பட வேண்டியது) அந்நியராட்சிக் காலத்தில் சைவ ஆலயங்கள் இடித்து அழிக்கப்பட்டு சைவமத வழிபாடு தடை செய்யப்பட்டிருந்த காலத்தில் இது நிகழ்ந்திருக்க வேண்டும். எல்லாம் எம்பெருமான் திருவிளையாடலே.

வீரகத்தி அவர்கள் தான் கண்டெடுத்த சிலையை அருகில் இருந்த அரச மர நிழலில் வைத்து வழிபட்டு வந்தார். அதன் அருகில் ஒரு இரணைவட்டுத் தென்னை மரம் நின்றதால் ஆரம்பத்தில் இரணை வட்டுப் பிள்ளையார் எனப் பெயரிட்டு வழிபட்டு வந்தனர். பக்தர் வீரகத்தி அவர்கள் அமரத்துவம் எய்திய பின் அவரது மனைவியார் விநாயகப் பெருமானை ஆதரித்து வழிபட்டு வந்தார். இவ்வாறு வழிபட்டு வரும் வேளை ஒருநாள் விநாயகப் பெருமான் அவரது கனவில் தோன்றித் தனக்கு அங்கு ஒரு ஆலயம் அமைத்து பிரதிஷ்டை செய்யும் படி பணித்தார். அதன் பிரகாரம் அரச மரத்தின் கீழ் ஓர் சிறிய ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தார்.

காலப்போக்கில் பெருமானின் பக்தரின் பெருமுயற்சியால் படிப்படியாக ஆலயம் பெரிதாகக் கட்டப்பட்டு அழகுவெற்றது. அருகிலிருந்த தென்னை மரம் பட்டு விட்ட பின் மருதநில நடுவண் வீற்றிருக்கும் இப்பிள்ளையார் கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் எனப் பெயர் பெற்றது.

இத்தலத்தின் காலப் பற்றி ஆராயுமிடத்து இவ்வாலயத்தில் நூறு வருடங்களுக்கு முன்னைய காலத்திலேயே மஹோற்சவம் நடைபெற்றது என்பதற்கு சான்றாக திகதி பொறிக்கப்பட்ட மூஷிகவாகனம் (1893), குதிரை வாகனம் (1897), யானை வாகனம் (2011), ஊஞ்சற்பீடம் (1913) என்பன இன்னும் நன்னிலையில் இருப்பதனைக் காணலாம். ஆலயம் இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது. இதற்கு சான்றுகளும் உள்ளன.

**தலைவர்: சண்முகம் சிவகுமாரன் (ஜே.பி)**
**தர்மகர்த்த சபை, உபதவிசாளர், மானிப்பாய் பிரதேசசபை.**

## ஆசியுரை



எம்பெருமானுக்கு இன்று தேர்த்திருவிழா. அடியவர்களே அலை அலையெனத் திரண்டு வருக. தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு வேண்டுவன அளித்து காத்து வரும் ஆனைமுகனின் அருளைப் பெற்றிடுக. 200 ஆண்டுகள் பழைமைவாய்ந்த மானிப்பாய் மேற்கு கட்டுடை வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் பிரதம குருவாகயிருந்து தேர்த்திருவிழாவுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**சிவஸ்ரீ சி.தர்மராஜக் குருக்கள்**
**ஆலய பிரதமகுரு**

## வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் புண்ணிய பூமியின் வடமேற்கே நீர்வளம், நிலவளம் மிகுந்ததாய் கல்வியும் செல்வமும் சிறந்து விளங்கும் கட்டுடை என்னும் சின்னஞ் சிறிய கிராமம் இருக்கிறது. கோயில் இல்லா ஊரில் குடியிருக்கக்கூடாது என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க செந்நெல் விளையும் வளமிக்க வயல்கள் நடுவே அரசமர நிழலில் அமர்ந்து அருளாட்சி புரிகிறார் வீரகத்தி விநாயகப் பெருமான். ஆலயம் சிறிதாயினும் கீர்த்தி பெரியது. இன்று ஆலயத்தில் இருந்து அன்பர் குறைதீர்க்கும் ஆனைமுகப்பெருமான் தேரேறி வலம் வருகிறார்.

இந்த ஆலயம் பல நூற்றாண்டு பழைமையானது. அக்காலத்தில் வாழ்ந்த அடியார்கள் காலத்துக்குக் காலம் ஆலயத்திற்கான பல திருப்பணிகளைச் செய்துள்ளனர். எம்பெருமான் வீதியுலா வருவதற்கான வாகனங்கள் பல அடியார்களால் வழங்கப்பட்டுள்ளன. யானை வாகனம், மயில் வாகனம், குதிரை வாகனம் என்பன கலைச் சிறப்பு வாய்ந்தனவாக இன்றும் ஆலயத்தில் இருக்கின்றன. அவற்றுள் நூறு ஆண்டு பழைமையான மூஷிக வாகனம் சிறந்த கலையம்சம் உடையதாக இருக்கிறது.

அது இன்றும் எம்பெருமான் அமர்ந்து வீதியுலா வரக்கூடிய நிலையில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. பழைமையான கட்டுத் தேருக்குப் பதிலாக புதிய சித்திரத் தேர் அமைத்து ஆலயம் சிறப்புற அன்பர்கள், அடியார்கள் பணிகள் பல செய்துள்ளனர். ஆலயத்தின் அந்தணப் பெருமக்களின் அனுசரணையாலும் அன்பர்கள் தொண்டுகளாலும் ஆலயம் சிறப்பாக காட்சிதருகிறது. ஆலயம் மென்மேலும் சிறப்புகள் பெற ஆனைமுகத்தான் அருள்புரிவாராக.

**திருமதி சி.பத்மசுந்தரி**
**சமாதான நீதவான்,**
**மொழி பெயர்ப்பாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் இரண்டு பட்டால்
கூத்தாடிக்கு கொண்டாட்டம்
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

### சுவாமி சரணம் ... சுவாமி சரணம் ... சுப்பிரமணிய சுவாமி சரணம்

பட்டி மண்டபம் ஒன்றில் திண்டுக்கல் லியோனி கூறிய கதை இது. ஒரு சிறுவன் விளையாடிக் கொண்டிருந்தான். அவன் தான் வைத்திருக்கும் எல்லாப் பொருட்களையும் கவிழ்த்து விடுவதில் மகிழ்ச்சியடைந்தான்.

இதனை அவதானித்த ஒரு பெரியவர் அருகில் நின்ற இன்னொருவரிடம் ஐயா! இந்தச் சிறுவனுக்கு என்ன பெயர் என்று கேட்டார்.

அதற்கு சுப்பிரமணிய சுவாமி என்று பதில் அளித்தார் அந்த நபர்.

பெரியவர் சிரித்துக் கொண்டே நினைத்தேன். இந்தப் பையனுக்கு சுப்பிரமணிய சுவாமி என்று தான் பெயர் இருக்கும் என்று.

பெரியவர் கூறியதைக் கேட்ட மற்றவர், பெரியவரே ஏன் அப்படி நினைத்தீர்கள் என்று வினவ,

அவன்தானே எல்லாவற்றையும் கவிழ்த்து போடுகிறான். அப்படியானால் அவனுக்கு சுப்பிரமணிய சுவாமி என்று தானே பெயர் இருக்கும்.

திண்டுக்கல் லியோனி இதைக் கூறிய போது சபையில் எழுந்த சிரிப்பொலியும் கரகோசமும் அடங்கிப் போக நீண்ட நேரம் எடுத்தது.

என்ன செய்வது! சிலர் காந்தியாக இருக்க நினைக்கிறார்கள். இன்னும் சில பேர் காந்தியைக் கொன்ற கோட்சேயாக இருக்க விரும்புகிறார்கள்.

காந்தியை பேசும் போதெல்லாம் கோட்சேயும் பேசப்படுவான் என்ற நினைப்பைத்தவிர இவர்களிடம் வேறு எதுவுமில்லை. அந்த வழியில்தான் சுப்பிரமணிய சுவாமியும்.

தமிழகம் முழுவதும் ஈழத்தமிழர்களுக்காக கொந்தளித்தபோது – தமிழக மாணவர்கள் உண்ணா விரதப் போராட்டம் நடத்திய போது சுப்பிரமணிய சுவாமி மட்டும் இலங்கை அரசுக்காக வக்காளத்து வாங்கினார்.

சுப்பிரமணிய சுவாமியின் இந்தப் போக்கு எதற்கானது? விடுதலைப் புலிகள் மீது கொண்ட கோபத்தை ஈழத்தமிழர்களிடம் பழி தீர்ப்பதற்கானதா?

அல்லது இலங்கை அரசிடம் யாசகம் பெற்றதற்கான கைமாறா? இவை இரண்டுமல்ல, எதிர்வாதம் புரிந்தால்தான் ஊடகங்களில் இடம்பிடிக்க முடியும் என்ற நினைப்பிலா என்பது ஆய்வுக்குரியது.

எதுவாயினும் ஈழத்தமிழர்களுக்கு நடந்த இன்னல்களை ஒரு போதேனும் கண்டு கொள்ளாத – கண்டிக்காத சுவாமி, ஜெனிவா தீர்மானத்தின் போது இலங்கை அரசின் பிரதிநிதி போல கருத்துரைத்தமை கற்றவர் கயவனாக இருப்பது பெரும் கொடுமை என்ற தவத்திரு குன்றக்குடிகளின் வாக்கை நினைவு படுத்தும்.

# தீர்மானத்தை ஏற்காவிட்டால் நாட்டுக்குத்தான் பேராபத்து-ஐ.தே.க.

(கொழும்பு)

ஜெனிவா தீர்மானத்தை இலங்கை அரசு ஏற்காவிட்டால் சர்வதேச ரீதியில் நாடு தனிமைப்படுத்தப்படும் அபாயமுள்ளது. வரட்டுக் கௌரவத்தை விடுத்து இனியாவது சர்வதேசத்துடன் ஒத்துழைத்துச் செயற்பட அரசு முன்வர வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, இலங்கை ஐ.நா. உறுப்புரிமை நாடாகும். எனவே மனிதவுரிமைகள் பேரவையில் நிறைவேற்றப் பட்டுள்ள தீர்மானத்தை அரசு ஏற்க வேண்டும்.

இல்லையேல் அது நாட்டுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். அதேவேளை ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஏற்று அதன் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான பொறிமுறையை அரசு வகுக்க வேண்டும்.

இதனைவிடுத்து தொடர்ந்தும் சண்டியனை போல் அரசு செயற்படுமானால் எமது நாட்டுக்குத்தான் சர்வதேச ரீதியில் அவப்பெயர் ஏற்படும்.

ஜெனிவா தீர்மானத்தை ஏற்க முடியாது என இலங்கை அரசு சொல்லுமானால் அதற்கு மூளைக்காய்ச்சல் ஏற்பட்டுள்ளது என்பதையே அது எடுத்துக் காட்டும் என டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார். (எ-8)

# யாழ். தமிழ்ச்சங்கத்தின் திருவள்ளுவர் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்தும் திருவள்ளுவர் விழா எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் தமிழ்ச்சங்க உப தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலையினரின் ஆதரவுடன் நடைபெறும் இந் நிகழ்வில் வரவேற்புரையை யாழ். மத்திய கல்லூரியின் பகுதித் தலைவர் ப.திருஞான சம்பந்தனும் தொடக்கவுரையை யாழ்ப்பாண தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் தி. வேல்நம்பியும் ஆற்றுவர்.

யாழ் பல்கலைக்கழக கல்வியியற் துறைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி தலைமையில் **பன்முகநோக்கில் வள்ளுவம்** என்ற தொனிப்பொருளில் கருத்தரங்கம் இடம் பெறவுள்ளது.

இதில் **அரசியல்** என்ற தலைப்பில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் ந.குகபரனும் **நட்பு** என்ற தலைப்பில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் அ.பௌணந்தியும் **அன்பு** என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்துறை விடுகை யாண்டு மாணவி ர.மீராவும் **இல்லறம்** என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர் அ.வதனரேகாவும் கருத்துரைகளை வழங்குவர்.

அத்தோடு வள்ளுவர் பெரிதும் வலியுறுத்த முனைவது **இல்லறச் சிறப்பா? துறவற மேன்மையா? ஊழின் வலியா?** என்ற தலைப்பில் தமிழ்ச்சங்க செயலாளர் சொல்லின்செல்வர் இரா.செல்வவடிவேல் தலைமையில் முக்கோணப்பட்டி மன்றமும் இடம்பெறும். (அ-6)

## எரிபொருள் விநியோகம் சீனாவின் கையில்!

அம்பாந்தோட்டையில் அமையப் பெற்றுள்ள மத்தள சர்வதேச விமான நிலையம், துறைமுகம் ஆகியவற்றுக்கு எரிபொருளை விநியோகிக்கும் பணி சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சீனாவின் ஹென்குய் பொறியியல் நிறுவனம் இந்தப் பணிகளை மேற்கொள்ள வுள்ளது.

இதன்படி இந்த நிறுவனம் விமான நிலையம் மற்றும் துறைமுகத்துக்கான எரிபொருளை சுரங்கங்களில் சேகரித்து வைத்து பரிசோதித்த பின்னர் இலங்கையின் துறைமுக அதிகார சபையிடம் கையளிக்கவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அமைச்சரவையில் வைத்து இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார். (அ-2)

# டெங்கு தொற்றுக்கிலக்காகி பலர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோய்த் தொற்றுக்கு ஆளான நிலையில் கடந்த வாரத்தில் மட்டும் 13 பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு நேற்றும் மூன்று பேர் டெங்குத் தொற்றுக்கு ஆளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர் என யாழ்.போதனா வைத்தியசாலை தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்த மாதத்தில் நேற்று வரை 29 டெங்கு நோயாளர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த வருடத்தில் மட்டும் 186 பேர் இதுவரை டெங்கு நோயாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இதில் அதிகளவானவர்களுக்கு டெங்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்தப் புள்ளிவிபரத்தகவல்கள் தெரிவித்தன.

அத்தோடு யாழ்.மாவட்டத்தில் நாவற்குழி, நீர்வேலி, மானிப்பாய், நவாலி ஆகிய இடங்களிலிருந்து அதிகளவான நோயாளர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ-6)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### மெய்ஞ்ஞான வாயில்



புருவ மையத்தை ஆக்கினைச் சக்கரம் என்று கூறுவது வழக்கு. அவ்விடத்திலேயே மனத்தை குண்டலினியில் ஒடுக்கிப் பழக உயிருக்கும் மனதுக்கும் இடையேயுள்ள தொடர்பு விளங்கும். உயிர்ப்புலன்கள் மூலம் விரிந்து படர்க்கை நிலையில் மனமாக இருக்கிறது. புலன் மயத்தில் குறுகி நிற்பதால் உயிரின் பெருமையும் பேராற்றலும் மறந்து பிற பொருட்கவர்ச்சியில் சிக்குண்டு இயங்குகின்றது. உயிரின் இத்தகைய மயக்க நிலைதான் மாயை எனப்படும். மயக்க நிலையில் உயிர் அடையும் மனோநிலைகளில் தனக்கும் பிறருக்கும் துன்பம் விளைவிக்கும் தீமைகளே, பேராசை, சினம், கடும் பற்று, முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் எனும் அறுகுணங்கள் ஆகும். அறுகுண வயப்பட்டு மக்கள் செயலாற்றும் போது ஏற்படும் தீயவிளைவுகளே எல்லாத் துன்பங்களுமாகும். மயக்கநிலையிலிருந்து தெளிவுபெற உயிருக்கு விழிப்புநிலைப் பயிற்சி அவசியம். ஆக்கினைச் சக்கர யோகத்தால் உயிருக்கு இத்தகைய விழிப்பு நிலைபேறு கிட்டுகிறது.

மேலும் புலன்களை கடந்து நிற்கும் வல்லமையும் இப்பயிற்சியினால் ஆன்மாவுக்கு நாளுக்குநாள் கூடிக்கொண்டேயிருக்கிறது. புலன்கள் மூலம் ஆன்மா செயலாற்றும் போது தனது ஆற்றலை அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் இவையாக மாற்றி அவற்றையே தனது இன்பதுன்ப உணர்ச்சிகளாக அனுபவிக்கின்றது. தனது இயக்க விளைவுதான் இன்பமும் துன்பமும் எனும் உண்மையை உணராமல் மயங்கிநிற்கும் நிலையிலிருந்து தெளிவுபெற்று தன் ஆற்றலைப் பொறுப்புணர்ந்து செலவிடும் பண்பு ஆன்மாவுக்கு இப்பயிற்சியினால் ஓங்கும். தேவையுணர்ந்து தனது ஆற்றலைச் செலவிடவும் தேவையில்லாத போது செலவிலிருந்து தன்னை மீட்டு சேமிப்பு நிலையில் இருத்தவும் செய்தால் ஆன்மாவிற்கு திறமை பெருகும். மெய்ஞ்ஞானம் என்ற அருட் கோயிலுக்குள் புகும் வாயில் ஆக்கினைச் சக்கர யோகமேயாகும். ஆசானால் எழுப்பப்பெற்ற குண்டலினி சக்தியின் இயக்க விரைவு நாளுக்கு நாள் கூடிக் கொண்டேயிருக்கும். உடல் நலம், மனநலம் ஓங்கும். முகம் அழகு பெறும்.

## க.பொ.த.சா.த முடிபுகள் ஏப்ரலில்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் வெளியாகும் என பரீட்சை ஆணையாளர் ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் பரீட்சை நடைபெற்ற காலத்தில் சீரற்ற காலநிலை நிலவியதனால் இவ்வாண்டு பெப்ரவரி மாதம் 9,10,11 ஆம் திகதிகளில் மீளவும் சில பரீட்சைகள் நடை பெற்றன.

கடந்தாண்டு நடைபெற்ற பரீட்சைக்கு மூன்று லட்சத்திற்கும்அதிகமான பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

சீரற்ற காலநிலை காரணமாக சில பரீட்சார்த்திகள் வேறு பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இதனால் பெறுபேறுகளை வெளியிடுவதில் சிரமங்கள் நிலவியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் எதிர்வரும் ஏப் ரல் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக பரீட்சை பெறுபேறுகளை வெளியிட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருநெல்வேலி அரசடி அருள்மிகு ஸ்ரீ சிவகாம சுந்தரிஅம்பாள் ஆலய

# புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம்-27.03.2013 (புதன்கிழமை)



### அருளாசிச் செய்தி

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதி பராசக்தியான உமையவள் யாழ்ப்பாணம் திருநெல்வேலிக் பதியிலே அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாளாக வீற்றிருந்து அருள் பாலிக்கின்றாள். திரு நெல்வேலி எனும் பதி அறிஞர்கள் வாழ்ந்த பெருமையை உடையது. அத்துடன் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அணித்தாகவும் விளங்குவதால் ஒரு மகிமையும் பெருமிதமும் உடைய இடமுமாகும்.

அத்தகைய மாண்புமிகு திருநெல்வேலிப் பதிதனில் கோயில் கொண்டு எழுந்தருளி அடியார்க்கருளும் அம்பிக்கையாக வீற்றிருப்பவளுக்கு இன்று மஹாகும்பாபிஷேகம் நிகழ்வது பெருமகிழ்ச்சியைத் தருகிறது. வழிபடும் அடியவர்களின் குறை தீர்த்து நிறைவருளும் தாயான ஸ்ரீ சிவகாமசுந்தரியின் ஆலயம் அழகிய முறையில் புனருத்தாரணம் செய்யப்பட்டு இன்று மஹா கும்பாபபிஷேகம் நிகழ முற்று முழுதாகப் பாடுபட்டவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

பன்னிரு ஆண்டுகளுக்கொருமுறை நிகழும் இக்குடமுழுக்கு எனும் பெருஞ்சாந்தி விழா சிறப்புற அருளாசிகளை நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம். எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாளின் திருவருளுக்குப் பாத்திரமாகி அடியார்க்ள் அனைவரும் மங்கள வாழ்வு பெற்று சுபீட்சத்துடன் திகழவேண்டு மென்று அருளாசிகள் வழங்கி நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து வாழ்த்துகின்றோம்.

***என்றும் வேண்டும் இன்ப அன்பு***

**ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த**
**பரமாசாரிய சுவாமிகள்**

### ஆசிச் செய்தி

திருவருள்மிகு திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் தேவ ஸ்தான புனராவர்த்தன மஹாகும்ாபி ஷேகத்திற்கான ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு பேருவகையடைகின்றோம். நீண்ட வரலாறும் பெருமையும் கொண்ட இந்த ஆலயம் அம்பாளின் அருட் கடாட்சத்தால் இன்று மஹாகும்பாபி ஷேகம் காண்கின்றது.

பரிபாலன சபையினராகிய நாம் வெறும் கருவிகளே. திருப்பணிகள் ஆரம்பித்த நாளிலிருந்து நாமெடுத்த முயற்சிகள் தங்கு தடையின்றி நிறைவேறின. இப்பெரும் பணிக்கான பொருளுதவியும், நிதியுதவியும், சரீர உதவியும் பெரியோர்களின் ஆலோசனைகளும் ஆசிகளும் வாழ்த்துக்களும் எம்மை உற்சாகப்படுத்தின. திருநெல்வேலி வாழ் மக்கள், புலம்பெயர்ந்து வாழும் திருநெல்வேலி வாழ் அன்பர்கள், குறிப்பாக துடிப்புடனும் துணிவுடனும் இயங்கும் திருநெல்வேலி இளைஞர்கள் எமக்கு உறுதுணையாக நின்றனர். இதனால் இன்று இக் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக இடம்பெறுகின்றது. மீண்டும் உதவிய அன்புள்ளங்களுக்கு எமது இதயபூர்வ நன்றிகள். அனைவரும் அம்பாளின் அருட் கடாட்சத்தை பெற்றுய்வோமாக.

**பரிபாலன சபை**

### திருநெல்வேலி
### ஸ்ரீசிவகாமசுந்தரியை வணங்குவோம்




திருநெல்வேலி அரசடி அம்மன் என அழைக்கப்படும் அருள்மிகு சிவகாமசுந்தரி அம்மன் எழுந்தருளி இருக்கும் ஆலய கும்பாபிஷேகம் நடைபெறுவதை அறிந்து அடியார்கள் அளவிலா ஆனந்த பரவசம் அடைகிறார்கள்.

திருநெல்வேலிக் கிராமம் பலவகையிலும் சிறப்புவாய்ந்தது. மண்வளமும் மனவளமும் மிக்க பல ஆன்றோர் வாழ்ந்த-வாழ்கின்ற பூமி அது. இந்தப்பூமியிலே கோயில் கொண்டிருக்கின்ற சிவ்காமசுந்தரி அடியவர்களின் வேண்டுதல்களையெல்லாம் தம் திருச் செவியேற்று உடனுக்குடன் அருள்பாலிப்பதை அடியவர்கள் அனுபவிக்கிறார்கள்.

இந்த ஆலய விருட்சமாக நிமிர்ந்திருக்கும் அரச மரம் மிகவும் சக்தி வாய்ந்தது. அரசுடன் வேம்பும் இணைந்து ஒன்றாகக் கலந்திருப்பது சிவனும் சக்தியும் ஒன்றாக இணைந்திருப்பது போன்றதாகும். அரசும் வேம்பும் சிவனும் சக்தியும் என எமது சமயம் பண்டைக்காலத்தில் இருந்தே சொல்லிவந்திருக்கிறது. இப்புண்ணியத்தலத்திலே இந்த விருட்சங்கள் செழித்துள்ளமை ஊருக்கும் உலகுக்கும் நன்மை பயப்பதாகும். மும்மூர்த்திகளும் ஒரே இடத்தில் இருக்கும் இடம் அரசும் வேம்பும் ஒன்றாக இணைந்திருக்கின்ற இடமாகும். எல்லாவகையிலும் திருவருட் சிறப்புமிக்க அரசடி அம்மனின் கும்பாபிஷேகம் சிறப்புடன் நிகழ்ந்து அடியர்களுக்குத் திருவருள் பாலிக்க வேண்டுமென்று நாமும் பிரார்த்திக்கின்றோம்.

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**



**எண்ணெய்க்காப்பு 26.03.2013 (செவ்வாய்க்கிழமை)**

### ஆலய வரலாறு

யாழ்ப்பாணக்குடாநாட்டிலுள்ள தொன்மைவாய்ந்த கிராமங்களுள் திருநெல்வேலியும் ஒன்று. நீண்ட நெடுங்காலமாகவே இப்பகுதியில் சைவமும் தமிழும் செழித்து வளர்ந்து வந்துள்ளது. நீர்வளமும் நிலவளமும் சிறந்த இக்கிராம மக்கள் கடவுள் பக்தியும் கடின உழைப்பும் உடையவர்கள். இக்கிராமத்தை சேர்ந்த பலர் கல்வியில் சிறந்து விளங்கிப் புகழ்பெற்றுள்ளனர். ஆறுமுக நாவலரின் தாய்வழி மூதாதையரான ஞானப்பிரகாச முனிவர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. திருநெல்வேலி கிராமத்திலே பல சைவ ஆலயங்கள் உள்ளன. அவற்றுள் அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம் பாள் ஆலயமும் ஒன்றாகும். திருநெல்வேலிச் சந்தியில் இருந்து கல்வியங் காடு செல்லும் ஆடியபாதம் வீதியிலேயே ஆண்டிப்புலம் என்ற தோம்புப் பெயர் கொண்ட காணியிலே ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயம் அமைந்திருக்கின்றது.

தொன்மை வாய்ந்த இவ்வாலயம் பற்றிய பதிவு யாழ்ப்பாணம் கச்சேரியில் உள்ள ஆலயப் பதிவேட்டில் இரண்டாம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது. 1844 ஆம் ஆண்டு பதிவுப்படி ஓடுபோட்டு வேயப்பட கூரையுடையதென்றும், தினமும் ஒரு நேரப் பூஜை நடைபெற்றதென்றும் அறியமுடிகின்றது. இவ்வாலயத்தின் முகாமையாளராக குமாரவேலு சண்முகம் என்பவரது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாலயம் 1951 ஆம் ஆண்டு தொடக்கம் கொடியேற்றப்பட்டு திருவிழா நடைபெற்று வருகின்றது. இவ்வாலயம் 1969 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புதிய திருப்பணி வேலைகள் செய்யப்பட்டன. 1971 ஆம் ஆண்டு தை மாதம் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1996 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் திகதி பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. அடியார்களின் உதவியுடனும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபா உதவியுடனும் பரிபாலன சபையினரால் இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு 1998 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 31 ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

## பிரதம குருவின் ஆசியுரை



அகில உலகத்தையும் அடக்கி ஆண்டு அல்லல் போக்கி அருள்பாலிக்கும் அன்னையாம் சிவகாமசுந்தரி அம்பா ளிற்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக் கும் இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெற அருள்பாலித் துள்ளது. மஹா கும்பாபிஷேகத்தையும் கும்பாவிஷேக கிரியைகளையும் காணக்கிடைப்பது என்பது அரும் பெரும் பாக்கியம் ஆகும். ஏனெனில் பன்னிரண்டு ஆண்டுக்குப் பின்னரே மஹா கும்பாபி ஷேகம் இடம்பெறும். ஆகவே ஒரு கும்பாபிஷேகத்தை காணாது தவற விட்டால் பன்னிரு ஆண்டுகளுக்கு பின்னரே மறு மஹா கும்பாபிஷேகம் இடம்பெறும். சிவகாம சுந்தரி அம்பாளின் மஹா கும்பாவிஷேக பலன் கள் எல்லா மக்க ளுக்கும் கிடைக்கப் பெற்று நாட்டில் சமா தானமும் அமைதியும் நிலைக்க வேண்டும் என்று சிவ காம சுந்தரி சீரடியை வண ங்கிப் பிரார்த்திக்கி ன்றேன்.

சுபம்

**வைரவநாத ஜெகதீஸ்வரக்குருக்கள்**

**JOLLY RESTAURANT**

No. 27, Palaly Road,
Thirunelvely
Delicious Food items
along with good serving.


### கும்பாபிஷேக சிறப்பு



திருநெல்வேலி மத்தியில் வீற்றிருந்து அருளா ட்சி புரிந்து வரும் அன்னை சிவகாம சுந்தரி அம்பி கைக்கு புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுகின்றது. கும்பாபிஷேக காலங்களில் ஆலயத்திலே நாங்கள் சாதாரணமாகக்காண முடியாத பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அழகானயாகசாலை. அதிலே அன்னை ரூபா ரூப மாக கும்பத்திலே எழுந்தருளியிருக் கும் காட்சி நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஜயமானன் இவர்களைத் தத்துவமாக விளக்கு, 9 குண்டங் கள் அந்தக் குண்டங் களிலே மந்திரம் கிரியை பாவனைகளோடு சிவாசாரிய ர்கள் செய்கின்ற மகத்தான ஹோமங்கள், வேதபாராயணம், திருமுறை பாராயணம், அரோஹரா கோஷம் இவையெல்லாம் நாம் சாதாரண நாட்க ளில் காண முடியாதவை. இவையெல்லாம் நிறைந்திருக்கும் மஹாகும்பாபி ஷேகத்தை தரிசிப்பதன் மூலம் ஆன்ம ஈடேற்றம் கிடைக்க வாய்ப்புண்டு. இக்கும் பாபிஷேகத்தை தரிசிக்கும் பக்தர்கள் அன் னையின் அருள் பெற்று சிறப்புற வாழ ஆசிர்வதிக்கின்றோம்.

**சிவ ஸ்ரீ தா. மகா தேவக்குருக்கள்**

### ஆசிச் செய்தி



திருவருள் நிறைந்த தெய்வீகத் திருவூர் திருநெல்வேலி நன்னீர்ச் சிறப்பும் நல்லறிஞர் பலரைத் தந்த பெருமையம் இம்மண்ணின் மகத்துவும் எனலாம். சுவாமி ஞானப்பிரகாசர் பசுவதையை எதிர்த்து பாரதம் சென்று பயன்தரு பணிகள் செய்தவர். இப்பெருமகன் பிறந்த திருநெல்வேலியில் திருக்கோவிலுக் குகுறைவில்லை. இவ்வூரில் பழம் பதியாக விளங்கும் சிவகாமசுந்தரி அம்மனின் சிறப்பு அறியாதவர்கள் இல்லை. பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா முதல் பல பெரியவர்கள் அனுதினமும் வழிபாடு செய்து போற்றிய திருக்கோவில். பூசைவழிபாடு, நெறிமுறை காத்த கோவில். கௌரி விரதம், நவராத்திரி போன்ற சக்தியின் விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்ற பாரம்பரியக் கோவில். இத்திருக்கோவில் புனருத்தாரணம் செய்யப்பட்டு திருப்பணிகள் நிறைவேற்றிய நிலையில் அம்பாளுக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். அம்பாளின் திருப்பணியில் பங்கு கொண்டு தொண்டாற்றி மீளா அடியவர்களுக்கும் சிவாச்சாரியப் பெருந்தகைகளுக்கும் அறங்காவலர்களுக்கும் நல்வாழ்த்தும் நன்றியும் கூறி அமைகிறேன்.

**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே**
**கலாநிதி ஆறு.திருமுருகன்**
**தலைவர்: ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பளை**
**தலைவர் :சிவபூமி அறக்கட்டளை**

### வாழ்த்துச் செய்தி



திருநெல்வேலி அரசடி அம்பாள் என்று அழைக்கப்படும் ஸ்ரீசிவகாமசுந்தரி அம்பாளு க்கு புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி 27.03.2013 இல் மிகவும் சிறப்பாக நடைபெறத் திருவருள் பாலித்துள்ளதை அறிந்து மிகவும் மனமகிழ்வு அடைகின்றோம். இந்துக் கோயில்கள் இந்துக்களின் ஆன்மீக மையங்களாக விளங்குகின்றன. அவற்றைச் சாஸ்திர முறைமைகளுக்கு அமைவாகச் சரியான முறையில் பரிபாலனம் செய்து வருவதால் நாடு வளம் பெறும். நன்மை பெருகும். இவற்றைக்கருத்தில் கொண்டு இவ்வாலயத்தில் உரிய வேளையில் பாலஸ்தாபனஞ் செய்து திருப்பணிகள் சிறப்பாகச் செய்யப்பட்டுப் பிரதிஷ்டை எனப்படும் மஹாகும்பாபிஷேகப் பெருவிழா இன்று நடைபெறுகின்றது. திருநெல்வேலி அரசடி அம்பாள் ஆலயத் திருப்பணிகள் சிறப்புற அமைய அல்லும் பகலும் அயராதுழைத்த அனைவரையும் வாழ்த்தி வணங்குகின்றோம். இன்றைய மஹாகும்பாபிஷேகப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாளின் திருவடி மலர்களைப் போற்றி வணங்கி வாழ்த்துகிள்றோம்.

**பேராசிரியர் மா.வேதநாதன்**
**தலைவர் இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப்**
**பல்கலைக்கழகம், திருநெல்வேலி.**

### வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாண மாவட்டத்தின் திருநெல்வேலி கிராமத்தில் பல ஆலயங்களை பல பெரியோர்கள், அறிஞர்கள் வாழ்ந்து சைவம் வளர்ந்த கிராமத்தின் அரசடி திருவருள் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயத்தில் இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. இந்துக்களின் இறைவணக்கத்தில் சக்தி வழிபாடு சிறப்பான இடத்தைக் கொண்டதாகும். அந்த வகையில் திருநேல்வேலி சிவகாம சுந்தரி அம்மன் வேண்டுவோர் வேண்டுவதை ஈந்தருளி அடியார்களின் அல்லல் போக்கி அருள் பாலிக்கும் அன்னையாக திகழ்கின்றார். அன்னையின் மஹாகும்பாபிஷேகம் காண்பது மக்களின் ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிவகுக்கின்றது. மிகவும் அழகிய முறையில் பலபாலன மூர்த்திகளுடன் ஆலயத்தை புனரமைத்து கலையையும் அத்தோடு கலாசாரங்களையும் பேணி பாதுகாக்கின்ற வகையில் செயற்படுத்துகின்ற பரிபாலன சபையினருக்கும் இவ்வூர் மக்களுக்கும் அன்னையின் பேரருள் கிடைக்க வேண்டிப் பிரார்த்திப்ப தோடு மஹாகும்பாபிஷேக வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**பா.செந்தில்நந்தனன், பிரதேச செயலர், நல்லூர்**

**THAS STORES**
KALASALAI ROAD,
THIRUNELVELY.

**பிரகாந்த்**
**போட்டோ கொப்பி**
பலாலி வீதி,
திருநெல்வேலி.

**நியூ ஹரன் பான்சி**
இல. 2, பலாலி வீதி, திருநெல்வேலி.

**கந்தவேள் களஞ்சியம்**
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

**ஐங்கரன் களஞ்சியம்**
இல. 06, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

**SOORIYA HARD WARES**
KALASALAI ROAD,
THIRUNELVELY.

**ஹரன் புடைவையகம்**
பலாலி வீதி, திருநெல்வேலி.
தொலை.இல. 021 222 2697

**கனகா**
பத்திரிகை விற்பனையகம்
இல.06, நவீன சந்தி,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய அணி அபார வெற்றி




இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 4-வதும், இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி, டில்லியில் உள்ள பெரோஷா கொட்லா மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி தமது முதல் இன்னிங்ஸுக்காக அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 262 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக வேகப்பந்து வீச்சாளர் பீற்றர் சிடில் 51 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டமாகப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் ரவிச்சந்திரன் அஷ்வின் 57 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணி நேற்று முன்தினம் 4-ம் நாள் ஆட்டநேர முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களை எடுத்திருந்தது. களத்தில் இறுதி இலக்க வீரரான புவ்னேஷ்வர் குமார் 10 ஓட்டங்களுடன் காணப்பட்டார்.

நேற்றைய 3-ம் நாள் ஆட்டத்தில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி இறுதி 2 விக்கெட்டுக்களையும் 2 ஓவர்களில் மேலதிக 10 ஓட்டங்களுடன் இழந்து 272 ஓட்டங்களை எடுத்தது.

இதன்மூலம் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் பெற்ற ஓட்ட எண்ணிக்கையிலும் பார்க்க 10 ஓட்டங்களால் முன்னிலை வகித்தது.

இந்திய அணியின் துடுப்பாட்டத்தில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான விஜய் 57, புஜாரா 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பில் நேதன் லயன் 94 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன்மூலம் அவர் தனது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்வின் மிகச் சிறந்த பந்துவீச்சுப் பெறுதியைப் பதிவு செய்தார்.

10 ஓட்டங்கள் பின்னிலையில் தமது 2-வது இன்னிங்ஸை நேற்றுக் காலை வேளையிலேயே தொடர்ந்த அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வரிசையில் அதிரடி மாற்றம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

வழமையாக டேவிட் வோர்ணருடன் களமிங்கும் எட் கோவனுக்கு பதிலாக மக்ஸ் வெல் தொடக்க வீரராக களமிறங்கினார்.

எனினும் அவுஸ்திரேலிய அணியின் இந்த அதிரடி மாற்றத்துக்குஇந்திய சுழற்பந்து வீச்சாளர்களின் நேர்த்தியான பந்து வீச்சு பலனைக் கொடுக்கவில்லை.

15 ஓட்டங்களில் முதல் விக்கெட் சரிக்கப்பட்டதில் தொடர்ந்த இந்திய சுழற்பந்து வீச்சாளர்களின் விக்கெட் வீழ்த்தும் வேட்டை ஆஸி அணி 53 ஓட்டங்களை எடுப்பதற்கு 5 விக்கெட்டுக்களை இழக்கும் வரையில் வேகமாகத் தொடர்ந்தது.

இதன் பின்னர் ஜோடி சேர்ந்த ஸ்ரீபன் ஸ்மித்தும், மத்யூ வேட்டும் இந்த விக்கெட் இழப்பை சிறிது நேரம் தடுத்து நிறுத்தினர்.

மதிய உணவு இடைவேளையின் போது ஆஸி அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 89 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மதியபோசன இடைவேளையின் போது போட்டி ஆரம்பித்ததும் இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர்கள் ஆஸி அணியின் துடுப்பாட்ட வீரர்களை மேவி நின்றனர். இதன் விளைவு ஆஸி அணியின் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து சரிந்தன.

எனினும் ஆஸி அணிக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பாட்டத்தில் கைகொடுத்து உதவிய பீற்றர் சிடில் 2-வது இன்னிங்ஸிலும் கை கொடுத்து உதவியதால் ஆஸி அணி ஓரளவு சிறப்பான ஓட்ட எண்ணிக்கையான 164 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் பீற்றர் சிடில் அதிரடியாக ஆடி 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் ரவீந்திர ஜடேஜா 58 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

எனினும் தொடர்ந்து வந்த அணித் தலைவர் தோனி, களத்தில் நின்ற புஜாராவுடன் ஜோடி சேர்ந்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

முடிவில் இந்திய அணி 4 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து வெற்றியிலக்கான 155 ஓட்டங்களைக் கடந்தது.

துடுப்பாட்டத்தில் புஜாரா 82 ஓட்டங்களுடனும், தோனி 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



இதன்மூலம் 155 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது 2-வது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணியின் ஆரம்ப விக்கெட் 4 ஓவரில் 19 ஓட்டங்களுடன் இழக்கப்பட்டாலும் 2-வது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த புஜாராவும் வீராட் ஹோலியும் வெற்றியிலக்கினை எளிதாக்கினர். இருவரும் தமக்கிடையில் 104 ஓட்டங்களை பகிர்ந்த போது இவ் ஜோடி பிரிக்கப்பட்டது.

விராட் ஹோலி 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த பின்னர் ஆஸி அணியின் கை ஓங்கியது.

இதன் விளைவு அடுத்த இரு விக்கெட்டுக்களையும் அந்த அணி 5 ஓட்டங்களுடன் பறிகொடுக்க வேண்டிய நிலைமைக்குள்ளானது.


ஆஸி அணியின் பந்துவீச்சில் நேதன் லயன், மக்ஸ்வெல் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

4 போட்டிகள் கொண்ட இத்தொடரை இந்திய அணி 4:0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக ரவீந்திர ஜடேஜா தெரிவு செய்யப்பட, தொடரின் நாயகனாக 29 விக்கெட்டுக்களை பந்துவீச்சில் கைப்பற்றி அசத்திய தமிழக வீரர் அஷ்வின் தெரிவானார்.

அவுஸ்திரேலியா அணி போட்டித்தொடர் ஒன்றை முழுமையாக பறிகொடுத்த கணக்கை 4ஆக அதிகரித்து வேதனையான சாதனையைப் பதிவு செய்தது.

# வெளிநாடுகளில் இந்தியா வெல்ல வேண்டும் - கங்குலி



சச்சின் டெண்டுல்கரை விட அனுபவமிக்க வீரர்கள் இடம்பெறாமலேயே அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் மூன்று டெஸ்ட் போட்டிகளை இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது.

இது குறித்து கங்குலி கூறியதாவது, இந்திய அணி சொந்த மண்ணில் நடக்கும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 4 போட்டிகளையும் வென்று சரிவிலிருந்து மீண்டுள்ளது. இதை தக்க வைத்துக்கொள்ள வெளி நாட்டு மண்ணில் அங்குள்ள சூழ்நிலையை நன்கு அறிந்து கடுமையாக போராட வேண்டியிருக்கும்.

இங்கிலாந்து, தென்னாபிரிக்கா அணிகள் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் அருமையாக விளையாடுகின்றனர். அதேபோல் இந்திய அணியும் திறமையான அணியாக விளங்கும் என்று நம்புகின்றேன்.

இங்கிலாந்து அணி தற்போது இந்தியா வந்து தொடரை கைப்பற்றியது. அதேபோல் தென்னாபிரிக்கா இலங்கைக்கு எதிரான தொடரை கைப்பற்றியது. ஆனால் நமது அணி வெளிநாடுகளில் தொடரை கைப்பற்றுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும், உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் சிறப்பாக விளையாட வேண்டும் என்பதே எமது விருப்பம்.

நமது அணி கடந்த 10 வருடங்களாக சிறப்பாக செயல் பட்டது. அதேபோல் திரும்பவும் சிறந்த அணியாக உருவெடுக்கும் இதற்கு இளம் வீரர்களைக் கொண்ட தற்போதைய அணிக்கு சில காலம் தேவை.

இந்த தொடரை 4:0 என அவுஸ்திரேலிய அணிக்கு வெள்ளையடிக்க வேண்டும். அப்போது தான் கடந்த ஆண்டு நாம் அங்கு 0:4 என தொடரை இழந்ததற்கு பழி தீர்த்ததாகும். இவ்வாறு கங்குலி கூறினார்.

## சுதந்திரமான விசாரணை...

தன்மையுடைய விசாரணையை தம்மால் நடத்த முடியும் என்பதை உறுதி செய்ய வேண்டிய அழுத்தம் இப்போது இலங்கையின் மீது இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

மனித உரிமைகள் என்பதைவிட அமெரிக்காவுக்கு இந்த தீர்மானத்தை கொண்டு வந்ததில் உள் நோக்கம் இருப்பதாக இலங்கை அரசு குற்றஞ் சாட்டுகின்றதே என்று கேட்டதற்கு பதிலளித்த பிளேக் இலங்கைத் தீவில் அமைதியையும், நல்லிணக்கத்தையும், பொறுப்புக்கூறலையும் கொண்டு வருவதுதான் தங்கள் நோக்கம் என்றும், இலங்கை மக்களுடனான தங்கள் உறவை தொடர்ச்சியாக கட்டியெழுப்புவதும் அதில் அடங்கும் என்றும், அதனை விட தங்களுக்கு வேறு எந்த விதமான நோக்கமும் கிடையாது என்றும் குறிப்பிட்டார்.

அந்தப் பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் குறித்து தங்களுக்கு அக்கறை, ஆர்வம் உள்ளது என்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை, கடற்போக்குவரத்து பாதுகாப்பு, அது போன்ற விடயங்கள் குறித்தும் அந்தப் பிராந்தியத்தில் தங்களுக்கு அக்கறை உள்ளது என்றும் அவர் கூறினார்.

இலங்கையை, அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகம், இந்தத்தீர்மானத்தின் மூலம் பிளவு படுத்த முயற்சிப்பதாக இலங்கை அரசாங்க தரப்பினால் குற்றஞ் சாட்டப்படுவதை பிளேக் மறுத்துள்ளார்.

அமெரிக்காவும், சர்வதேச சமூகமும் இலங்கையை மீண்டும் ஒன்றுபடுத்த விளைவதாகவே தான் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை எட்டும் பொருட்டு இலங்கை அரசுக்கும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்கும் இடையில் மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கும், மத்தியஸ்தம் வகிப்பதற்கும் உதவ தென்னாபிரிக்காவோ அல்லது ஏனைய மூன்றாம் தரப்போ முன்வருமானால் அதற்கு பூரண ஒத்துழைப்பு அளிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

போர்க்குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாடில் அமெரிக்கா உறுதியாக இருக்கின்றது. அத்துடன், செப்டம்பர்மாதத்திற்குள் வடக்குத் தேர்தலை நடத்தி,அதிகாரங்களைப் பகிர்வது குறித்து கூட்டமைப்புடன் இலங்கை அரசு பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்று அவர் கூறியுள்ளார். (எ-8)

## குப்பைத் தொட்டியில்...

பினரும், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவருமான குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் மாலையில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தனது கட்டுப்பாட்டில் கீழ் உள்ள நிறுவனங்களுக்கு இலங்கையுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வேண்டாம் என அமெரிக்கா அழுத்தங்களைப் பிரயோகிக்கலாம் என்றும் அவர்கூறினார்.

அதேவேளை, எத்தனையோ தீர்மானங்கள் நிறைவேறினாலும்பரவாயில்லை, தனதுநிலைப்பாட்டில் இலங்கை அரசு உறுதியாக இருக்க வேண்டும். தனக்கு என்ன தோன்று கிறதோ அதைத் துணிவுடன் மகிந்த ராஜ பக்ஷ அரசு செய்யவேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் இந்த அரசு சர்வதேசத்திடம் அடிபணியக் கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-8)

## இனப்பாகுபாடுகளை களை...

நாம் எமது நாட்டுக்குரிய தனித்துவத்தை பேணிப்பாதுகாத்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

உலகம் இன்று நவீன தொழில்நுட்பத்தினூடாக முன்னோக்கிச் செல்கின்ற போது நாங்களும் அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் அதனுடன் இணைந்து செயற்பட வேண்டும். அப்போதுதான் நாம் எதிர்நோக்கும் சவால்களுக்கு முகம் கொடுக்க முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு முன்னெடுப்பு எனும் வேலைத்திட்டத்தின் கீழ் தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக சம்மாந்துறை அல் அஸ்ஹர் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன 'ஈ' கல்விமையக் கட்டடத்தினை நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி, சம்மாந்துறையில் இந்த இலத்திரனியல் கல்விக் கூடத்தை அதாவது இந்த கணனி 'ஈ' மையத்தை திறந்து வைப்பதையிட்டு நான் மிகவும் சந்தோசமடைகின்றேன். இந்தப் பிரதேசத்தில் 30 வருட காலமாக சிவில் நிலைமை இன்மையால் மாணவச் செல்வங்கள் கல்வியை தொடர்வதில் பல்வேறு சிக்கல்களை அனுபவித்துள்ளீர்கள் அது எனக்குத் தெரியும்.

இன்று அந்த நிலைமையை மாற்றியமைத்து இன்று கல்வி கற்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. சிறந்த முறையில் கல்வி கற்கக்கூடிய வாய்ப்புக்கள் கிடைத்துள்ளது.

இறுதியாக அன்பின் பிள்ளைகளே! கல்வி தான் எமது செல்வம். அதுதான் எமது ஆயுதம். நன்றாக கல்வி கற்று முன்னேற வேண்டும். அதுவே எனது ஆசையாகும். உங்களுக்கு என்னுடைய நல்லாசிகள் கிடைக்க ஆசிர்வதிக்கின்றேன் எனத் தெரிவித்தார். (எ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தை சமாளிக்க புத்திக்கூர்மை அவசியம்-ஜே.வி.பி



சர்வதேச சவால்களுக்கு உடலால் அன்றி ; புத்திக் கூர்மையுடன் முகங்கொடுக்க வேண் டிய தருணம் வந்துள்ளதாக ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி லால்காந்த தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் பொறு ப்பு நிறைவடைந்துள்ளதாகவும், வெளிவிவகார அமைச்சின் கடமைகளே தற்போது நிறைவேற்றப்பட வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அகில இலங்கை வங்கிச் சேவையாளர் சங்கத்தின் 8-வது மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே லால்காந்த இந்தக் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையினுள் வேறொரு தனியான ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பதற்கான முயற்சிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

அதில் பாரிய பங்கினை தென்னிந்தியாவின் ஒரு அரசியல் தரப்பினர் வகிக்கின்றனர்.

இதனடிப்படையிலேயே மனித உரிமை கள் பேரவையில் தனிஈழக் கோரிக்கையை நோக்காகக் கொண்டு பிரேரணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றார். (செ-8)

## தமிழீழம் கோரி...

கொண்டுள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் மாலை தனது அறையில் தனிமையில் இருந்தவேளை தனது துப்பட்டாவினால் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இதற்கு முன்னதாகவும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து தமிழகத்தைச் சேர்ந்த மூவர் தீக்குளித்து உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் தமிழக மாணவர்களது போராட்டம் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

அமெரிக்காவும், சர்வதேச சமூகமும் இலங்கையை மீண்டும் ஒன்றுபடுத்த விளைவதாகவே தான் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். (எ-8)

## பொதுநலவாய...

அமர்வுகள் நடைபெறும் எனவும், அமைச்சர்கள் மாநாட்டில் இந்த விடயம் குறித்து பேசப்பட மாட்டாது எனவும் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

2013-ம் ஆண்டில் இலங்கையில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை நடத்த வேண்டுமென ஏற்கெனவே நாட்டுத் தலைவர்கள் தீர்மானித்துள்ளதாகவும், இந்தத் தீர்மானத்தை அமைச்சரவைக் கூட்டத்தில் மாற்றியமைக்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏப்ரல் மாதம் லண்டனில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் அமைச்சர்கள் மாநாட்டில் இலங்கையும் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்துவதன் மூலம் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

துரித கதியில் பரிந்துரைகள் அமுல்படுத்துமாறும், இதற்கு பொதுநலவாய நாடுகள் அமைப்பு பூரண ஆதரவளிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-8)

## இலங்கை...

மெதகொட அபயதிஸ்ஸ தேரர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய மதங்களும், ஏனைய இனங்களும் விஞ்சிவிடாதிருக்க சிங்கள மக்கள் அணி திரள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சிங்களப் குடும்பப் பெண்கள் குறைந்த பட்சம் ஐந்து முதல் ஆறு குழந்தைகளை பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இவ்வாறு குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் பௌத்த மதத்தையும், சிங்கள இனத்தையும்,பாதுகாத்துக் கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சிற்கு அளித்த உத்தரவாதத்தை அகில இலங்கை ஜமயத்துல் உலாமா மீறிச் செயற்பட்டால், மாற்று நடவடிக்கை எடுக்க நேரிடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது கொழும்பு மற்றும் ஏனைய நகரங்களில் திரையிடப்பட்டுள்ள ஸ்ரீ சித்தார்த்த திரைப்படத்தை தடைசெய்ய வேண்டும் எனவும், இந்தப் படத்தை சிங்கள பௌத்தர்கள் பார்க்கக்கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த திரைப்படத்தை தயாரிப்பதற்கு தன்னார்வ தொண்டு நிறுவனமொன்று நிதி உதவிகளை வழங்கியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (எ-8)

## குதிப்பு...

முன்னெடுக்கப்படவுள்ளது.

இதில் ரஜினிகாந்த், கமல்ஹாசன் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

ஐ.நா. மனித உரிமைக் கவுன்சில் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் வெற்றி பெற்றது. ஆனால் இந்தத் தீர்மானத்தால் எந்தப் பயனும் இல்லை. அது நீர்த்துப் போன ஒன்று என்று பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசுக்கெதிராகத் தமிழகத்தில் கல்லூரி மாணவர்கள், வழக்கறிஞர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். தொடர்ந்து இலங்கை அரசைக் கண்டித்து கடந்த செவ்வாய்க்கிழமை தமிழ்நாடு இயக்குநர் சங்கத்தின் சார்பில் சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

இந்நிலையில், எதிர்வரும் ஏப்ரல் 2-ம் திகதி தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார் பில் உண்ணாவிரதப் பேராட்டம் நடத்தப்படவுள்ளது.

சென்னை தியாகராய நகர் அபிபுல்லா வீதியில் உள்ள நடிகர் சங்க வளாகத்தில் நடக்கும் இந்தப் போராட்டத்தில் ரஜினிகாந்த், கமல்ஹாசன் உள்ளிட்ட அனைத்து நடிகர், நடிகைகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

உண்ணாவிரதத்தையொட்டி வரும் 2-ம் திகதி படப்படிப்புக்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்படுகிறது. வெளியூரில் நடக்கும் படப்பிடிப்புக்களையும் இரத்துச் செய்துவிட்டு நடிகர், நடிகைகள் அனைவரும் உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (எ-8)

## போர்க் குற்ற விசாரணை...

மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் 14 படை உயரதிகாரிகள் வகித்த முக்கிய பாத்திரத்தை வெளிப்படுத்திவிடும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போரின் இறுதிக் கட்டத்தில் சுமார் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை கணிப்பிட்டுள்ளது.

இது குறித்து விசாரணைகளை நடத்த வேண்டும் என ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் கடந்த வாரம் சர்வதேச சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாஜிகளுக்கு எதிரான நூரன்பேர்க் விசாரணை மற்றும் கம்போடியா, ருவண்டா, யூகோஸ்லாவியா, சியராலியோன், லெபனான் போன்ற நாடுகளில் இடம்பெற்ற படுகொலைகள் குறித்து ஐ.நா மேற்கொண்ட போர்க் குற்ற விசாரணைகளின்போது, அதற்குப் பொறுப்பான உயர்மட்ட அரசியல் மற்றும் படையதிகாரிகள் நீதியின்முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளனர்.

அதுபோன்று இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டால், இலங்கை படைத் தரப்பின் பிரதம தளபதி என்ற வகையில் விசாரணை செய்யப்படுவோரின் பட்டியலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முதலிடத்திலும், கோத்தபாய ராஜபக்ஷ இரண்டாவது இடத்திலும் இருப்பார்கள்.

அதன்பின்,கூட்டுப்படைகளின் தலைவர் எயார் மார்சல் டொனால்ட் பெரேரா, படைத் தளபதி சரத் பொன்சேகா, கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, விமானப் படைத் தளபதி றொசான் குணதிலக ஆகியோரும் விசாரணைகளுக்கு உள்ளாகக் கூடும்.

அத்துடன், இப்போரின்போது படைத் தரப்பின் 53-வது பிரிவின் தளபதியாக இருந்த பிரிகேடியர் கமால் குணரத்தன,55-வது பிரிவின் தளபதியாக இருந்த பிரிகேடியர் பிரசன்ன சில்வா, 57-வது பிரிவின் தளபதியாக இருந்த பிரிகேடியர் ஜெகத் டயஸ், 58 வது பிரிவின் தளபதியாக இருந்த பிரிகேடியர் சவேந்திர சில்வா, 59-வது பிரிவின் தளபதியாக இருந்த பிரிகேடியர் நந்தன உடவத்த, அதிரடிபடைப் பிரிவு 1 இன் தளபதியாக இருந்த பிரிகேடியர் ரோகன பண்டார, அதிரடி படைப் பிரிவு 2இன் தளபதியாக இருந்த பிரிகேடியர் சத்தியப்பிரிய லியனகே, அதிரடிப் படை பிரிவு 8 இன் தளபதியாக இருந்தவரும், பிரபாகரனைக் கொன்றவருமான கேணல் ஜிவி ரவிப்பிரிய ஆகியோரும்.இந்த விசாரணைக்கு உள்ளாவார்கள்.

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளில் திருப்தி கொள்ளும் வரை சுயாதீனமானதும், நம்பகரமானதும் விசாரணை தொடர்பில் சர்வதேச சமூகம் கோரிக்கை விடுக்கும் என்றும் புதுடில்லி ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர் என இக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)


தற்போது யாழ் நகரில்...

edexcel | UNIVERSITY OF WOLVERHAMPTON

சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்

UK Degree in
- Marketing
- Business Management
- Human Resources Management

- பகுதி / முழு நேர பாடநெறியை தொடரும் வாய்ப்பு
- உங்கள் தொழில் தகைமையை கூட்டிக் கொள்வதற்கான அரிய வாய்ப்பு
- இலகு தவனை கட்டண முறைமை
- பட்டப்படிப்பு வரை யாழ்ப்பாணத்திலேயே நிறைவு செய்ய முடியும்
- நவீன கற்றல் சூழலில் கற்பதற்கு ஓர் அரிய வாய்ப்பு





www.bcas.lk | ISO 9001:2008 CERTIFIED | 14 Years of Trust & Excellence in Higher Education

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Building Careers - Transforming Lives

Macro Ads

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar



ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புகள் மிக விரைவில்... T.P.:021 222 8093
61,Kachcheri-Nallur Road, Jaffna
(றக்கா வீதியும் கச்சேரி -நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்) (2223)



ஓடுகள், செங்கற்கள் விற்பனைக்குண்டு



தரமான ஓடுகள், செங்கற்கள் யாழ், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களுக்கு குறைந்த செலவில் விநியோகம் செய்துதரப்படும்.



பிரணவன் என்ரபிறைசஸ் 0773818799
பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(சங்கிலியன் சிலைக்கு முன்பாக)



CIMA-UK கணக்கியல்-சான்றிதழ் கற்கை நெறிக்கான புலமைப்பரிசில்

மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கற்கை நெறிக்காலம் 3 மாதங்கள். 16 வயதிற்கு மேற்பட்ட எவரும் விண்ணப்பிக்க முடியும். உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கான புதிய பிரிவு மார்ச்31ம் திகதி ஆரம்பமாகின்றது இக் கற்கைநெறியை பயில்வதற்கான 16000 ரூபா வரையிலான புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது. இப் புலமைப்பரிசில் மூலம் CIMA கல்வியை பயில விரும்பும் மாணவர்கள் இல 324 பலாலி வீதி பரமேஸ்வராச்சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில்நுட்ப வளாகத்திற்கு மார்ச்28ம்திகதிக்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.